
கல்கி
திரையுலகைக் கலக்கிய வில்லன்கள்!
ALKI 16-12-90
2.50
னிமா
றப்பிதழ்
"நடிப்பு ஒரு த்ரில்லிங் அனுபவம்..."
—பானுப்ரியா



"ஆரோக்கியமான முழுமையான உடல் வளர்ச்சிக்கு உன்னதமானது காம்ப்ளான்."

–அனிதா

Anita Sood

இந்திய நீச்சல் சாம்பியன்

அனிதா – இன்றைய இளைஞர்களின் நீச்சல் திறமையை வளர்க்க உதவுகிறார். அவர் காம்ப்ளானை சிபாரிசு செய்கிறார் காம்ப்ளான், ஆரோக்கியமான முழுமையான உடல் வளர்ச்சிக்குப் பரிபூரண திட்டமிட்ட உணவாகும்.

நினைவிருக்கட்டும், உங்கள் வளரும் குழந்தைகளுக்கு உன்னதமானது காம்ப்ளான்



23


சத்துணவுகள்

திட்டமிட்ட விகிதங்களில்

காம்ப்ளான்®

திட்டமிட்ட பரிபூரண உணவு

GX/45/213 TML



ரத யாத்திரை

கொஞ்ச நாளாக எங்கே போவதானாலும் ரதத்திலேதான் போகிறேன். (பெட்ரோல் தட்டுப்பாடு வந்து விட்டதல்லவா?) ரதம் என்றால் அசல் ரதம். டி. வி. மகாபாரதத்திலே காண்பித்த சோனியான குச்சி ரதம்.

முதலில் நாலு குதிரைகள்தான் போட்டிருந்தேன். ஆனால் நாலுக்குள்ளும் ஏகத் தகராறு வந்து, ஒவ்வொன்றும் ஒரு திக்குக்கு இழுத்துக் கொண்டு சென்றது. சவாரி செய்கிற என் பாடு கஷ்டமாயிருந்தது. ஆகவே ஒரே குதிரை போதும் என்று மற்ற மூன்று குதிரைகளைக் கிடைத்த விலைக்கு விற்று விட்டேன். அப்புறம்தான் தவறு புரிந்தது. ஒரே ஒரு சோனிக் குதிரை பூட்டியதற்குப் பெயர் ரதம் எப்படி ஆகும்? 'குதிரை வண்டி' என்று எல்லோரும் கேலி செய்தார்கள்.

அதனால் நிறையப் பணம் செலவழித்து மறுபடி ஒரு குதிரை வாங்கினேன். கட்டுமஸ்தான குதிரை. இந்தக் குதிரைதான் ரதத்தை இழுக்கும். ஆனால் சோனிக் குதிரையையும் சவாரியில் கட்டியிருப்பேன். கணக்குக்கு இரண்டு குதிரை இருப்பதால் எனது வண்டியை ரதம் என்றே பெருமையாக அழைத்தேன்.

காரை விட ரதம் பலவகையில் கௌரவமானது. தெரியாமலா அரசியல் தலைவர்கள் ரத யாத்திரை செய்கிறார்கள்? ஆனால் அவர்கள் ரதம் புலித்தோல் போர்த்திய பசு மாதிரி. உள்ளே கார், வெளியே மட்டும் சினிமா செட்டிங் போலத் தேர் அமைப்பு.

என்னைக் கேட்டால் அரசியல் தலைவர்களும் கட்சிப் பிரமுகர்களும் அசலான குதிரைகள் பூட்டிய ரதத்திலேயே என் மாதிரி யாத்திரை செய்யலாம். இதனால் நாட்டுக்கு நிறைய நன்மைகள் கிட்டும்.

தேர்தல் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். தலைவர்கள் ஒரு நாளைக்குக் காரில் போனால் இருபது முப்பது ஊர்கள் கவர் பண்ணி பிரசாரம் செய்து விடுவார்கள். அசல் ரதத்திலே போனால், குதிரைகளின் களைப்புக் காரணமாக — நாலைந்து ஊர்களுக்கு மேல் போக முடியாது. பெட்ரோல் பங்க் மாதிரி வழியில் அங்கங்கே குதிரை பங்க்குகள் இல்லாததால் சட்சட்டென்று குதிரைகளை மாற்றிக் கொண்டு தலைவர்கள் — ஒரே நாளில் பல ஊர்களுக்குச் செல்ல முடியாது.

இதனால் என்ன நன்மை என்கிறீர்களா? தலைவர்கள் அவிழ்த்து விடும் பொய்ப் பிரசாரங்கள், தற்பெருமைகள், போலி வாக்குறுதிகள் குறைந்த அளவில் மக்களிடையே பரவும்.

வேறு பல நன்மைகளும் உண்டு.

பா.ரா.

குதிரைகள் இழுக்கிற ரதம் காடு முரடான, கிராமத்து மேடும்பள்ளமுமான ரஸ்தாக்களில் செல்லும் போது தூக்கித் தூக்கிப் போடும். பிரயாணம் செய்யும் தலைவருக்குக் கிராமத்துச் சாலைகளின் அவல நிலை பற்றி ஒரு நேரடி ரிப்போர்ட் கிடைக்கும். (கிடைத்து என்ன செய்யப் போகிறார் என்பது வேறு விஷயம்.)

ரதத்தை ஏ.ஸி. செய்து கொள்ள முடியாது. (பீஷ்மர் செய்து கொண்டாரா? துரியோதனன் பண்ணிக் கொண்டானா? அர்ஜுனன்தான் ஆசைப்பட்டானா?) வெய்யிலில் வேட்பாளர் காய்ந்தாரானால் 'போதும்டா சாமி தேர்தல், எவனோ ஜெயித்து எவனோ ஆண்டு கொள்ளட்டும்' என்று பலர் வெளியேறி விடுவார்கள். ஒரே சமயம் ஒரு தொகுதிக்கு ஐம்பத்து மூன்று வேட்பாளர்கள் நின்று வாக்குச் சீட்டின் நீளத்தை அதிகப்படுத்தி, ஆளுயர வாக்குப் பெட்டிகள் தயாரிக்கும் செலவெல்லாம் குறையும்.

ரத யாத்திரை முறை மனித குலத்துக்கு மட்டுமல்ல; பிராணி இனத்துக்கும் பெரும் பலன் தரக்கூடியது. நாட்டில் நல்ல குதிரைகளுக்கு கிராக்கி ஏற்படும். பந்தயத்துக்கு ஓடும் பக்காவான குதிரைகளைத் தங்கள் செல்வாக்கை நேரடியாகவோ மறைமுகமாகவோ பிரயோகித்துத் தலைவர்கள் தங்கள் ரதத்துக்குப் பூட்டுவார்கள்.

இதனால் ரேஸ் குதிரைகளுக்கு நாடு நகரங்களைச் சுற்றிப் பார்க்க ஓர் அருமையான வாய்ப்பு. இல்லாவிட்டால் அந்த ஜீவன்கள் பந்தய மைதானத்தை மட்டும் தானே யாரோ சம்பாதிப்பதற்காக, அல்லது யாரோ நஷ்டப்படுவதற்காகச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும்.

ரதம் கொஞ்சம் சிறிசானதால் பரிவாரங்கள் ஓரளவுதான் தலைவருடன் செல்ல முடியும். ரொம்பப் பேர் 'சிங்—சக்' போடத் தலைவரோடு ஒட்டிக் கொண்டால் குதிரை லோடு இழுக்க மறுத்துப் படுத்து விடும் அபாயமுண்டு. ஆகவே தலைவர், தனக்கு வேண்டிய சிலரை மட்டுமே தேர்ந்தெடுத்து ரதத்தில் தன்னோடு உட்கார வைத்துக் கொள்வார். உட்கட்சிப் பூசல் தேர்தலுக்கு முன்னதாகவே வரக்கூடிய பொன்னான வாய்ப்பு உருவாகும். அடிதடி ரகளைகளும், எதிர் எதிர் அறிக்கைகளும் பெருகி, மோதி ஒருவழியாக, தேர்தலுக்கு முன்னதாகவே தெளிவு ஏற்பட்டு விடும். தேர்தலுக்குப் பிறகு கோஷ்டி பூசல், காலை வாரி விடுதல் அவ்வளவாயிராது.

ரத யாத்திரையால் உயிருக்கு விளையும் ஆபத்தும் குறைவு.

எப்படி?

பெரும்பாலும் பிரசார வேன்கள் கவிழ்வதும் மோதுவதும் ராத்திரி வேளைகளில் தான். குதிரை பூட்டிய ரதத்தில் செல்வதானால் ராத்திரி நேரத்தில் செல்வது முடியாது. ரதத்தில் தீவட்டிகளைக் கொளுத்தி வைத்துக் கொண்டு ராத்திரியில் யாத்திரை செய்யப் பகுத்தறிவுள்ள எந்தத் தலைவரும் மனம் ஒப்ப மாட்டார்.

தேர்தலில் நின்று வெற்றியடையும் முன்பாகவே 'தீவட்டிக் கொள்ளைக்காரன்' என்ற பட்டத்தை அடைய எந்த அரசியல் பிரமுகரும் விரும்ப மாட்டார்.

இப்படியாக — அசல் ரத யாத்திரையில் எவ்வளவோ நன்மைகள் உண்டு. ஆனால் அரசியல்வாதிகள் மற்ற விஷயங்களில் வேஷம் போடுவது போல் இந்த ரத யாத்திரையிலும் போலியாக நடந்து கொள்கிறார்கள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது போல உள்ளே வசதியான கார் அமைத்துக் கொண்டு வெளியே ரதம் மாதிரி அலங்கரித்துக் கொண்டு பயணிக்கிறார்கள்.

இப்போது தமிழக முதல்வரும் ரத யாத்திரையாக ஏழை எளியவர்களின் குடியிருப்புப் பகுதிகளுக்குப் போகப் போகிறாராம். நமது முதல்வராவது குதிரைகள் பூட்டிய அசல் ரதத்தில் யாத்திரை செய்வாரா பார்க்கலாம்!

உடம்பு நெளித்த தொலைபேசி!

"பதினைந்து நாட்களாகக 'கோமா'வில் கிடந்த தொலைபேசி ஒரு வழியாய் உடம்பு நெளித்து மூச்சு விட்டது" என்று தொடங்கி நகைச்சுவைக் கட்டுரை (கதை அல்ல) ஒரு பக்க அளவில் எழுதுங்கள். முதல் பரிசு ரூ. 50. பிரசுரமாகும் நகைச்சுவைச் சிதறல்களுக்கு ஆறுதல் பரிசு.

முடிவு தேதி: 22. 12. 90.

அதிகபட்ச முதல் பரிசு பெறும் மாணவருக்குப் பொன் விழா மேடையில் ரூபாய் 2500 சிறப்புப் பரிசு. கல்லூரி முகவரி அவசியம் குறிப்பிட வேண்டும்.

கல்கி பொன்விழா பரிசுத் திட்டம்

கல்லூரி மாணவர் கட்டுரைப் போட்டி

ரூ.250 'டிக்' போடலாம்; பரிசு தட்டலாம்!

சினிமா உங்களுக்குப் பொழுது போக்கு எனில் அதற்கு ஏற்ப இதுவும் ஒரு தமாஷ் போட்டி தான். கீழே தரப்பட்டுள்ள கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் நாலு விடைகள். ஒன்றை மட்டும் (✓) டிக் செய்து அனுப்புங்கள். திரை உலகப் பிரபலம் ஒருவர் இதே போல் டிக் செய்து கொடுத்துள்ள ஒரு விடை இங்கே காரியாலயத்தில் 'ஸீல்' செய்து வைக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 26 முடிவு தேதி. டிசம்பர் 27ந் தேதி உங்கள் விடைகளும் பிரபலத்தின் விடைகளும் ஒப்பு நோக்கப்படும். அதிகபட்சம் யாருடைய விடைகள் ஒத்துப்போகின்றனவோ அவருக்கு ரூ.250 பரிசு! ஒருவருக்கு மேல் என்றால் பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். உறை மேல் "சினிமா போட்டி" என்று குறிப்பிடவும்.

1. கமலின் நடிப்புக்குச் சிறந்த உதாரணம்?

அ) பதினாறு வயதினிலே
ஆ) மூன்றாம் பிறை
இ) ராஜபார்வை
ஈ) நாயகன்

2. இளைய தலைமுறைச் டைரக்டர்களில் டாப்?

அ) பார்த்திபன்
ஆ) விக்ரமன்
இ) வஸந்த்
ஈ) ஆர். வி. உதயகுமார்

3. அஞ்சலியில் மிகவும் ரசிக்கத்தக்க அம்சம்?

அ) ஷாம்லியின் நடிப்பு
ஆ) மணிரத்தினத்தின் டைரக்ஷன்
இ) மது அம்பட்டின் கேமரா
ஈ) இளையராஜாவின் இசை

4. சமீபகால ஹிட்டான பாட்டுகளில் சூப்பர் ஹிட்?

அ) மண்ணில் இந்தக் காதல்
ஆ) அஞ்சலி... அஞ்சலி...
இ) சுந்தரி நீயும்... சுந்தரன் நானும்...
ஈ) பச்சை மலைப் பூவு...

5. வில்லன் என்றவுடன் சட்டென நினைவுக்கு வருவது?

அ) வீரப்பாவின் அட்டகாசச் சிரிப்பு
ஆ) நம்பியாரின் மின்னல் வேக வாள் வீச்சு
இ) எம். ஆர். ராதாவின் வசனப் பாணி
ஈ) அசோகனின் நக்கல் நகைச்சுவை

6. சினிமாவில் பேசப்பட்டு மிகவும் பாபுலரான வசனம்?

அ) இது எப்படி இருக்கு?
ஆ) ஜூ ஜூ பி...
இ) தகடு... தகடு
ஈ) எனக்கொரு உண்மை தெரிஞ்சாகணும்

7. பாக்யராஜின் படங்களில் சிறந்த திரைக் கதை கொண்டது?

அ) மௌன கீதங்கள்
ஆ) முந்தானை முடிச்சு
இ) அந்த ஏழு நாட்கள்
ஈ) அவசர போலீஸ் 100

8. மனம் விட்டு ரசிக்கத்தக்க நகைச்சுவைக் காட்சி?

அ) திருவிளையாடல் நாகேஷ்
ஆ) மாந்தோப்புக் கிளியே... சுருளிராஜன்
இ) சிந்துபைரவி ஜனகராஜ்
ஈ) கரகாட்டக்காரன் கவுண்டமணி — செந்தில்

பெயர்: ....

விலாசம்: ....

....

....

திரையுலகைக் கலக்கிய வில்லன்கள்



* நம்பியார்



* நாசர்



* அசோகன்

வில்லன் என்றாலே சட்டென நினைவுக்கு வருகிறவர் பி. எஸ். வீரப்பாதான். கொடூரமான முகபாவம். கட்டுமஸ்தான உடலமைப்பு, தொடர்ச்சியான இடிச்சிரிப்பு இந்த மூன்றும் அவருடைய தனி முத்திரைகள். "தமிழ் திரையுலகைக் கலக்கிய முதல் வில்லன் வீரப்பாதான் என்றாலும் கூட, அவருக்கு முன்பாகவும் திரையுலகில், வில்லன்கள் பலர் இருந்திருக்கிறார்கள்" என்கிறார் சென்னை லயோலா கல்லூரி திரை இயல் பேராசிரியர் ராமு.

எம்.கே. ராதா நடித்த "அனாதைப் பெண்" படத்தில், வில்லன் யார் என்று அறிந்தால் வியப்படைவீர்கள். பி.யு. சின்னப்பாதான் வில்லன்! அப்புறம் அவர் ஹீரோவாகி விட்டார்.

வில்லன் என்றாலே பயங்கரமான தோற்றமும் கடூரமான குரலும் கொண்டு, அடிதடிச் சண்டையில் இறங்க வேண்டும் என்கிற கொள்கையை முதன் முதலில் உடைத்த பெருமைக்கு உரியவர்கள் எம்.ஆர். ராதாவும், டி.எஸ். பாலையாவும் தான். வசன உச்சரிப்பில், தமக்கே உரிய ஏற்ற, இறக்க பாணியினைக் கடைப்பிடித்து, வில்லன் கேரக்டர்களை அனாயசமாய்ச் செய்து, நகைச்சுவையையும் வில்லத்தனமான நடிப்பையும் ஒரு சேர வழங்கியவர் எம்.ஆர். ராதா. தமது மேடை நாடகங்களில் ஹீரோவாய் நடித்தாலும் கூட, சினிமாவில் வில்லனாய் நடிக்கத் தயங்கவில்லை எம்.ஆர். ராதா.

நல்லவன் போல் நடித்து, சூழ்ச்சி பண்ணுகிற குணச்சித்திரப் பாத்திரங்களின்



* சத்யராஜ்

முக்கியத்துவம் குறைந்து, ஹீரோ — வில்லன் நேரடி மோதலுக்கே அதிக முக்கியத்துவம் தரப்பட்ட புதிய சகாப்தம் தொடங்கியது. எம்.ஜி.ஆர்., சிவாஜி காலத்தில், நம்பியார், மனோகர், அசோகன் ஆகிய மூவரும் தங்கள் இமேஜ் பற்றிக் கவலைப்படாமல், படத்துக்குப் படம் எம்.ஜி.ஆரிடம் உதை வாங்கியதானது எம்.ஜி.ஆரின் மதிப்பு சமுதாயத்தில் உயரப் பல காரணங்களுள் ஒன்று.

வெண்கலக்குரல் வில்லன் என்று குறிப்பிடப் படுபவர் ஆர்.எஸ். மனோகர். ஆஜானுபாகுவான தோற்றம் கொண்ட ஆர்.எஸ். மனோகர், முதன் முதலில் 'தாயுள்ளம்' என்ற படத்தில் கதாநாயகனாகத்தான் அறிமுகமானார். அதில் வில்லனாக நடித்தவர் ஜெமினி கணேசன். பின்னர் ஜெமினி ஹீரோவாகிவிட, மனோகர் வில்லன் ஆகிவிட்டார். வில்லன் நடிப்பு பற்றிக் கூறுகையில், "ஊட்டியில் ஒரு படப்பிடிப்பில் இருந்தபோது, ஹீரோவை நெருங்கி ஆட்டோகிராப் வாங்கிக் கொண்டு அவரோடு போட்டோ எடுத்துக் கொண்ட சில கல்லூரி மாணவிகள், என்னைப் பார்த்தவுடனேயே அஞ்சி ஓடிவிட்டார்கள்" என்கிறார் சிரித்தபடி! சாதாரணமாக நாம் வில்லன்கள் என்று கருதும் கதாபாத்திரங்களைத் தமது நாடகங்களில் ஹீரோக்களாகச் சித்திரித்துக் காட்டிய பெருமை மனோகருக்கு உண்டு.

நம்பியார், மனோகர் இவர்களின் பாணியிலிருந்து மாறுபட்ட வில்லனாகத் தோன்றினார் அசோகன். செயலில் வில்லத் தனம் இருந்தால் கூட, வசனத்தில் நகைச்சுவை மிளிரும்படி பேசி ரசிகர்களைக் கவர்ந்தார். இயக்குனர் டி.ஆர். ராமண்ணா 'நான்' படத்தின் வித்தியாசமான மொட்டைத் தலைவில்லன் பாத்திரத்துக்கு அசோகனைப் போடப் போவதாய்ச் சொன்ன கால் மணி நேரத்தில், அசோகன் தலையை மொட்டை அடித்துக் கொண்டு வந்து நின்றார் என்பது, தொழில் பால் அவர் கொண்டிருந்த மரியாதையைக் காட்டுகிறது.

'**ஹீ**ரோ வில்லன்' என்பது இப்போது



மனோகர்

புதிதாகத் தோன்றியுள்ள சொற் தொடர். 'மூன்று முடிச்சு' ரஜினிகாந்த். 'நூறாவது நாள்' சத்யராஜ். இவர்கள் இருவருமே தங்களது பிரத்தியேக ஸ்டைல் மூலம் வில்லனிலிருந்து, கதாநாயக அந்தஸ்துக்கு உயர்ந்து விட்டனர். இவர்களே 'வில்லன்களின் குணாதிசயங்களைக் கொண்ட ஹீரோக்களாய் அவ்வப்போது தோன்றுவதும், அவற்றை ரசிகர்கள் ஏற்றுக் கொள்வதும் இன்று நடை முறை.

"இன்று அட்டகாச வில்லன்களுக்கு அவசியமே இல்லை" என்கிறார் சத்யராஜ். "கைத் துப்பாக்கிகளோடு, மெஷின் துப்பாக்கி, வெடிகுண்டு போன்றவையும் இப்போது சினிமாச் சண்டைகளில் தாராளமாகப் பயன்படுத்துவதால், வெகு எளிதாய்க் காரியம் முடிந்து போகிறது. எனவே ஸாப்டான வில்லன்களே போதும்!"

சமீபகாலத்தில் மிக அதிகமாக வில்லன் பாத்திரங்களில் நடிப்பவர் நாசர். திரைப் படக் கல்லூரியில் நடிப்புப் பயிற்சி பெற்றவர். சினிமாத் துறை பற்றிய இவருடைய அறிவும் ஆர்வமும் பிரமிக்கவைப்பது. ஆனால் தற்போதைய படங்களில் இவர் செய்வது வழக்கமான வில்லன் ரோல்கள்! "என்ன செய்வது? இது காம்ப்ரமைஸ் தான்," என்கிறார் கேஷுவலாய். "வில்லன் என்ற பெயரில் இங்கே வீரம் கொச்சைப் படுத்தப்படுகிறது!" என்கிற நாசரின் கருத்து சிந்தனைக்குரியது.

— எஸ். சந்திரமௌளி

படங்கள் உதவி:

பிலிம் நியூஸ் ஆனந்தன்

இக்கட்டுரைக்கு யோசனை வழங்கிய வாசகர்: தாயு. ஆண்டாள், திருச்சி — 4.

• டி. எஸ். பாலையா



• எம். ஆர். ராதா



சினிமா உலகின் விநோத நம்பிக்கைகள்



* ஸ்ரீதர்

பல வருடங்களுக்கு முன்னர் டைரக்டர் ஸ்ரீதர் 'அன்று சிந்திய ரத்தம்' என்ற பெயரில் படம் எடுத்துக் கொண்டிருந்தார். படவுலகில் பலர் அவரிடம், 'என்ன ஸார்... சிந்திய ரத்தம்..' என்றெல்லாம் பெயர் வைத்திருக்கிறீர்கள்... சரியில்லையே ஸார்' என்று சொல்லவும், புதுமைகள் பல செய்த ஸ்ரீதரே தம் படத்துக்குப் பெயரை மாற்றி விட்டார். அந்தப் படம், பின்னர் 'சிவந்த மண்' என்ற பெயரில் சக்கைப் போடு போட்டது. இந்த நிலையில், நான்கு பேரை பாகஸ்தர்களாகக் கொண்ட ஒரு சினிமா கம்பெனி, டைரக்டர் ஸ்ரீதரிடம் 'அன்று சிந்திய ரத்தம்' பட டைட்டிலைத் தங்களுக்குக் கொடுத்து விடும்படி கேட்டுக் கொண்டது. அவரும் கொடுத்து விட்டார். ஆனால் படம் வெளிவருவதற்குள் பாகஸ்தர்கள் நான்கு பேரும் சண்டை போட்டுக்கொண்டு கம்பெனியை மூடி விட்டார்கள்.

உடனே, சினிமா உலகில் என்ன பேசிக் கொண்டார்கள் தெரியுமா? 'அன்று சிந்திய ரத்தம்' டைட்டிலை அவர்கள் வாங்கினார்களே அன்றே தெரியும், அவர்கள் கம்பெனியைத்தி மூடிக்கும்னு!'

●● கதை பற்றிக் கலந்து பேச வேண்டும் என்றால் உடனே குறிப்பிட்ட ஹோட்டல்களில் மட்டுமே அறை புக் செய்யச் சொல்லும் டைரக்டர்கள் இருக்கிறார்கள். பாரதிராஜாவுக்கு அட்லாண்டிக் ஹோட்டலில் அறை போட்டால்தான் மூட் வரும். பாக்யராஜும், கலைமணியும் பாம்குரோவுக்குப் பழக்கப்பட்டவர்கள். பஞ்சு அருணாசலத்துக்கு உட்லண்ட்ஸ். 'படத்துக்கு என்ன பெயர் வைக்கலாம்' என்பது பற்றியும் நீண்ட நாட்கள் விவாதம் நடக்கும். எண் ஜோசியப்படி கூட்டுத்தொகை எட்டு வரும்படி எந்தத் தலைப்பும் வைக்கப்படக் கூடாது என்பது சினிமா உலகின் அழுத்தமான நம்பிக்கை. இதை ஆரம்பித்து வைத்தவர், ஸ்ரீதர். அவர்தாம், 'கல்யாணப் பரிசை' 'கல்யாண பரிசு' என்று ஒற்றெழுத்தை முதன் முதலில் வெட்டித் தள்ளினார்! ளை, ணை, லை போன்றவற்றுக்கு இன்னும் திரை உலகில் அங்கீகாரம் கிட்டவில்லை!

* பாக்யராஜ்



* இளையராஜா



●● இயற்கைக்கு எதிரான விஷயத்தைப் படத் தலைப்பாக வைத்தால் ஓடாது என்ற நம்பிக்கையும் உண்டு. அந்த மூடநம்பிக்கையை உடைத்தெறிந்து நன்றாக ஓடிய படம் 'ஒரு தலை ராகம்.' பின்னர் 'ஒரு கை ஓசை.' இருப்பினும் டி. என். பாலு எடுத்த படமான 'மேற்கே உதிக்கும் சூரியன்' தியேட்டர்களுக்கே வரவில்லை என்பதோடு அந்தப் படம் முடியும் முன்பே, பாலு இறந்து விட்டார். அதற்கு வழக்கம் போல சினிமா உலகம் 'அந்த மனுஷன் டைட்டிலை இப்படி வைக்கும்போதே தெரியும்' என்று வம்பளந்தது. இதே நிலைதான் 'நதியைத் தேடி வந்த கடல்' படத்துக்கும் ஏற்பட்டது!

●● நல்ல சகுனங்களைத் தெரிவிக்கும் வார்த்தைகளாகத்தான் முதன் முதலில் கேமரா முன் பேசுகிற வசனங்கள் இருக்கும். அவை படத்தில் வரலாம்; வராமலும் போகலாம். அது பற்றிக் கவலையில்லை. தேவர் படங்களில் முதல் வசனம் 'வெற்றி வெற்றி' என்றுதான் எடுப்பார்கள். வெற்றிப் படமான 'பதினாறு வயதினிலே' பாரதிராஜாவுக்கு முதல் படம். அந்தப் படத்தில் முதல் வசனம் 'ஆத்தா நான் பாஸாயிட்டேன்!'

●● முதல் டேக்கில் நடிகரோ அல்லது நடிகையோ சரியாக நடிக்கா விட்டாலும், 'டேக்' ஓ. கே. செய்யப்படும். முதல் நாள் எந்த இடத்தில் ஷூட் செய்தார்களோ, மறு நாள் அதே இடத்தில் ஒரு ஷாட்டாவது எடுக்க வேண்டும் என்பதும் சினிமா உலக செண்டிமெண்டில் ஒன்று.

●● இன்னும் சிலர் ஒரு குறிப்பிட்ட காட்சியை, முதல் காட்சியாகவோ, அல்லது படத்தில் ஏதாவது ஓர் இடத்தில் வர வேண்டும் என்பதிலோ மிகவும் குறியாக இருப்பார்கள். சங்கிலி முருகன், தாம் தயாரிக்கும் படங்களில் கன்றுக் குட்டி பால் குடிப்பது போல ஒரு காட்சியை எப்படியாவது காண்பித்து விடுவார். பீம்சிங் படங்களில் ரயில் வேகமாக ஓடுவது போன்ற ஒரு காட்சி இடம்பெற்று விடும். பாரதி ராஜா ஒரு காட்சியில் சூரியகாந்திப் பூவைக் காட்டி விடுவார்.


●● இன்னும் சிலர், என்னென்ன காட்சிகள் வரக் கூடாது என்பதிலும் தெளிவாக இருப்பார்கள். ஏ. வி. மெய்யப்ப செட்டியார் தமது படங்களில், ஒற்றைப் பனை மரம் வருவது போல் காட்டவே மாட்டாராம். பொதுவாகவே சினிமா ஷூட்டிங்கில் யாராவது ஒருவர் இறப்பது போல் படமாக்கப்பட்டால், இறந்தது போல் நடிக்கும் அந்த நபரே சிரித்துக்கொண்டு எழுவது போலவும் படமாக்கப்படும். பிறகு எடிட்டிங்கில் அவர் சிரித்துக் கொண்டு எழுவது வெட்டப்படும்.

●● படத் தயாரிப்பாளரோ, டைரக்டரோ தங்கள் படங்களுக்கு ராசியான பெயர் வைத்துக் கொள்வது ஒரு பக்கம் இருக்க, முதலில் தங்கள் பெயரை எண் கணித முறையில் வைத்துக் கொள்வார்கள். எம். ஏ. காஜா என்று ஒரு டைரக்டர். அவர் அப் பெயரை விட்டு விட்டு, எண் கணித முறைப்படி இளையபாரதி என்று வைத்துக் கொண்டார். பின்னர் அதுவும் சரியில்லாததால் திருமுருகன் என்று வைத்துக் கொண்டார். பிறகு அதுவும் சரியில்லையென்று

* ஏ. வி. மெய்யப்ப செட்டியார்



* பாரதிராஜா





* நதியா

இப்போது ஹாஜா மொய்தீனாக வலம் வருகிறார்.

●● அதிர்ஷ்ட எண் செண்டிமெண்டை ஹோட்டலில் அறை போடும் போதும் விட்டு விட மாட்டார்கள். நதியா, நடிக்க வந்த புதிதில், ஒரு ஹோட்டலில் 501ம் அறையில் தங்கிக் கொண்டு படங்களில் நடித்துக் கொண்டிருந்தார். வசதி ஏற்பட்டதும் சொந்த வீடு வாங்கி வசிக்க ஆரம்பித்தார். அந்தச் சமயத்தில் மார்க்கெட் விழ ஆரம்பித்தது. நடிகைக்கு ஒன்றும் புரியவில்லை. மீண்டும் 501க்கே போய் வசிக்க ஆரம்பித்தார். அப்புறம் பழையபடி படங்கள் வர ஆரம்பித்தனவாம்! இந்தச் சம்பவத்தை நமக்குச் சொன்ன சினிமா பத்திரிகையாளர் ஒருவர், ''அந்தம்மா உபயோகிப்பது கூட 501 பார் சோப் தானாம்'' என்று ஜோக்கடித்தார்!

●● இளையராஜாவைத் தொடர்புபடுத்தியும் ஏராளமான செண்டிமெண்டுகள் உள்ளன. அவர் யாருடனும் கைகுலுக்குவதில்லை. காரணம், கைகுலுக்கும் போது வித்தைகளும் செல்வமும் போய் விடும் என்பதுதானாம்! அவர் குத்துவிளக்கேற்றும் படங்கள் ஓடுவதில்லையாம். ஆனால் இளையராஜா டைட்டில் பாட்டுப் பாடினால் படம் ஓகோவென்று ஓடுமாம். ''மிகுந்த கஷ்டப்பட்டு 'அன்னக்கிளி' படத்துக்கு இசையமைக்கும் வாய்ப்பைப் பெற்ற இளையராஜாவின் முதல் நாள் பாடல் பதிவின் போது பவர் கட். அது தான் போகட்டும் என்றால், முதல் பாடலே டேப்பில் பதிவாகவில்லை! இப்படி பயங்கரமான அபசகுனங்கள். ஆனால் நடந்தது என்ன? அந்தப் படத்தின் பாடல்கள் சூப்பர் ஹிட்! அது மட்டுமல்ல. இன்னமும் வெற்றிக் கொடி நாட்டி வருகிறாரே இளையராஜா!'' என்று சொல்லி சினிமா செண்டிமெண்டுகளுக்கு ஒரு பலத்த சவுக்கடி கொடுத்தார் 'பிலிமாலயா' எம். ஜி. வல்லபன்.

— ப்ரியன்.

"சினி சிரிப்ஸ்!"

தயாரிப்பாளர்: எதுக்காக டைரக்டர் வீட்டு வாசல்ல வாரிவில ஆளுங்களைக் கூட்டிக்கிட்டு வந்து கும்பலா நிற்க வைச்சிருக்கீங்க?

உதவி டைரக்டர்: அவர்தானே நேத்திக்கு என்கிட்ட 'ரஷ்' பார்க்கணும்னு சொன்னாரு!



மகன்: பக்கத்துத் தியேட்டருல குடும்பத்தோட பார்க்க வேண்டிய படம் ஒண்ணு வந்திருக்குப்பா...!

தந்தை: அதுக்காக ஊருக்குப் போயிருந்த எங்க எல்லோரையும் தந்தி கொடுத்து வரவழைக்கணுமா என்ன?





டைரக்டர்: என்னய்யா பேஜாராப் போச்சு, எத்தனை எடுத்துச் சொல்லியும் மணமகளா நடிக்கிற ஹீரோயின் வலது காலை எடுத்து வச்சு வர்றதுக்குப் பதில் இடது காலை எடுத்து வச்சு வர்றாங்க?

உதவியாளர்: "மிலிட்டரிக்காரர் மகளாச்சே... முதல்ல லெஃப்ட்டாம், அப்புறம்தான் ரைட்னு சொல்லிட்டாங்க!

— மாடக்கண்ணு.

தயாரிப்பாளர்: இந்தப் படம் வெளி வந்தாத் திருப்பதிக்கு நடந்தே வர்றேன்னு வேண்டிக்கிட்டு இருக்கேன்...!

டைரக்டர்: திருப்பதிக்கென்ன...? இனிமே எல்லா இடத்துக்குமே நீங்க நடந்துதான் போகப் போறீங்க...!

— வி. ஒ. குமார்.



படிக்க வேண்டிய சினிமா!



* மிருணாள் சென்

சினிமாத் துறையில் நுழைய ஆர்வமுள்ளவர்களுக்கு சினிமா சம்பந்தப்பட்ட நூல்கள் உதவக்கூடும். அவர்களுக்குச் சில நூல்களை அடையாளம் காட்டுகிறோம்.

நேஷனல் புக் டிரஸ்ட் வெளியிட்டுள்ள 'திரைப்படங்களின் கதை'' என்ற நூல் ஒரு திரைப்படம் உருவாகின்ற கதையைத் தொழில் நுட்ப விளக்கத்தோடு எளிமையாகக் கூறுகிறது. இந்த நூல் கே. ஏ. அப்பாஸ் எழுதியதின் தமிழாக்கம்.

அறந்தை நாராயணன் எழுதிய ''தமிழ்ச் சினிமாவின் கதை'' ''சுதந்திரப் போரில் தமிழ்ச் சினிமா'' என்ற இரு நூல்களையும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியிட்டுள்ளது. ''தமிழ்ச் சினிமாவின் கதை'' என்ற நூல் சினிமா தோன்றியது முதல் இன்று கமல், ரஜினி வரை சொல்லுகிறது.

''திரைப்படம் தயாரிப்பது எப்படி?'' ''நடிகர்களுக்கு ஒரு கையேடு!'' என்ற இரு நூலகளையும் திரைப்படக் கல்லூரிப் பேராசிரியர் மதன் கேப்பியெல் எழுதியுள்ளார். இதே போல் பி.சி. கணேசன் ''நீங்கள் நடிகராக என்ன செய்ய வேண்டும்?'' என்ற நூல் எழுதியுள்ளார். இம்மூன்று நூல்களும் நர்மதா பதிப்பகத்தின் பிரசுரங்கள்.

டைரக்டர் ப. நீலகண்டன் தம்முடைய திரைப்பட அனுபவங்கள் மூலம் திரைப்படத் துறையைப் பற்றி ''வண்ண வண்ணக் கனவுகள்'' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரைகளை வானதி பதிப்பகம் மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளது.

சினிமாவுக்கு எப்படித் திரைக்கதை எழுத வேண்டும் என்பதைப் பற்றி ஷாட் பிரிப்பது உட்பட ''எழுதுங்கள் திரைக்கதை'' என்று ஒரு நூல் எழுதியுள்ளார், பா. கலைக்கோவன். இது 'பைலட் பப்ளிகேஷன்ஸ்' பிரசுரம்.

பல மொழிப் படங்களைப் பற்றி விமர்சனப் பார்வையுடன் ''சினிமா சில பார்வைகள்'' என்ற நூலை சிவ. சுப்பிரமணியன் எழுதியுள்ளார். இதனைத் தமிழ்ப் புத்தகாலயம் பதிப்பித்துள்ளது.

''சினிமா கோட்பாடு'' என்ற நூல், பேல பெலாஸ், ஹங்கேரிய மொழியில் எழுதியது. இது பல்வேறு உலக மொழிகளில் பெயர்க்கப்பட்டுத் தமிழ் மொழியிலும் வந்துள்ளது.

மிருணாள் சென் எழுதிய ''சினிமா — ஒரு பார்வை''; திரைப்பட இயக்குநர் அந்த்ராய் தார்க்கோவ்ஸ்கியின் ''மக்களைத் தேடும் கலைஞன்''; ''ரித்விக் கடக்கின் சினிமா''; எம். சிவக்குமார் எழுதிய ''சார்லி சாப்ளின்'' ஆகிய நூல்களை 'சென்னை புக்ஸ்' வெளியிட்டுள்ளது.

எல்லாத் துறைகளிலும் புகுந்து புறப்படும் மணிமேகலை பிரசுரம் சினிமாத் துறையை விட்டு வைக்குமா என்ன! ''திரையுலகில் நுழைபவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள்!''; ''நீங்கள் நடிகராக நடிகையாகச் சில யோசனைகள்''; ''சினிமா வளர்ந்த வரலாறு''; ''உலகப் புகழ் பெற்ற ஆங்கிலப் படங்கள்''; ''தமிழ் சினிமா — வினா விடை'', ''சினிமா மற்றும் வீடியோ பற்றிய சட்டங்கள்'', எம். ஜி. ஆர். சிவாஜி, ரஜினி, கமல், பாலசந்தர், பாரதிராஜா, பாக்யராஜ் இவர்களின் வரலாறுகள்... என்று ஒரு டஜனுக்கும் மேற்பட்ட நூல்கள்!


தொகுப்பு: சரஸ்வதி

* கே. ஏ. அப்பாஸ்



* ப. நீலகண்டன்




டிஸ்மிஸ் சர்க்கஸ்!
சீர் குலைந்த பொருளாதாரம்
அம்மா பசிக்கிறது...
அழகான குஞ்சு பொரிப்பேன்!



கல்கி

1990 டிசம்பர் 16
மலர் : 49 இதழ் : 20
பிரமோதூத மார்கழி 1



ஐயோ பாவம், சந்திரசேகர்!

சந்திரசேகர் அறிவித்துள்ள ஏழு அம்சச் சிக்கன நடவடிக்கையைப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது. அரசு வாகனங்களுக்குப் பெட்ரோல் டீசல் இருபது சதம் வெட்டு; அரசு இலாக்காக்களுக்கு மின்சாரம், டெலிஃபோன் பில்களில் பத்து சதம் வெட்டு; அரசாங்க விருந்துகள் கூடாது; மாநாடுகளை ஓட்டல்களில் நடத்தக் கூடாது என்றெல்லாம் கூறிவிட்டால் நாட்டின் பொருளாதாரம் சீரடைந்துவிடும் என்று பிரதமர் எண்ணினால், அவர் "ஐயோ பாவம், சந்திரசேகர்!" என்று வர்ணிக்கப்பட வேண்டியவராகிறார். சிக்கன நடவடிக்கை கூடாது என்பதில்லை. ஆனால் அதுமட்டும் போதாது. யானைப் பசிக்குச் சோளப் பொரி என்ற கதைதான்!

பட்ஜெட் பற்றாக்குறை வரலாறு காணாத விதத்தில் 30,000 கோடியாக உயரும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது; நேர்முக மறைமுக வரி வசூல், இலக்குடன் ஒப்பிடும் போது 2000 கோடி குறைகிறது; அந்நியச் செலாவணிக் கையிருப்போ அதலபாதாளத்துக்குச் சரிந்துவிட்டது. காரணங்கள் பல. முக்கியமானது, குவெய்த் மீது ஆக்கிரமிப்பும் பெட்ரோலியம் விலை உயர்வும். நிலைமையைச் சமாளிக்கப் பிரதமர் உடனடியாக உலக வங்கி, அல்லது சர்வதேச நிதி நிறுவனம் போன்றவற்றின் உதவியை நாட வேண்டும். அப்படி நாடும் போது அவர்கள் இங்கே தொழில் வர்த்தகத் துறைகளில் அரசின் கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கத்தான் செய்வார்கள். சந்திரசேகர் தமக்கு மிகவும் அருமையான சோஷலிஸக் கொள்கைகளை உதறி விட்டு, அதிகபட்சச் சுதந்திரத்தை வழங்க வேண்டியிருக்கும். ருஷ்யாவே சோஷலிஸப் பொருளாதாரத்தைக் கைவிட்டு, சுதந்திரப் பொருளாதாரத்துக்கு மாறுகிறது என்னும் போது, சந்திரசேகர் மாறுவதில் தவறில்லை. ஆனால் அவரைப் பதவியில் அமர்த்தியுள்ள தொழில் — வர்த்தக — அரசியல் பெரும்புள்ளிகள் இதற்கு அவரை அனுமதிப்பார்களா என்பது சந்தேகமே. பர்மிட் — லைசன்ஸ் — கண்ட்ரோல் — கோட்டா முறைதான் அவர்களுக்குக் கற்பகத் தரு. பணம் காய்ச்சி மரம். அதைக் கைவிட அவர்களுக்கு மனம் வராது.

பொருளாதாரம் ஒருபுறமிருக்க, ஸி. பி. ஐ. தலைவருக்கு மாற்றல் உத்தரவு போட்டு விட்டுப் புதிய தலைவரை நியமிக்கத் தடுமாறுகிறார் பிரதமர். அந்தப் பதவியை ஏற்கவே பலரும் தயங்குகிறார்கள். யாரோ ஒருவர் வரத்தான் போகிறார் என்றாலும், ஒவ்வோர் ஆட்சி மாற்றத்தின் போதும் போஃபோர்ஸ் போன்ற பல விசாரணைகளில் தீவிரம் காட்டுவதும் மெத்தனம் காட்டுவதுமாக மாறி மாறிச் செயல்பட வேண்டுமென்றால் யார்தான் அந்தப் பதவியை விருப்பத்தோடு ஏற்க முன் வருவார்?

ராமஜென்மபூமி பிரச்னையில் ராஜீவ் காந்தி ஓர் ஆபத்தான யோசனையை வழங்கியிருக்கிறார் பிரதமருக்கு. 'சரித்திர ஆய்வு, தொல்பொருள் ஆய்வு நடத்தி, ஓர் ஆலயத்தை இடித்துத்தான் பப்ரி மஸ்ஜித் கட்டப்பட்டிருப்பதாக நிரூபணமானால், அங்கு ராமர் கோயில் கட்ட அனுமதி வழங்கப்பட வேண்டும்' என்ற அவர் கருத்து, தேன் கூட்டைக் கலைக்கும் ஒரு காரியமே. சந்திரசேகர் இந்த ஆபத்தில் சிக்காமல் இருக்க வேண்டும். நாட்டில் ஏராளமான மசூதிகள், முன்பு கோவில்கள் இருந்த இடத்தில்தான் உள்ளன. இது சரித்திர அசம்பாவிதத்தால் என்றோ ஏற்பட்டது. அவற்றையெல்லாம் இடம்பெயர்க்க வேண்டும் என்ற கோரிக்கை எழும். அதற்கெல்லாம் சட்டப்படி தடை விதித்து, ராமஜென்மபூமி விஷயத்தில் மட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட்டாலும் அந்தச் சட்டத்தை எதிர்த்துச் சத்தியாக்கிரஹம் நடக்கும். இன்று வி. எச். பி. விட்டுக் கொடுத்தாலும் நாளைக்கு வேறு ஒரு பெயரில் ஓர் அமைப்பு புதிய தலைவருடன் தோன்றி, சட்ட மறுப்பு இயக்கம் நடத்தும்.

இந்துக்களும் முஸ்லிம்களும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் மதித்து, ஒருவரை ஒருவர் அரவணைத்து, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, அந்நியோன்னியமாக வாழ்வது ஒன்றே பிரச்னைக்குத் தீர்வு. இதைத்தான் பிரதமர் வற்புறுத்த வேண்டும். பகை உணர்வுகள் வளர்க்கப்பட்டால் எதிர்கால இந்தியாவை எண்ணிப் பார்ப்பதே அச்சமளிப்பதாக இருக்கும்.

"ஏண்டாப்பா இந்தப் பதவிக்கு ஆசைப்பட்டோம்" என்று எண்ணும் நிலைக்குப் பிரதமர் வந்துவிட மாட்டார் என்றும் பூதாகார வடிவமெடுத்துள்ள இது போன்ற பல பிரச்னைகளையும் திறம்படச் சந்திப்பார் என்றும் நம்புவோம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

"இது என்ன ராமஜென்ம பூமியா?"

● போர்க்களத்தில் கை இழந்த ஒருவன் கத்தினான்: "ஐயா, கை போச்சே, கை போச்சே!" என்று.

அருகில் வீழ்ந்து கிடந்த இன்னொருவன் எரிச்சலாகச் சொன்னான்: "யோவ், சும்மா இருய்யா! அங்கே தலை போனவனெல்லாம் சும்மா இருக்கான். நீ கை போனதுக்கு இப்படிக் கத்துகிறாயே?" என்று!

— பா. இந்திரா, காரைக்குடி.



●● பேருந்தில் மூன்று பேர் அமரும் இருக்கையில் முதலில் ஒருவர் அமர்ந்திருந்தார். பேருந்தில் ஏறிய ஒருவர், அவரை நகரச் சொல்லி, தாம் அமர இடம் கேட்டார். அவரோ பக்கத்தில் உள்ள இடத்தைக் காட்டி அமரச் சொன்னார். இவர் மறுத்து நகருமாறு வற்புறுத்தவே, அவர் கோபமாகி, "இது என்ன 'ராமஜென்மபூமியா! என்னை நகர்த்தி விட்டு இங்கேதான் உட்காருவேன் என்கிறீங்களே; பக்கத்தில் சும்மா உட்காருங்க சார்!" என்றார். வந்தவர் கப்சிப்.

— மைனாவதி சிவராமன், மயிலாடுதுறை.





●● எனக்குத் திருமணம் நிச்சயமான சமயம். ஆபீஸில் என்னுடன் பணியாற்றும் நண்பர் டிரீட் வைக்கும்படி நச்சரித்தார். நான் மறுத்து வந்தேன். கடைசியில் அவர், "நான் நன்றாகக் குடித்து விட்டு உன் மாமனார் வீட்டிற்குப் போய், "நான் உங்கள் வருங்கால மருமகனின் நண்பன்" என்று சொன்னால் உனக்குப் பெண்ணே கொடுக்க மாட்டார்கள்" என்றார்.

"நீங்க குடிக்காமப் போய் அதுபோல் சொன்னாலே, உங்களைப் பார்த்துட்டு எனக்குக் கண்டிப்பாகப் பெண் கொடுக்கமாட்டாங்க சார்! அதுக்காகப் பணம் செலவு பண்ணிக் குடித்து உடம்பைக் கெடுத்துக்காதீங்க" என்றேன்.

அலுவலகத்தில் அனைவரும் சிரித்து விட்டனர். அப்புறம் அவர் டிரீட் கேட்பதை நிறுத்தி விட்டார்.

— பிரதீபா, சென்னை — 11.



ஆசிரியர்: 'தண்ணீர்' 'ஐஸ்' ஆக மாறினால் என்ன நிலைமை ஏற்படுகிறது?

மாணவன்: விலை கொடுத்து வாங்கும்படி ஆகிறது சார்!

— ஆர். சுசிலா, சென்னை — 88.

நிருபர்: நீங்க ஒரு குடிகாரரின் மனைவி என்கிற முறையில் கேட்கிறேன். பாக்கெட்டில் மலிவு விலை மது விற்பது பற்றி என்ன நினைக்கறீங்க?

பதில்: சல்லிக்காக வீட்டுக்கு வராது. அவரு கொண்டு வர்ற பாட்டிலை வச்சுத்தான் நாலு காசு சம்பாதிச்சுச் சாப்பிட்டுக்கிட்டு இருந்தேன். பாவிக, பாக்கெட்ல வித்து அதையும் கெடுத்துட்டாங்களே. அவுங்க உருப்படுவாங்களா!

— கே. ஆர். தேவி, கோயம்புத்தூர் — 1.



●● தமிழாசிரியர் இலக்கணம் நடத்திக் கொண்டிருந்தார். 'தனிக் குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டும்' என்ற விதியை விளக்கி, "எங்கே, நீங்கள் ஓர் உதாரணம் சொல்லுங்கள்" என்று மாணவர்களைக் கேட்டார்.

ஒரு குறும்பன் எழுந்து, "கண் + அடித்தான் = கண்ணடித்தான்" என்று கூறினான்.

உடனே ஆசிரியர், "அது சரிதான். அதோடு, இதுவும் பொருத்தமாக இருக்கும்: "பல் + உடைந்தது = பல்லுடைந்தது" என்று கூறி இரண்டையும் ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதினார்! வகுப்பில் சிரிப்பலை மோதியது!

— க. கிருஷ்ணன், ஒரத்தநாடு.





● பள்ளியில் கண்மணி என்ற பெண் அழகாக இருப்பாள். ஒரு மாணவன் கண்மணியைக் காணும் நோக்கத்தில் அவள் அருகில் உள்ள கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தான். அதைக் கவனித்த எங்கள் தமிழ் ஆசிரியர், "கண், மணியை நோக்குகிறதோ?" என்று கேட்க, மாணவ, மாணவியர் அனைவரும் சிரிப்புக் கடலில் ஆழ்ந்தனர்.

— ச. சாந்தி, சென்னை — 35.



●● மளிகைச் சாமான்கள் வாங்கச் செல்லும் போது குழந்தைகளையும் அழைத்துச் செல்வேன். புறப்படும் முன், 'விளையாட்டுச் சாமான்கள் கேட்டுத் தொந்தரவு செய்ய மாட்டோம்' என்று பிராமிஸ் கேட்டுவிட்டே அழைத்துச் செல்வேன். இவ்வாறு ஐந்தாறு தடவை நடந்த பிறகு என் நாலு வயதுப் பையன் மிகவும் இயல்பாக என்னிடம் 'எனக்குக் குட்டிக்கார் வாங்கித் தந்தாத்தான் நான் உன் கூட வருவேன்; பிராமிஸ் பண்ணு' என்று கையை நீட்டியவுடன் ஆனந்தம் பொங்கியது.

— ஆர். கணேசன், காசிமங்கலம்.



* கீதா

'மோக முள்' மீது ஒரு மோகம்!

ஓர் ஐ. ஏ. எஸ். அதிகாரி சினிமா டைரக்டராக அறிமுகமாகப் போகிறார். பெயர் ராஜசேகரன். கேரளாவில் பணியாற்றும் இவர், டைரக்ட் செய்வதற்காகக் கேரள முதல்வர் சிறப்பு அனுமதி வழங்கியிருக்கிறார். அந்த அளவுக்கு தி. ஜானகிராமனின் 'மோக முள்' (மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) கேரள முதல்வரையும்பாதித்திருக்கிறது. அதனால்தான் 'மோக முள்'ளை டைரக்ட் செய்வதற்காக இவருக்கு ஒரு பிரத்யேகச் சலுகை!

அது சரி, ராஜசேகரனின் மனத்தில் எப்படி 'மோக முள்' தைத்தது?

''எனக்குச் சிறு வயதிலிருந்தே சினிமா மேல் ஆசை. அதனால் பட்டப் படிப்பை முடித்ததும் அடையாறு திரைப்படக் கல்லூரியில் டைரக்‌ஷன் கோர்ஸில் சேர்ந்தேன். திரைப்படக் கல்லூரி மாணவர்கள் பற்றி வெளியிலிருப்போர் அவ்வளவாக அறிந்திராத காலம் அது. எனவே, அதில் பயிற்சி பெற்றுத் தேறினாலும் எதிர்காலம் பிரகாசமாக இராது என்று தோன்றவே ஆறே மாதத்தில் அதை விட்டு விட்டு, மாநிலக் கல்லூரியில் சேர்ந்து எம். எஸ். சி. படித்தேன்.

''பிறகு பம்பாயிலுள்ள சினிமா கேமரா சம்பந்தப்பட்ட நிறுவனமொன்றில் டெக்னிகல் ஆபீஸராகச் சேர்ந்தேன். அங்கிருந்தபடியே, சினிமா பற்றிய கட்டுரைகளைப் பத்திரிகைகளில் எழுதினேன். அதனால் பம்பாய் ஃபிலிம் சொஸைட்டியின் தொடர்பு ஏற்பட்டு, நிறையப் படங்கள் பார்த்தேன்.

''அவற்றின் பாதிப்பாக 'வயிறு' என்று ஒரு நாடகத்தை ஹிந்தியில் அரங்கேற்றினேன். மத்திய அரசின் விருது கிடைத்தது. தொடர்ந்து, 'நாற்காலிக்காரன், மரபு, பாடலிபுத்திரம்' போன்ற நாடகங்களைப் போட்டு பம்பாயில் பிரபலமானேன். அந்த நேரத்தில்தான் 'மோக முள்' என் மனத்தில் அழுந்தி, மனசுக்குள்ளேயே சினிமாக் காட்சிகளாக ஓடத் துவங்கியது. காவிரியில் துளைவது போல் ஓர் இதம். மனசுக்குள் ஓடியதையெல்லாம் எழுதி எடுத்துக் கொண்டு வந்து, தி. ஜானகிராமன் அவர்களிடம் வந்து காட்டி விளக்கினேன். அவர், 'பேஷ்! பேஷ்!' என்று பாராட்ட, என்னுள் உற்சாக வெள்ளம் கரை புரள ஆரம்பித்தது.

''இந்தக் காலகட்டத்தில் நான் ஐ. ஏ. எஸ். தேர்வு பெற்றேன். கேரளாவில் சப்—கலெக்டரானேன். அந்த நிலையிலும் மோகமுள்ளை மறக்க முடியவில்லை. எனது சினிமா ஆர்வத்தைக் கவனித்த கேரள அரசு, என்னை கேரள மாநில திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குனராக நியமித்து, என் நிர்வாகத்தின் கீழ் ஒரு பெரிய சினிமா ஸ்டுடியோவையும் கொடுத்தது. அதில், நான் சினிமா சம்பந்தப்பட்ட சகல தொழில் நுட்பங்களையும் கற்கும் வாய்ப்புக் கிடைத்ததால், மோகமுள்ளை எப்படியாவது திரைப்படமாக்கி விட வேண்டுமென்று சிறப்பு விடுமுறையில் வந்திருக்கிறேன்...'' என்றார் ராஜசேகரன்.

மோக முள்ளின் திரைப்பட உரிமைகளை ஏற்கெனவே பெற்றிருப்பவர் தயாரிப்பாளர் டி. என். ஜானகிராமன். அவருடன் கூட்டணி அமைத்திருக்கிறார் ராஜசேகரன். முடிந்த வரை 'மோகமுள்' கதை நடைபெற்ற காலமான ஐம்பதுகளையேதான் சினிமாவில் காட்டப் போகிறாராம். தி. ஜானகிராமன் வர்ணித்த பறவைகளின் ஒலிகளைக் கூட வனப் பகுதிகளுக்குச் சென்று, இயற்கையாகவே ஒலிப்பதிவு செய்து வந்து சேர்க்கப் போகிறாராம். கதையின் நாயகியான யமுனா பாத்திரத்தில் கீதாவும், ரங்கண்ணா பாத்திரத்தில் நெடுமுடி வேணுவும் நடிக்கிறார்கள். நாயகன் பாபுவாக நடிக்க, சங்கீதம் தெரிந்த ஒரு புதுமுகத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார். இசையமைக்கும் இளையராஜா இதற்காகத் தனி ஆர்வத்தோடு கம்போஸிங் செய்கிறார்.

— பாரதி பாலன்

படம்: யோகா

* டைரக்டராகும் ஐ. ஏ. எஸ். அதிகாரி





சுவாமி சின்மயாநந்தர் அவர்களின் வேதாந்த பயிற்சி வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி துவங்க உள்ள பிரம்மச்சாரி பயிற்சி வகுப்பில் சேர விருப்பமுள்ள 20 முதல் 30 வயதுக்குட்பட்ட திருமணமாகாத பட்டப்படிப்பு அல்லது +2 படித்த (அறிவியல் அல்லது கல்வித்துறை படிப்பு விரும்பத் தக்கது) இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. குடும்ப சுமையற்ற வேதாந்தம் கற்பதில் ஆழ்ந்த நீட்டமுள்ள வேத கால ரிஷிகளின் செய்திகளைப் பரப்புவதில் பற்றுள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

இந்த இரண்டாண்டு கால குருகுல வகுப்பின் இடையில் விடுப்போ, விடுமுறையோ கிடையாது. போதனா மொழி தமிழ். பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறுபவர்களுக்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம், புத்தகம், மருத்துவம் உள்ளிட்ட அனைத்து அடிப்படைத் தேவைகளையும் டிரஸ்ட் பூர்த்தி செய்யும்.

பயிற்சி முடித்த பின்பு இவர்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் வெளி நாடுகளிலும் உள்ள சின்மயா இயக்கக் கேந்திரங்களில் சமயப் பணியாளர்களாகத் தொண்டாற்றுவர். பயிற்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது சின்மயா இயக்கத்துடன் தொடர்புடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை, ஆச்சாரியர்,
தமிழ்நாடு சாந்திபனி
சின்மயா கார்டன்ஸ்,
சிறுவாணி ரோடு,
எம்.ஆர்.புரம் அஞ்சல்,
கோயம்புத்தூர் - 641 101.

என்ற முகவரியில் பெறலாம். விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய கடைசித் தேதி: 20.12.1990.

கடிதம் மூலம் தெரியப்படுத்திய பிறகு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 1991 ஆம் வருடம் ஜனவரி முதல் தேதி அன்று துவங்க உள்ள வகுப்பில் சேரத் தயாராக இருக்க வேண்டும்.

சின்மயா கார்டன் டிரஸ்ட்,
கோயமுத்தூர்.



"மறக்கப்பட்டு வரும் ஆர்ட் டைரக்டர்கள்!"

சினிமாவின் பார்வைகளும் பரிணாமங்களும் மாற மாறப் படப்பிடிப்பு முறைகளும் மாறிக் கொண்டே வருகின்றன. ஸ்டுடியோக்களில் போடப்படும் பிரம்மாண்டமான 'செட்'களையெல்லாம் விட்டுவிட்டு, கிராமப்புறங்களிலும் வீடுகளிலும் சேரிகளிலும் வந்து படம் பிடிப்பது இன்று இயல்பாகி வருகிறது. "இது சினிமாவின் ஆரோக்கியமான போக்குகளில் ஒன்றுதான் என்றாலும் எங்களைப் போன்ற கலைஞர்களின் வாழ்க்கையையே பாதிக்கிறது..." என்கிறார் பிரபல ஆர்ட் டைரக்டர் நாகராஜன்.

"முன்பெல்லாம் புராணப் படங்கள், சரித்திரப் படங்களுக்கு மட்டுமல்லாமல், சமூகப் படங்களுக்கும் செட்கள்தான் போடப்பட்டன. செட்கள் இல்லையென்றால் சினிமாவே எடுக்க முடியாது என்கிற நிலை. கறுப்பு – வெள்ளை சினிமாவிலிருந்து வண்ணப் படங்கள் வெளிவர ஆரம்பித்த போது, எங்கள் பணியும் அதிகமானது. ஏராளமான வண்ணக் கலவைகளை உபயோகிக்க வேண்டியிருந்தது. அதற்குக் கற்பனைத் திறனும் புதிய புதிய உத்திகளும் தேவைப்பட்டன. இவற்றுக்கெல்லாம் செயல் வடிவம் கொடுப்பதற்கு ஏராளமான தொழிலாளர்களும் தேவைப்பட்டார்கள்.

"புராணப் படங்களுக்கு செட் அமைக்க ஏராளமான கற்பனைத் திறன் தேவைப்பட்டது போல், சரித்திரப் படங்களுக்குக் கதை நடக்கும் காலத்தைக் காட்டுகிற வகையில் செட்கள் அமைக்க வேண்டியிருந்தது. அந்தந்தக் காலகட்டங்கள் பற்றிய சரித்திர ஆய்வுகளையும் நாங்கள் புரிந்து கொண்டு செயல்பட வேண்டியிருந்தது. எனவே, இக்கலை மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வந்தது.

"இன்றைக்கு அப்படியில்லை. செட்களின் செலவு கருதியோ அல்லது யதார்த்தம் கருதியோ படம் முழுவதையும் கூட ஸ்டுடியோவுக்கு வெளியிலேயே எடுத்து விடுகிற ஒரு நிலை வந்து விட்டதால், என்னைப் போன்ற கலைஞர்கள் இருப்பதையே மறந்து விட்டார்களோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. ஏதோ டி. ராஜேந்தர் மாதிரி, ஒன்றிரண்டு டைரக்டர்கள் இப்போதும் கூட கனவுக் காட்சிகள் போன்றவற்றைப் பிரம்மாண்டமான செட்கள் போட்டே எடுப்பதால்தான் என்னைப் போல் இன்னும் சில ஆர்ட் டைரக்டர்கள் இத்தொழிலை விடாமல் பிடித்துக்கொண்டிருக்கிறோம்.

"எங்கள் நிலை மங்கிப் போனதை உணர்ந்து கொண்டதால்தானோ என்னவோ, தமிழக அரசு இப்போது மற்ற சினிமாக் கலைஞர்களுக்குப் பரிசளிப்பது போல் சிறந்த ஆர்ட் டைரக்டர்களுக்கும் பரிசளித்து ஊக்குவிக்க ஆரம்பித்திருக்கிறது!" என்று கூறும் நாகராஜன் மினியேச்சர் செட் போடுவதிலும் வல்லவர்.

Miniature set என்பது என்ன? பெரிய கோட்டை, கொத்தளங்கள், அரண்மனை என்று இருப்பதாகக் கொண்டால் அவற்றை பொம்மை போல் சிறிய அளவில் மேஜை மீது தயாரித்து விடுவார் நாகராஜன். தத்ரூபமாகக் கலை நுணுக்கத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள அதனை டாப் ஆங்கிளில் காமிரா படம் பிடிக்கும் போது நிஜமான கோட்டை அரண்மனை போலவே தோன்றும். பின்னர், அரண்மனையின் ஒரு பகுதியை மட்டும் பெரிய சைஸ் செட் போடுவார். அதையும் இதையும் மாறி மாறி காமிரா படம் பிடிக்கும். விளைவு, கோட்டையை நெருங்கி நாமே உள்ளே புகுவது போல் பார்வையாளருக்கு ஒரு பிரமிப்பு!

டி. ராஜேந்தரின் ஒரு படத்துக்காக நாகராஜன், இசைக் கருவிகள் (கிட்டார்) வடிவில் அமைத்துள்ள வண்ணமயமான ஒரு பிரம்மாண்ட செட்டை எதிர்ப்பக்கத்தில் காணலாம்.

சந்திப்பு: ராஜா



"நடிப்பு ஒரு த்ரில்லிங் அனுபவம்!"

— பானுப்ரியா

பாம்பு —

படுக்கை மீது படமெடுத்துக் கொண்டிருக்கிறது.

எதிரே அமர்ந்திருக்கும், பானுப்ரியா, பாம்பைப் பார்த்து விட்டு 'வீல்' என்று அலறுகிறார்.

பாம்பு அவரை நோக்கி நகர —

பானுப்ரியா கட்டிலில் பின்னோக்கி நகர —

கேமரா ஓடிக் கொண்டிருக்கிற சப்தம் தவிர நிசப்தம்.

''கட்!'' — டைரக்டர் ராமநாராயணன் கூறுகிறார்.

கேமரா நிற்கிறது.

பாம்புக்காரர் வந்து பாம்பை இழுத்துக் கொண்டு போகிறார். கட்டிலை விட்டு இறங்குகிறார் பானுப்ரியா. அவர் முகத்தில் ஒரு ரிலீஃப்!

அந்த இடைவேளையில் நமது பேட்டி ஆரம்பமானது.

நிருபர்: சினிமாவில் நுழைவதற்கான தகுதி என்ன?

பானுப்ரியா: நடிப்புக் கலைக்கு நடிப்பாற்றல்தான் முக்கியம் என்று கூறத் தேவையில்லை. ஆனால் நமது சினிமா உலகுக்கு வேறு சில அம்சங்களும் தேவைப்படுகின்றன. முக அழகு, உடலமைப்பு... நடனப் பயிற்சி... முறைப்படி நடனம் பயில்வது பாவங்களை வெளிப்படுத்தி நடிக்கப் பெரிதும் உதவும். அப்புறம் மொழி... எனக்குத் தாய்மொழி தெலுங்கு; பள்ளியில் தமிழ். எனவே வசதியாக இருக்கிறது.

நிருபர்: சினிமா என்றாலே பெண்களைக் கவர்ச்சிக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் மனப்பான்மைதான் மேலோங்கியுள்ளது. இதற்குப் பெண் என்ற முறையில் என்ன சொல்கிறீர்கள்?

பானு: பெண்களை உயர்வாய்ச் சித்திரிக்கும் படங்களும் வரத்தானே செய்கின்றன? உதாரணத்துக்கு வைஜயந்தி ஐ. பி. எஸ்.

நிரு: ஓரிரண்டு படங்களில் சினிமா உலகம் பெண்மையை உயர்வாய்ச் சித்திரித்தாலும், பல படங்களில் பெண்களை, கவர்ச்சிக்காகத்தானே பயன்படுத்துகிறது!

பானு: பெண் என்ற முறையில் எனக்கு இது பற்றிச் சிறிது வருத்தமுண்டு. ஆனாலும் பூனைக்கு மணி கட்டுவது யார்? எல்லாப் படங்களும் பெண்களை உயர்வாகச் சித்திரிக்காவிட்டாலும் சில படங்களாவது இப்படி வருகிறதே என்று ஆறுதல் அடைகிறேன்.

நிரு: உங்களுடைய திரையுலகப் பிரவேசத்துக்கு முந்தைய நாட்களில், சினிமா பற்றி நீங்கள் கொண்டிருந்த கருத்து என்ன?

பானு: பள்ளிக்கூட நாட்களில், ஹீரோ, தன்னைத் தொட்டு நடிப்பதை, ஹீரோயின் எப்படி அனுமதிக்கிறார் என்று சிநேகிதிகளுடன் விவாதித்ததுண்டு. பின்னர், நானே நடிக்க ஆரம்பித்தவுடன், அதெல்லாம் தவிர்க்க முடியாதது என்று புரிந்து கொண்டேன்.

நிரு: முன்பு போல உங்களுடைய சிநேகிதிகளுடன் இப்போது உங்களால் மனம் திறந்து பேச முடிகிறதா? ஓர் அன்னியத் தன்மை வந்து விடவில்லையா?

பானு: நடிகையான பிறகு என்னைச் சுற்றி ஒரு வட்டம் உருவாகி விடுவதும், அன்னியத் தன்மை நிலவுவதும் தவிர்க்க முடியாதது. பாபுலாரிடிக்குத் தரப்பட வேண்டிய விலை அது. தூரத்து உறவினர், பழைய சிநேகிதம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு நிறையப் பேர் தேடி வருவதுண்டு. பிதற்றல் கடிதங்கள், டெலிபோனில் ஆபாசமாய்ப் பேசுகிற ரசிகர்கள் — இந்தத் தொல்லைகளிலிருந்து தப்பிக்க, இது போன்றதொரு வட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. ஆனால், அதே வட்டம், சுக, துக்கங்களை மனம் விட்டுப் பகிர்ந்து கொள்ள ஒருவர் கிடைக்கவும் தடையாய் இருக்கும். ஒரு நாள் ஷூட்டிங்கின் போது, குரூப் டான்ஸ் ஆடிக் கொண்டிருந்த பெண்களில் ஒருத்தியின்

முகம் கொஞ்சம் பரிச்சயமாய் இருந்ததைக் கவனித்தேன். ஆனால், அந்தத் துணை நடிகையோ என்னைத் தெரிந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. ஷூட்டிங் முடிந்த பின், அவளை அழைத்து விசாரித்த போது, அவள் என் பள்ளிக்கூடச் சிநேகிதி என்று தெரிந்தது. 'என்னால்தான் உன்னைச் சட்டென்று அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ஆனால், என்னைத் தான் உனக்கு நன்றாய்த் தெரியுமே! நீயாக வந்து பேசியிருக்கலாமே!' என்று அவளிடம் கேட்ட போது, 'நீங்க ஸ்டார்! நான் துணை நடிகைதானே! நீங்கள் என்னை அலட்சியப்படுத்தி விட்டால்...? அந்தப் பயம்தான் என்னைத் தடுத்தது!' என்றாள். ஓய்வு தினம் ஒன்றில் வீட்டுக்கு வரச் சொல்லி, நிறைய நேரம் பேசிக் கொண்டிருந்தேன்.



நிரு: நீங்கள் நடித்த முதல் படத்தை மறுபடி பார்த்தால் என்ன தோன்றும்?

பானு: இன்னும் நல்ல முறையில் செய்திருக்கலாமே என்று தோன்றும். நடிக்கும் போது, எந்தவிதமான நடிப்பை டைரக்டர் எதிர்பார்க்கிறாரோ அதை உணர்ந்து நடிப்பதற்கும், டைரக்டர் என்ன சொல்லுகிறாரோ அதை அப்படியே சாவி கொடுத்த பொம்மை மாதிரி செய்வதற்கும் வேறுபாடு இருக்கிறது. இதை ஆரம்பத்தில் நான் புரிந்து கொள்ளவில்லை. போகப் போகத்தான் உணர்ந்தேன்.

நிரு: நடிப்பு என்பது டைரக்டர்களால் 'மோல்டு' செய்யப்படும் திறமையா?

பானு: டைரக்டர்களின் பங்கு முக்கியமானது என்றாலும், அடிப்படையில் திறமை இருந்தால்தான் மெருகேறும்.

நிரு: நடிப்புத் திறமைக்கு அவார்டு ஓர் அளவுகோலா?

பானு: அவார்டு என்பது ஓர் அங்கீகாரமே யொழிய, அதுவே முடிவானதல்ல. உதாரணமாக ஒரு படத்தில் ஒருவர் மிக நன்றாக நடித்திருக்கலாம்; ஆனால் அந்தப் படத்தில் உள்ள வேறு பல குறைகள் காரணமாக அந்தப் படம் கவனத்தைக் கவராமல் போக, அத்துடன் சேர்ந்து இந்த நடிப்பும் மறக்கப்படலாம். நடிப்பு சுமாராக இருந்தாலும் வித்தியாசமான கதை அமைப்பு, டைரக்ஷன், சமுதாயப் பார்வை போன்றவற்றால் ஒரு படம் அவார்டு பெறலாம். நல்ல படத்தில் சிறப்பாக நடிக்க வாய்ப்புக் கிடைப்பது என்பது அபூர்வம். அதற்காகத் தவமிருந்தாலும் வரம் கிடைக்கும் என்பது நிச்சயமில்லையே! எனவே நமக்குக் கிடைக்கிற வாய்ப்பை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்கிறோமா; முழு ஆற்றலையும் செலுத்தி நடிக்கிறோமா என்பது தான் முக்கியம்.

நிரு: உங்கள் பிரைவசிக்கு, பாபுலாரிடி தடையாய் இருப்பதால், யாரும் அடையாளம் கண்டுகொள்ளாத ஊரில் போய்ச் சில நாட்கள் தங்கி, சுதந்திரமாய்ச் சுற்ற வேண்டும் என்று நினைப்பதுண்டா?

பானு: முன்பெல்லாம் நினைத்ததுண்டு. சமீபத்தில் லண்டன் போயிருந்த போது, அங்கே யாரும் அடையாளம் கண்டுகொள்ள

மாட்டார்கள் என்று நினைத்து, இஷ்டப்படி ஊர் சுற்ற ஆரம்பித்தேன். திடீரென ஒருவர் என்னை அடையாளம் கண்டுபிடித்து, 'ஹலோ' சொன்ன போது, பெருமையாய் இருந்தது. பிரைவசி போனது பற்றிய வருத்தம் அதில் மறைந்து போய் விட்டது.

திரு: தினமும் ஷூட்டிங் — மேக்கப் — நடிப்பு — உங்களுக்கு வாழ்க்கை இயந்திரத்தனமாய் இல்லையா?

பானு: தினமும் ஆபீஸ் போகிறவர்களுக்கும் இந்தப் பிரச்னை உண்டே! ஆபீஸ் போகிறவர்களின் வாழ்க்கையை விடவா எங்கள் வாழ்க்கை, இயந்திரத்தனமானதாக இருந்து விடப் போகிறது? ஒருநாளும் இல்லை! சினிமாவில் புதிது புதிதாகப் பலவிதமான நபர்களைச் சந்தித்துப் பழகுகிறோம். புதிய புதிய லொகேஷன்களுக்குப் போகிறோம். இதனால் சுவாரஸ்யம் கூடுகிறது. அது மட்டுமல்ல; நடிப்பு என்பதே ஒரு சுவையான. விஷயம். நான், என்னை மறந்து வேறு ஒரு கேரக்டராக மாறி விட வேண்டிய அந்த நிலை, கூடு விட்டுக் கூடு பாய்வது போன்ற ஒரு த்ரில்லிங்கான அனுபவம்!

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி.**

அட்டை வண்ணப்படமும், படங்களும்:

யோகா.

என்னதான் செய்கிறது ஃபிலிம் சேம்பர்?



“தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபை (ஃபிலிம் சேம்பர்) என்பது என்னதான் செய்து கொண்டிருக்கிறது?” — இந்தக் கேள்விக்கு அதன் செயலாளர் கோவை செழியன் பதிலளிக்கிறார்.

“ஒருவர் படமெடுக்கும் போது அவர் எங்களிடம் வந்து படத்தின் பெயரைப் பதிவு செய்து கொள்கிறார். அதனால் அதே பெயரில் இன்னொரு படம் வெளிவராமல் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். அப்புறம் நெகடிவ் ஃபிலிம் வாங்கும் பிரச்னை. அது நியாயமான விலைக்குக் கிடைக்குமாறு நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். அதாவது ஒருவர் படமெடுப்பது உறுதி — நடிக, நடிகையரெல்லாம் ஒப்பந்தமாகியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் உறுதிப்படுத்திக் கொண்ட பிறகே நாங்கள் அவருக்கு ஃபிலிம் வாங்க அனுமதி தருகிறோம் என்பதால் ஒருவர் வெறுமனே ஃபிலிமை வாங்கி கள்ளச் சந்தையில் விற்பது தடுக்கப்படுகிறது. அப்புறம், தயாரிப்பாளர், டைரக்டர், நடிக — நடிகையர்களுக்குள் பிரச்னைகள் என்றால் சேம்பர் தலையிட்டுத் தீர்த்து வைக்கிறது.

“அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டிய சமயத்தில் பிலிம் சேம்பர் தான் முன்நின்று உதவுகிறது. உதாரணமாக சென்சார் போர்டு மாதிரி, திரைப்பட விளம்பரங்களையும் ஒரு போர்டிடம் காட்டி அனுமதி வாங்க வேண்டும் என்று மத்திய அரசு சமீபத்தில் முடிவு செய்த போது, அந்த போர்டில் அரசு அதிகாரிகள் அங்கம் வகிக்கக் கூடாது என்று சொல்லி வெற்றி பெற்றோம். காரணம், அரசு அதிகாரி என்பவர் காலை பத்து மணியிலிருந்து ஐந்து மணி வரைதான் வேலை பார்ப்பார். சனி, ஞாயிறு விடுமுறை என்பார். ஆனால் குறுகிய கால அவகாசத்தில் விளம்பரங்களை வெளியிட்டு படங்களை வெளியிட வேண்டிய சூழ்நிலையில் அந்த அதிகாரியிடம் எப்படி நாங்கள் ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியும்?

“இப்போது கூட ஒரு பிரச்னை. அது டப்பிங் படங்கள் பற்றியது. தெலுங்கிலிருந்து ஏராளமான படங்கள் தமிழில் டப் செய்யப்படுவதற்குக் காரணம், தமிழக அரசின் மிகக் குறைந்த வரிதான். ஆனால், தமிழ்ப் படமொன்றைத் தெலுங்கில் டப் செய்து வெளியிட வேண்டுமானால் ஆந்திர அரசுக்கு இரு மடங்கு வரி செலுத்த வேண்டியிருக்கிறது. ஒன்று தமிழக அரசு வரியை உயர்த்த வேண்டும் அல்லது ஆந்திர அரசு வரியைக் குறைக்க வேண்டும் என்று சேம்பர் தான் நமது முதல்வரிடம் கூறியிருக்கிறது.”

சந்திப்பு: **அசோக்குமார்.**



கண்டிப்பும் கறாரும் நிறைந்த எஸ்டேட் ஓனர் மனோரமா அத்தை.

தாயின் இருதய அறுவைச் சிகிச்சைக்காகத் தேவைப்படும் பணத்தைச் சம்பாதிக்கப் போலிப் பாட்டு வாத்தியாராக அவருடைய பங்களாவுக்கு வந்து சேரும் சத்யராஜ்.

சிறையிலிருந்து தப்பி வெளியேறி ஒளிவதற்கு இடம் தேடி அதே பங்களாவுக்கு

நடிகன்

வந்து சேரும் கவுண்டமணி.

அத்தையின் வீட்டில் வளர்ந்து அவருடைய அடக்கு முறைகளுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கும் குஷ்பு.

"அம்பத்தஞ்சு வயசு...மூவாயிரம்ரூபாய் சம்பளம்..." என்று புலம்பியவாறு விலாசம் தெரியாமல் அந்தப் பங்களாவைத் தேடி அலையும் வெ. ஆ. மூர்த்தி.

இவர்களை வைத்துக் கொண்டு நகைச்சுவைச் சிலம்பம் ஆடியிருக்கிறார் கதாசிரியர். அதற்குத் துணை நிற்பவை... சிலேடையும் இரட்டை அர்த்தம் தொனிக்கும் வசனங்களும் அல்ல. சம்பவங்கள். அவற்றில் கையாளப்பட்டுள்ள எதிர்பாராத திருப்பங்கள்.

எடுத்த எடுப்பில் கொலை, சஸ்பென்ஸ் என்று தொடங்கினாலும் சத்யராஜின் அறிமுகத்தோடு சிரிப்பலைகளும் ஆரம்பமாகி விடுகின்றன. அவற்றுக்கு டானிக் ஏற்றுபவர் மனோரமா என்றால் பக்கவலுவாகப் பரிமளிக்கிறவர் சத்யராஜ்.

அங்கே பாட்டு வாத்தியாராக நிலைத்து நீடிப்பதை உறுதி செய்துகொள்ள வயதான கன்னியான மனோரமாவை அவர் முகஸ்துதி செய்யப் போக —

அதையே வேறு விதமாக எடுத்துக் கொள்ளும் மனோரமா, நரையோடிய தாடி, தலைமுடி இவற்றுடன் நடமாடும் சத்யராஜைத் தன் வயதுக்கேற்றவராக நினைத்துக் கொண்டு, நெஞ்சத்தில் சலனத்துக்கு இடமளித்துக் கல்யாண ஆசைகளை வளர்த்துக் கொள்ள —

இன்னொரு புறம் தாடியற்ற இளைஞர் சத்யராஜிடம் தன உள்ளத்தை குஷ்பு பறி கொடுத்துவிட —

இருவரையும் தம் அறையில் மாறி மாறிச் சந்திக்க நேரும் போது தாடி — மைனஸ் தாடி... தாடி — மைனஸ் தாடி என்று சத்யராஜ் தவித்துப் போக —

விரசத்துக்கு வாய்ப்பிருந்தும் எல்லை மீறிப் போகவில்லை. மாறாக, இயக்குனர் நிகழ்ச்சித் தொகுப்பில் இப்படிக் கையாளும் உத்திகள் திரைக் கதைக்குக் கூட்டியிருப்பது விறுவிறு.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய மற்றும் இரண்டு: காமெரா, இசை.

அழகாகச் சிரித்து அடக்கமாகப் பேசும் அந்த இரண்டு குழந்தைகள் பிரசாந்த் வாசு, நடாஷா இருவரும் அமர்ந்திருக்கும் மோட்டார் சைக்கிளின் சைட்கார் அவர்களுடன் பிய்த்துக் கொண்டு போய் லாரியில் மாட்டிக் கொண்டு அசுர வேகத்தில் செல்ல, அதை அசோக்குமார் படம் பிடித்திருக்கும்விதம்அசத்துகிறதுஎன்றால், அங்கங்கே அள்ளித் தெளித்துள்ள பாடல்களுக்கு இளையராஜா அமைத்துள்ள இசை தாளம் போட வைக்கிறது.

பலவீனங்கள் மனத்தில் பதிய அவகாசம் தராத விறுவிறுப்பு.

— சி. ஆர். கே.

“சினிமாவுக்கு உதவக் காத்திருக்கிறோம்; ஏற்க ஆளில்லை!”



• “தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தில் (NFDC) கடனுதவி பெற்றுப் படமெடுப்பதென்பது மிகவும் சிரமம் என்று கூறுகிறார்களே, உண்மைதானா?” என்று அதன் தலைவர் டி. வி. எஸ். ராஜுவைக் கேட்டபோது, “யார் சொன்னது அப்படி?” என்று விளக்க ஆரம்பித்தார்.

“குறைந்த பட்ஜெட்டில் ஒரு வித்தியாசமான — நிறைவான படம் எடுப்பதற்காக யார் வந்தாலும் இப்போது பன்னிரண்டரை லட்ச ரூபாய் வரை கடனுதவி செய்யக் காத்திருக்கிறோம். அவர்கள் செய்ய வேண்டியது ஸ்கிரிப்டை எங்களுக்குக் காட்ட வேண்டும் என்பதுதான். ஸ்கிரிப்ட் அற்புதமாக இருந்தாலோ அல்லது புகழ் பெற்ற டைரக்டர்களும், தயாரிப்பாளர்களும் உதவி கேட்டு வந்தாலோ நாங்கள் அவர்களிடம் எந்தவிதமான அடமானமும் கேட்காமல் — ஏன் ‘ஷ்யூரிடி’ கையெழுத்துக் கூடக் கேட்காமல் உதவி செய்யக் காத்திருக்கிறோம்.

“ஆனால் உண்மையில் நடப்பது என்ன? தமிழில் ‘திக்கற்ற பார்வதி’, ‘தாகம்’ ஆகிய இரண்டு படங்களுக்குப் பிறகு ‘மறுபக்கம்’ என்ற ஒரேயொரு படம்தான் எங்கள் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. தெலுங்கில் இப்போதுதான் எங்கள் உதவியுடன் ஒரு படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. உண்மையைச் சொன்னால், சமுதாய நோக்கு கொண்ட தரமான நல்ல படங்களுக்கு உதவி செய்யக் காத்துக் கொண்டிருக்கிறோம்; வாங்குவதற்குத்தான் ஆளில்லை!”

கூடன் வசதி அளிப்பது மட்டும் என். எஃப். டி. ஸி. யின் பணியல்ல. திரையரங்குகள் கட்ட உதவுவது; திரைப் படங்களின் ஏற்றுமதி, இறக்குமதி விநியோகம்; கச்சா ஃபிலிம் விநியோகத்தைக் கண்காணிப்பது; திரைப்பட விழாக்கள் நடத்துவது என்று பல பணிகள் இதற்கு உண்டு. சென்னையில் திரைப்படங்களை வீடியோ டேப்புகளுக்கு மாற்றும் நிறுவனமும் பம்பாயில் சப் டைட்டில்கள் போடும் நிறுவனமும் உருவாக்கியுள்ளது என். எஃப். டி. ஸி.

சந்திப்பு: **சலன்.**

நிருபர்: நீங்க எந்த விஷயத்துக்காவது குழம்பியதுண்டா?

நடிகை: அதையேன் கேட்கிறீங்க? பையனை கான்வென்டுல சேர்க்கலாமுன்னு போனால் இனிஷியல் கேட்டுட்டாங்க! எந்தக் கணவரோட இனிஷியலைக் கொடுக்கிறதுன்னு ரொம்பக் குழம்பிப் போயிட்டேன்!”

— பக்தவத்சலம்.



தலைப்பை மாற்ற வேண்டும்!



என் திரைக்கதை வசனம் படமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகத் தயாரிப்பாளரிடமிருந்து தகவல் வந்ததும் மகிழ்ச்சியில் திணறி விட்டேன். பிரயாணச் செலவு சேர்த்து அட்வான்ஸாக ஆறாயிரம் ரூபாய்க்குச் 'செக்' வந்ததைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போனேன்.

''தமிழ் அறிவின் ஆற்றலை வெளிப்படுத்தும் தெளிவான திரைக்கதையும் வார்த்தைக்கு வார்த்தை மெருகூட்டும் வசனமும் உங்கள் கதை, வசனத்தை ஏற்றுக்கொள்ளச் செய்து விட்டன. தமிழ் மணம் பரப்பும் உங்கள் எழுத்துத்தொண்டுக்கு என் மனமுவந்த பாராட்டுக்கள்'' என்ற கடிதம் மனப்பாடமாகி விட்டது.

பிரகாசமான எதிர்காலம் ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்குப் பிறந்தது. பெருமையும் மகிழ்ச்சியும் பொங்கிய வேளையில் பள்ளிப் பருவத்தில் எனக்குத் தமிழாசிரியராக இருந்த கணேசன் அவர்களை நன்றியுடன் நினைத்துக் கொண்டேன்.

அருமையாகக் கற்றுக் கொடுக்கும் கணேசன் சாருக்குப் பிடிக்காதது சந்திப் பிழை. 'அவனை கண்டேன்' 'சந்தன பேழை' என்று எழுதினால் தலையில் குட்டு விழும். ஒருமுறை குட்டு வாங்கினால் அநேகமாக மறுமுறை குட்டு வாங்க நேரிடாது. அந்த அளவுக்கு அச்சத்தின் காரணமாகச் சந்திப் பிழைகள் வராதபடி மிகவும் கவனமாக இருப்போம்.

சென்னை சென்றதும் தயாரிப்பாளரைச் சந்தித்தேன். முழுத் தொகைக்கும் உடனே 'செக்' கொடுத்தார்.

''ஒரு சின்ன விஷயம் சார்...'' என்றார் தயாரிப்பாளர்.

''என்ன சார்?''

''உங்கள் கதைக்கு நீங்கள் கொடுத்த தலைப்பை நான் மாற்ற வேண்டும்.''

''என்ன சார் காரணம்? வேறு தலைப்பு வேண்டுமா? நான்கைந்து தலைப்புகள் தருகிறேன். நீங்கள் வேண்டியதை 'செலக்ட்' செய்துக்குங்க.''

''அதுக்கில்லை சார். என் படங்களுக்குத் தலைப்புத் தருவதற்குத் தனியே ஒருவர் இருக்கிறார். அவர் தந்த பெயர்களை வைத்துத்தான் என் படங்கள் நூறு நாளைத் தாண்டுவதாக எனக்கு ஒரு 'சென்டிமெண்ட்.' தலைப்புக்கு மட்டும் நாலாயிரம் ரூபாய் கொடுப்பேன்.''

''அப்படியா!'' — வியப்பால் என் விழிகள் விரிந்தன.

''இன்னும் கொஞ்ச நேரத்தில் அவர் இங்கு வந்து உங்கள் கதைக்குத் தலைப்புத் தருவார்.''

அந்தத் தயாரிப்பாளரின் முந்திய படங்களை நினைத்துப் பார்த்தேன். 'சந்தன காற்று', 'வெண்கல பூட்டு', 'கறுப்பு குதிரை' 'குங்கும பொட்டு', 'கண்மணி பூங்கா'.

''மன்னிச்சிருங்க சார். உங்க படத்துப் பேரெல்லாம் சந்திப் பிழையோடு இருக்கு'' — தயக்கத்துடன் கூறினேன்.

''ஹோ, ஹோ''வென்று பலமாகச் சிரித்தபடி —

''இலக்கணமெல்லாம் பார்த்து எழுதினா 'நியூமராலஜி' அடிபட்டுப் போகுமே. சந்தியாவது, சிந்தியாவது — அதெல்லாம் தலைப்புத் தருகிறவர் கண்டுக்கிறதே இல்லை. இதோ, அவரே வந்துட்டாரே'' என்றார்.

வாசலைப் பார்த்தேன்.

தமிழாசிரியர் கணேசன் நின்று கொண்டிருந்தார்!

— தெ. சுந்தரமகாலிங்கம்.



"நானும் என்னென்னவோ கணக்குப் போட்டுப் போட்டுப் பார்க்கறேன்... இத்தனை எம். பிக்கள் குருப்பா பிரிஞ்சு வந்தா கட்சித் தாவல் சட்டம் பாதிக்குமா பாதிக்காதா? புரியலையே...!"

(படம்: இதயம்; முரளி, குழுவினர்)

எப்போதும் படங்களில் இடம்பெறாத வசனங்கள்!



"ஐயா இல்லாடி! கண்டுகினியா? எப்பபடியோ காஸ் சிலிண்டர் வாங்கியாந்துட்டேன், பாரு!"

(படம்: வெற்றிப்படிகள்; டிஸ்கோ சாந்தி ஜனகராஜ்)



''தமிழ்நாட்டிலே நல்ல மழை பெய்ஞ்சு குளம் குட்டையெல்லாம் ரொம்பி இருக்கிறது நிஜம்தான்; ஆனா அதுக்குத் தாமரைச் சின்னத்தோட ராமஜென்ம பூமி ரத யாத்திரை போனதுதான் காரணம்னு நீ சொல்றதுதான் வேடிக்கையா இருக்கு...''

(படம்: தையல்காரன்; ஐஸ்வர்யா, பார்த்திபன்)



''உனக்குப் புடிக்குதோ இல்லியோ, சந்திரசேகர் பிரதமராயிருக்கிற வரைக்கும் இதுதான் மாடர்ன் ஹேர் ஸ்டைல்!''

(படம்: தம்பிக்கு ஒரு பாட்டு: ஹரீஷ், பாலா)



சிவகாமியின் சபதம்

முப்பத்தேழாம் அத்தியாயம்

கண்ணபிரான்

முன் அத்தியாயத்தில் கூறியபடி, இதயத்தில் பெரிய பாரத்துடனே மடத்தின் வாசற்பக்கம் வந்த ஆயனர், தம் உள்ள நிலையை வெளிக்குக் காட்டாமல் சமாளித்துக் கொண்டு, சிவகாமியைப் பார்த்து, "குழந்தாய்! இப்பொழுதே நாம் ஊருக்குத் திரும்பி விடலாமல்லவா?" என்று கேட்டார்.

"கமலியைப் பார்த்துவிட்டுக் காலையில் போகலாம் அப்பா!" என்று சிவகாமி மறு மொழி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, கட கடவென்ற சத்தத்துடன் இரட்டைக்குதிரை பூட்டிய ரதம் ஒன்று அங்கே வந்து நின்றது. அதை ஓட்டி வந்த சாரதி ரதத்தின் முன் தட்டிலிருந்து குதித்து வந்து, மடத்து வாசலில் ஆயனரும் சிவகாமியும் நின்று கொண்டிருந்த இடத்தை அடைந்தான். அவன் நல்ல திடகாத்திர தேகமுடையவன். பிராயம் இருபத்தைந்து இருக்கும்.

"ஐயா! இங்கே மாமல்லபுரத்திலிருந்து ஆயனச் சிற்பியாரும் அவருடைய மகள் சிவகாமி அம்மையும் வந்திருக்கிறார்களாமே, நீங்கள் கண்டதுண்டோ?" என்று அவன் கேட்டான்.

"ஓகோ! கண்ணபிரானா? எங்களை யார் என்று தெரியவில்லையா, உனக்கு?" என்றார் ஆயனர்.

"அதுதானே தெரியவில்லை? இந்தச் சப்பை மூக்கையும் இந்த அகலக் காதையும் எங்கே பார்த்திருக்கிறேன்? நினைவு வரவில்லையே?" என்று கண்ணபிரான் தன் தலையில் ஒரு குட்டுக் குட்டிக் கொண்டு யோசித்தான்.

"என் அப்பனே! மண்டையை உடைத்துக் கொண்டு எங்கள் மேல் பழியைப் போடாதே! கமலி அப்புறம் எங்களை இலேசில் விடமாட்டாள். நீ தேடி வந்த ஆயனச் சிற்பியும் சிவகாமியும் நாங்கள் தான்" என்றார் ஆயனர்.

"அடாடாடா! இதை முன்னாலேயே சொல்லியிருக்கக் கூடாதா? எனக்கும் சந்தேகமாய்த்தானிருந்தது. ஆனால் 'கண்ணாற் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய் தீர விசாரிப்பதே மெய்' என்று கும்பகர்ணனுக்கு ஜாம்பவான் சொன்ன பிரகாரம்... இருக்கட்டும்; அப்படியென்றால், நீங்கள் தான் ஆயனச் சிற்பியாரும் அவருடைய மகள் சிவகாமியுமாக்கும்? ஆனால், உங்களில் ஆயனச் சிற்பி யார்? அவருடைய மகள் யார்?" என்று விகடகவியான அந்த ரதசாரதி கேட்டு விட்டு, அந்தி மாலையின் மங்கிய வெளிச்சத்தில் அவ்விருவர் முகங்களையும் மாறி மாறி உற்றுப் பார்த்தான்.

சிவகாமி கலகலவென்று நகைத்து விட்டு, "அண்ணா! நான்தான் சிவகாமி; இவர் என் அப்பா; நாம் நிற்பது பூலோகம்; மேலே இருப்பது ஆகாசம்; உங்கள் பெயர் கண்ணபிரான்; என் அக்கா கமலி. இப்போது எல்லாம் ஞாபகம் வந்ததா? அக்கா சௌக்கியமா? இன்று இராத்திரி உங்கள் வீட்டுக்கு வருவதாக எண்ணியிருந்தோம்" என்றாள்.

"ஓஹோ! அப்படியா? கும்பிடப் போன தெய்வம் விழுந்தடித்துக் குறுக்கே ஓடிவந்த கதையாக அல்லவா இருக்கிறது? நீங்கள் எங்கள் வீட்டுக்கு வருவதாக இருந்தீர்களா?"

"ஆமாம்; வரலாமா? கூடாதா?"

"ஒருவிதமாக யோசித்தால், வரலாம்; இன்னொரு விதமாக யோசித்தால் வரக் கூடாது."

"அப்பா! நாம் ஊருக்கே போகலாம்; புறப்படுங்கள்!" என்று கோபக் குரலில் சிவகாமி கூறினாள்.

"அம்மா! தாயே! அப்படிச் சொல்லக் கூடாது. கட்டாயம் வரவேண்டும். நான் இன்றைக்கு வீட்டை விட்டுக் கிளம்பிய போது கமலி என்ன சொன்னாள் தெரியுமா? 'இதோ பார்! இன்றைக்கு நாவுக்கரசர் மடலாயத்துக்கு ஆயனச் சிற்பியார் வருகிறாராம். அவருடன் என்னுடைய தோழி சிவகாமியும் வந்தாலும் வருவாள். இரண்டு பேரையும் அழைத்துக் கொண்டுதான் இராத்திரி நீ வீட்டுக்குத் திரும்பி வரவேண்டும்' என்றாள். நான் என்ன சொன்னேன் தெரியுமா? 'அவர்கள் பெரிய மனுஷாள், கமலி! நம்மைப் போன்ற ஏழைகள் வீட்டுக்கு வருவார்களா? வந்தால்தான் திரும்பிப் போவார்களா?' என்றேன். அதற்குக் கமலி 'நான் சாகக் கிடக்கிறேன் என்று சொல்லி அழைத்துவா!' என்றாள்...."

"அடாடா! கமலிக்கு ஏதாவது உடம்பு அசௌக்கியமா, என்ன?" என்று ஆயனர் கவலையுடன் கேட்டார்.

"ஆம், ஐயா! ஒரு வருஷமாகக் கமலி அவளுடைய தோழியைப் பார்க்காமல் கவலைப்பட்டுக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிராணனை விட்டுக் கொண்டிருக்கிறாள். முக்கால் பிராணன் ஏற்கெனவே போய்விட்டது. மீதியும் போவதற்குள் நீங்கள் வந்தால் நல்லது."

"அப்படியானால், உடனே கிளம்பலாம். அதற்குள்ளே இங்கே ஜனக் கூட்டம்கூடிவிட்டது" என்றாள் சிவகாமி.

உண்மையிலேயே அங்கே கூட்டம் கூடி விட்டது. நகரத்தின் அந்த நெருக்கடியான பகுதியில் ஆயனரும் சிவகாமியும் அரண்மனை ரத சாரதியுடன் பேசிக் கொண்டிருக்கும் காட்சி ஜனக் கூட்டத்தைக் கவர்ந்து இழுத்ததில் ஆச்சரியம் என்ன?

ஆயனரையும் சிவகாமியையும் கண்ணபிரான் தான் கொண்டு வந்திருந்த ரதத்தில் ஏறிக் கொள்ளும்படிச் செய்தான். காஞ்சிமா நகரின் விசாலமான தேரோடும் வீதிகளில் இரண்டு குதிரை பூட்டிய அந்த அழகிய அரண்மனை ரதம் பல்லவ ராஜ்யத்தின் சிறந்த ரத சாரதியினால் ஓட்டப்பட்டு விரைந்து சென்றது.

ரதம் போய்க் கொண்டிருக்கையில் சிவகாமி "அண்ணா! உங்கள் வீட்டுக்கு வருகிறோம் என்று நான் சொன்னதற்கு 'இன்னொரு விதத்தில் யோசித்தால் வரக் கூடாது' என்று சொன்னீர்களே! அது என்ன?" என்று கேட்டாள்.

"தங்கச்சி! மடத்திலேயிருந்து குமார சக்கரவர்த்தியை அழைத்துப் போனேனல்லவா? அரண்மனை வாசலில் அவர் இறங்கியதும் என்னைப் பார்த்து, 'கண்ணா! ரதத்தை ஓட்டிக் கொண்டு மடத்துக்குப் போ! அங்கே ஆயனரும் அவர் மகளும் இருப்பார்கள். அவர்களை ரதத்தில் ஏற்றிக் கொண்டு போய் மாமல்லபுரத்தில் விட்டுவிட்டு வா! அவர்கள் வேண்டாம் என்று சொன்னாலும் கேட்காதே!' என்று கட்டளையிட்டார். குமார சக்கரவர்த்தி அவ்விதம் கட்டளையிட்டிருக்கும் போது, நம்முடைய வீட்டுக்கு அழைத்துப் போகலாமா என்று யோசித்தேன்" என்றான் கண்ணபிரான்.

"சுற்றி வளைத்துப் பீடிகை போடாமல் உங்களால் ஒன்றும் சொல்ல முடியாதோ?" என்று சிவகாமி கேட்டாள்.

"முடியாது தங்கச்சி, முடியாது! அதற்குக் காரணமும் உண்டு. முன்னொரு காலத்தில் நான் சின்னக் குழந்தையாயிருந்த போது...."

"நிறுத்துங்கள்! நான் அதைக் கேட்கவில்லை. அவசரமாகக் குமார சக்கரவர்த்தி மடத்திலிருந்து போனாரே, ஏதாவது விசேஷமான செய்தி உண்டோ என்று கேட்டேன்."

"மதுரையிலிருந்து தூதர்கள் வந்திருக்கிறார்கள்."

மதுரையிலிருந்து தூதர்கள் என்றதும் சிவகாமிக்குத் தான் முன்னம் கேள்விப்பட்ட திருமணத் தூது விஷயம் ஞாபகம் வந்தது.

எனவே, "தூதர்கள் என்ன செய்தி கொண்டு வந்தார்கள்?" என்று கவலை தொனித்த குரலில் கேட்டாள்.

"அந்த மாதிரி இராஜாங்க விஷயங்களையெல்லாம் நான் கவனிப்பதில்லை, தங்கச்சி!" என்றான் கண்ணபிரான்.

அதைக் கேட்ட ஆயனர், "ரொம்ப நல்ல காரியம், தம்பி! அரண்மனைச் சேவகத்தில் வெகு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நமக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களைக் காதிலேயே போட்டுக் கொள்ளக்கூடாது" என்றார்.



அப்போது ரதம் தெற்கு ராஜவீதியில் அரண்மனையின் முன் வாசலைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தது.

வீதியின் ஒரு பக்கத்தை முழுவதும் வியாபித்திருந்த அரண்மனையின் வெளி மதிலையும், முன் வாசற் கோபுரத்தையும், அதைக் காவல் புரிந்த வீரர்களையும் உள்ளே தெரிந்த நெடிய பெரிய தாவள்யமான சுவர்களையும், படிப்படியாகப் பின்னால் உயர்ந்து கொண்டு போன உப்பரிகை மாடங்களையும் சிவகாமி பார்த்தாள். தன்னையும் தன்னுடைய இதயத்தைக் கவர்ந்த சுகுமாரரையும் பிரித்துக் கொண்டு இத்தனை மதில் சுவர்களும் மாடகூடங்களும் தடையாக நிற்கின்றன என்பதை எண்ணி ஒரு நெடிய பெருமூச்சு விட்டாள்.

முப்பத்தெட்டாம் அத்தியாயம்

கமலி

காஞ்சிமாநகரில் சக்கரவர்த்தியின் பிரதான அரண்மனைக்குப் பின்புறத்தில் விஸ்தாரமான பூந்தோட்டம் இருந்தது.

பூந்தோட்டத்தின் பின்புற மதிற்சுவரையொட்டிச் சில சிறு கட்டடங்கள் இருந்தன. அவற்றில் சில குதிரை லாயங்கள்; சில ரதங்களை நிறுத்தும் கொட்டடிகள்; மற்றவை ரத சாரதிகளும் தோட்டக்காரர்களும் வசித்த வீடுகள்.

அந்த வீடுகளில் ஒன்றுக்கு முன்னால், கண்ணபிரான் ஓட்டிக் கொண்டு வந்த ரதம் நின்றது. ரதத்தின் சத்தத்தைக் கேட்டு, வீட்டுக்குள்ளேயிருந்து ஒரு பெண் குதூகலமாகக் குதித்துக் கொண்டு ஓடி வந்தாள்.

''கமலி! யாரை அழைத்து வந்திருக்கிறேன், பார்!'' என்று சொல்லிக் கொண்டே கண்ணபிரான் ரதத்திலிருந்து குதித்தான்.


அதே சமயத்தில் ரதத்திலிருந்து சிவகாமி இறங்குவதைப் பார்த்த கமலி, ஒரே

பாய்ச்சலாகப் பாய்ந்து சென்று சிவகாமியை ஆர்வத்துடன் கட்டிக் கொண்டாள்.

அப்போது வீட்டிற்குள்ளேயிருந்து ஒரு பெரியவர் வந்தார்.

''அப்பா! யார் வந்திருக்கிறார் பாருங்கள்!'' என்றான் கண்ணபிரான். அந்தப் பெரியவர் உற்றுப் பார்த்துவிட்டு, ''வாருங்கள், ஐயா!'' என்று சொல்லிக் கொண்டு ஆயனரின் அருகில் சென்றார்.

பெரியவரும் ஆயனரும் பேசிக் கொண்டே வீட்டுத் திண்ணையில் அமர்ந்தார்கள். கமலியும் சிவகாமியும் உள்ளே போனார்கள்.



சிவகாமியும் கமலியும் குழந்தைப்பிராயத்திலிருந்து தோழிகள். ஆயனர் காஞ்சியில் இருந்த காலத்தில் அவருடைய வீட்டுக்கு அடுத்த வீட்டில் கமலியின் பெற்றோர்கள் வசித்தார்கள். சிவகாமி குழந்தையாயிருந்த போதே, அவளைக் காட்டிலும் ஒன்றரை வயது மூத்தவளான கமலி சிவகாமியைத் தன் மடியில் வைத்துக் கொண்டு, ''தங்கச்சி!'' என்று அருமையாக அழைத்துச் சீராட்டுவாள்.

குழந்தை சிவகாமியும், ''அக்கா! அக்கா!'' என்று மழலைச் சொல்லில் குழறுவாள்.

இவ்வாறு ஆரம்பித்த அக்குழந்தைகளின் சிநேகமும் நாளுக்கு நாள் வளர்ந்து முதிர்ந்துவந்தது. ஆயனர் காட்டுக்குள்ளே சென்று வீடு கட்டிக் கொண்டு வசிக்கத் தொடங்கிய பிறகு கமலி அடிக்கடி அங்கு வந்து மாதக்கணக்கில் தங்கியிருப்பாள்.

சிவகாமி ஆட்டம் பயிலும் போதெல்லாம் கமலி அவள் எதிரில் இருந்து இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பாள். அவளுடைய ஆட்டத் திறமையைப் பாராட்டுவாள். ''என் தங்கச்சிக்கு இணை ஈரேழு பதினாலு உலகத்திலும் கிடையாது!'' என்பாள். ஆயனருக்கு அடுத்தபடியாகச் சிவகாமிக்கு ஆட்டக் கலையில் ஊக்கமளித்தவள் கமலி என்றுதான் சொல்ல வேண்டும்.

கமலியின் தகப்பனார் காஞ்சியில் பெயர் பெற்ற குதிரை வியாபாரி. அரேபியா முதலான வெளி தேசங்களிலிருந்து அவர் குதிரைகள் தருவிப்பார். மாமல்லபுரத்துத் துறை முகத்தில் கப்பலில் வந்து குதிரைகள் இறங்கும். அவற்றைக் காஞ்சிக்குக் கொண்டு வருவார். முதலில் அரண்மனைக் குதிரை லாயத்தின் தலைவரும் பல்லவ சைனியத்தின் குதிரைப்படைத் தலைவரும் வந்து, புதிதாகத் தருவிக்கப்பட்ட குதிரைகளைப் பார்ப்பார்கள். அவர்கள் தங்களுக்கு வேண்டியவற்றை வாங்கிக்கொண்டது போக மற்றக் குதிரைகளைத்தான் பொது ஜனங்களுக்கு விற்கலாம்.

இதன் காரணமாக, அரண்மனைக் குதிரை லாயத்தின் தலைவர் அடிக்கடி கமலியின் தந்தையைச் சந்திப்பதற்காக அவருடைய வீட்டுக்கு வருவதுண்டு. சில சமயம் அவருடன் அவருடைய மகனும் வருவான். அந்த வாலிபன் பெயர்தான் கண்ணபிரான்.

தந்தைமார்கள் இருவரும் குதிரைப் பரிவர்த்தனை விஷயமாகப் பேசிக் கொண்டிருக்கையில், மகனுக்கும் மகளுக்கும் இடையே இருதய பரிவர்த்தனை நடந்து கொண்டிருந்தது.

இரு குடும்பத்தாருக்கும் விஷயம் தெரிந்த போது, கண்ணபிரானுக்கும் கமலிக்கும் கல்யாணம் செய்து வைத்தார்கள்.

இது நடந்து வருஷம் ஒன்றரை ஆயிற்று. இந்த ஒன்றரை வருஷமும் சிவகாமியும் கமலியும் சந்திக்கவில்லை என்றாலும், அவர்கள் ஒருவரை ஒருவர் நினையாத நாள் கிடையாது.

இரவு உணவு அருந்திய பின்னர், ஆயனரும் அரண்மனையின் அகல்பாலரும் வாசல் திண்ணையில் காற்றோட்டமாகப் படுத்துக் கொண்டு யுத்த நிலைமையைப் பற்றிப் பேசத் தொடங்கினார்கள்.

வீட்டுக்குள்ளே அரண்மனைப் பூந்தோட்டத்தை அடுத்திருந்த அறையில் சிவகாமியும் கமலியும் படுத்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் யுத்தத்தைப் பற்றிப் பேசவில்லை. கமலியின் இல்வாழ்க்கைதான் அவர்கள் சம்பாஷணையில் முக்கிய விஷயமாக இருந்தது. இடையிடையே 'கலீர்' 'கலீர்' என்று அவர்கள் குதூகலமாகச் சிரிக்கும் சப்தம் கேட்டது.

இரவு ஒன்றரை ஜாமத்துக்குமேல் ஆன போது, வாசல் திண்ணையிலிருந்து ஆயனர், ''அம்மா! சிவகாமி! உதயத்திற்கு முன்னால் நாம் புறப்பட வேண்டும். பேசியது போதும்; தூங்கு!'' என்றார்.

கமலியும் சிவகாமியும் உடனே கண்ணை மூடிக் கொண்டு தூங்குவதற்குப் பிரயத்தனம் செய்தார்கள்.

சிறிது நேரம் ஆனதும், சிவகாமி தூங்கிவிட்டதாக எண்ணிக் கொண்டு கமலி சத்தம் செய்யாமல் எழுந்திருந்து அந்த அறையின் ஒரு பக்கத்துக் கதவைத் திறந்து கொண்டு அடுத்த அறைக்குள் சென்றாள்.

சிவகாமி கண்களை மூடிக் கொண்டிருந்தாளே தவிர உண்மையில் தூங்கவில்லை. அவளுடைய உள்ளத்தில் எத்தனை எத்தனையோ எண்ணங்கள் அலைமேல் அலை எறிந்து தோன்றிக் கொண்டிருந்தன.

கமலிக்குக் கண்ணபிரான்மேல் காதல் உண்டான நாளிலிருந்து அவள் தன்னுடைய அந்தரங்கத்தையெல்லாம் சிவகாமியிடம் அடிக்கடி சொல்வதுண்டு.

ஆரம்பத்திலிருந்தே கமலியின் காதல்



அருள்வாக்கு

கூரையில் எத்தனை தரம் உடைத்தாலும் பத்து நாட்களுக்கு ஒரு தரம் கரையான் புற்று தோன்றிக் கொண்டேதான் இருக்கும். கூரை மூங்கிலுக்குள் இருக்கிற தாய்ப் பூச்சியை எடுத்துப் போட்டால்தான் அப்புறம் புற்று முளைக்காது. இந்த மாதிரி மற்ற ஸாதனை, மார்க்கம் எதில் போனாலும் சரீரம், துக்கம் மறுபடி மறுபடி முளைத்துக் கொண்டுதான் இருக்கும். இதற்கெல்லாம் ஆதி காரணமான தாய்ப்பூச்சியான த்வைதப் பூச்சியை எடுத்துப் போட்டால்தான், நமக்கு வேறான இன்னொன்றால் ஏற்படும் காமமும், க்ரோதமும், இதுகளை அனுபவிப்பதற்காக மறுபடி மறுபடி உடம்பு எடுப்பதும் தீர்ந்து போகும்.

இந்த நிலைக்கு வருவதற்கு ஸுலபமான ஸாதனம் பக்தி உபாஸனை என்று அப்பைய தீக்ஷிதர் சொல்லியிருக்கிறார். அதை எல்லோரும் அனுசரித்து அத்வைத ஸித்தியை அடைய வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

ஆனந்தமாயிருந்தது. எவ்விதத் துக்கமோ வேதனையோ அவள் மனத்தில் ஏற்படவில்லை. அந்த நாட்களில் அவளுடைய பேச்சு ஒரே குதூகலமாகவும் எக்களிப்பாகவுமே இருந்து வந்தது.

கல்யாணத்திற்குப் பிறகு அந்தத் தம்பதியின் இல்வாழ்க்கையும் அவ்விதமே குதூகலமாயிருக்கிறதென்பதை இப்போது சிவகாமி தெரிந்து கொண்டாள்.

ஆனால், தன்னுடைய காதல் மட்டும் ஏன் இவ்வளவு வித்தியாசமாக இருக்க வேண்டும்? அதில் எத்தனை வேதனை? எத்தனை ஆத்திரம்? எத்தனை கோபதாபம்?

கமலியின் குதூகலமான காதலுக்கும், தன்னுடைய வேதனைமயமான காதலுக்கும் உள்ள வித்தியாசத்தை எண்ணிப் பார்க்கப் பார்க்க தனக்குத் தகுதியில்லாத இடத்தில் காதலைச் செலுத்தியது தான் தன்னுடைய துன்பங்களுக்கெல்லாம் காரணம் என்று சிவகாமிக்குத் தோன்றியது.

அவரோ பெரிய சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்துக்கு உரியவர்; நாமோ கல்லில் உளியினால் வேலை செய்யும் சிற்பியின் மகள். அவருடைய காதலுக்கு நாம் ஆசைப்படுவது பெரிய பிசகுதான். ஆனால் இந்தப் பிசகுக்குக் காரணம் யார்?

இந்த ஏழைச் சிற்பியின் மகளைத் தேடிக் கொண்டு அவர் தானே வந்தார்? ஒரு கவலையுமின்றிக் காட்டில் துள்ளி விளையாடும் மானைப்போல் குதூகலமாக ஆடிப்பாடிக் கொண்டிருந்த அபலைப் பெண்ணின் உள்ளத்தில் அவர்தானே ஆசைத் தீயை மூட்டினார்? ஆஹா அந்த ஆசையானது இப்போது இப்படிப் பெருநெருப்பாய் மூண்டுவிட்டதே? உடம்பையும் உள்ளத்தையும் இப்படித் தகிக்கின்றதே?

சற்று நேரம் புரண்டு புரண்டு பார்த்தும் தூக்கம் வராமற் போகவே, சிவகாமி படுக்கையை விட்டு எழுந்தாள். அந்த அறையின் பின்புறச் சுவரிலிருந்த பலகணியின் மாடத்தில் உட்கார்ந்தாள். அவள் எதிர்பார்த்தபடியே பலகணியின் வழியாகப் பங்குனி மாதத்து இளந்தென்றல் ஜிலுஜிலுவென்று வந்து கொண்டிருந்தது. அது சும்மா வரவில்லை. அரண்மனைப் பூந்தோட்டத்திலிருந்த சண்பக மரங்களில் நுழைந்தும், மல்லிகைச் செடிகளின் மீது தவழ்ந்தும் அந்த மலர்களின் இன்ப நறுமணத்தை அளாவிக் கொண்டு வந்தது.

அவ்விதம் சண்பமும் மல்லிகையும் கலந்து உண்டான ஸுகந்தமானது சிவகாமியின் உள்ளத்தில் ஏதோ தெளிவில்லாத பழைய ஞாபகங்களை உண்டாக்கிற்று. எத்தனை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால், ஜன்ம ஜன்மாந்தரங்களில் இதே விதமான நறுமணத்தை அவள் நுகர்ந்தது போலவும், அந்தக் காலங்களிலும் இதே விதமான இன்ப வேதனை அவள் மனத்தில் குடிகொண்டிருந்தது போலவும், மங்கிய நினைவுகள் உண்டாயின. தனது அன்பைக் கவர்ந்து உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஆருயிர்க் காதலன் தனக்கு வெகு சமீபத்தில் இருந்தும் அவனை அடைய முடியாதிருப்பது போலவும், இருவருக்கும் இடையில் இன்னதென்று தெரியாத இடையூறுகள் முளைத்துப் பெரிய கரிய நிழல் உருவங்கள் எடுத்து நிற்பது போலவும் மனத்தில் பிரமைகள் உண்டாயின.

(தொடரும்)

க்ளியரெஸில் கொண்டு தினமும் ஹோம்வொர்க் செய்தால் நண்பர்களிடையேயும் ஃபர்ஸ்ட் க்ளாஸ் மதிப்பெண் பெறுவது மிகவும் சுலபம்.



காரணம் க்ளியரெஸில் சருமம் ஒளிர் அதிகத் தெளிவான சருமம்.

காலேஜில் பிரபலமாக வேண்டுமென்றால் பின்னணியில் இருந்து பிரயோசனம் இல்லை. நாலு பேருக்கிடையே தனித்து விளங்கிட உங்களுக்குத் தேவை அதிகத்தெளிவான உருவம் அதாவது க்ளியரெஸில் சருமம்.

க்ளியரெஸில் பருக்களில் மூன்று வழிகளில் ஆற்றலுடன் செயல்புரிகிறது.

ஒன்று — பருவுக்குள் ஊடுருவிச் செல்கிறது. இரண்டு — கூடுதல் எண்ணெய்ப் பசையை நீக்குகிறது. மூன்று — பருவை காயவைத்துப்





போக்குகிறது.

பருக்களுக்கு சிகிச்சை அளிப்பதில் க்ளியரெஸில்தான் உலகிலேயே முதன்மையானது என்பது இதனால் தெள்ளத்தெளிவாகிறது.

க்ளியரெஸில் உபயோகியுங்கள் நண்பர் குழாம் அமைத்துக் கொள்ளுங்கள்.



பருக்களுக்கு சிகிச்சை அளிப்பதில் உலகிலேயே முதன்மையானது.

நடிக்கும் வீடுகள்...



அப்பு ஹவுஸ்
ஆனந்த் ஹவுஸ்
ராகம் ஹவுஸ்
துபாய் ஹவுஸ்
சிங்கப்பூர் ஹவுஸ்
கல்பனா ஹவுஸ்

இப்படி நிறைய இருக்கின்றன சென்னையில். அத்தனையும் சினிமாவில் நடிக்கிற வீடுகள். அதாவது படப்பிடிப்புக்கு விடப்படும் வீடுகள்.

''முன்பெல்லாம், ஸ்டுடியோக்களிலேயே வீடு மாதிரி பிரம்மாண்டமாய் செட் போட்டுப் படமெடுப்பார்கள். அவற்றை சினிமாக்களில் பார்த்துப் பார்த்து போரடித்து விடவே, இப்போது நிஜ பங்களாக்களுக்கே போகிறார்கள். மேலும் செட் போடுவது இப்போது காஸ்ட்லி ஆகி விட்டது. ஷூட்டிங் நாட்களுக்கு மட்டும் வாடகைக்கு வீடு எடுப்பது மலிவு...'' என்றார் அவுட்டோர் யூனிட்காரர் ஒருவர்.

இப்படிப்பட்ட படப்பிடிப்புகள் அதிகமாகி விட்டதால் இப்போது இந்த வீடுகள் கூட கால்ஷீட்களின் அடிப்படையிலேயே வாடகைக்கு விடப்படுகின்றன.

இந்த பங்களாக்கள் படப்பிடிப்புக்குத் தகுந்தாற்போல் பிரம்மாண்டமான சோபா செட்டுகள், அலங்கார விளக்குகள் இன்ன பிற சமாசாரங்களுடன் மிக ஆடம்பரமாய் உள்ளன. இத்தகைய பங்களாக்களில் சமையலறைக் காட்சிகள் முதல் முதலிரவுக் காட்சிகள் வரை அனைத்துமே எடுக்கப்படுகின்றன என்றாலும், சில வீடுகளில் சண்டைக் காட்சிகளையும், சாவுக் காட்சிகளையும் எடுக்க அனுமதிக்க மாட்டார்கள். அப்படியே சண்டைக் காட்சிகளைப் படம் பிடிக்க அனுமதிக்கப்படும் பட்சத்தில், வீட்டுக்காரர், தம் வீட்டுப் பொருட்களைப் பயன்படுத்த அனுமதிக்க மாட்டார். மேஜை, நாற்காலி, கண்ணாடி, விளக்குகள் என சண்டைக் காட்சியின் 'மெனு' அத்தனையையும் சினிமாக் கம்பெனிக்காரர்கள் தாமாகவே கொண்டு வந்து 'சண்டை போட்டு' உடைத்து, ஷூட்டிங்கை முடித்துக்கொண்டு எல்லாவற்றையும் வாரிப் போட்டுக்கொண்டு, போய் விடுவார்கள்.

''ஒருமுறை என் வீட்டைப் படப்பிடிப்புக்கு விட்ட போது, 'வீட்டினுடைய, டிராயிங் ஹாலில், நெருப்புப் பற்றி எரிவது போன்ற க்ளைமாக்ஸ் காட்சியொன்றை ஷூட் செய்ய வேண்டும்' என்று டைரக்டர் அனுமதி கேட்டார். நான் அதற்கு அனுமதிக்கவில்லை. படம் ரிலீஸான பிறகு பார்த்தால் எங்கள் வீட்டு டிராயிங் ரூம் எரிவது போல் காட்சி! நாம்தான் அனுமதி தரவில்லையே! அப்புறம் எப்படி இந்தக் காட்சியை எடுத்தார்கள் என்று ஒரே ஆச்சரியம்! டைரக்டருக்குப் போன் செய்து, கேட்டேன். அவர், கதைப்படி காட்சியை எடுத்தாக வேண்டும். என்ன செய்வது? ஆர்ட் டைரக்டரை அழைத்து வந்து உங்கள் வீட்டைக் காட்டி உங்கள் டிராயிங் ஹால் போலவே தத்ரூபமாய் செட் போடச் செய்து, அங்கே நெருப்பு வைத்து, ஷூட்டிங்கை நடத்தினோம்...' என்று விளக்கம் அளித்தார்.'' இப்படி ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தார் அண்ணா நகரில் உள்ள ராகம் ஹவுஸின் சொந்தக்காரர்.

பெரிய பெரிய பங்களாக்களில்தான் படப்பிடிப்பு நடத்தப்படுகிறது என்று இல்லை. சாதாரண வீடுகளிலும் நடத்தப்படுகின்றன. தி. நகரில் உள்ள காமகோடி ஹவுஸ் என்பது, 1912ம் ஆண்டு கட்டப்பட்ட பழங்காலத்து, மத்தியதரக் குடும்பங்கள் வசிக்கிற வீடு. அங்கே இதுவரை சுமார் தொண்ணூறு படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. வீட்டுக்காரரான லீலா சொல்கிறார்.

''பாரதிராஜா, பாலசந்தர் போன்றவர்களால் சென்டிமென்ட்டலாய், ராசியான இடம் என்று கருதப்படும் வீடு எங்கள் வீடு. பாரதிராஜாவின் சிவப்பு ரோஜாக்களுக்காகத்தான், முதலில் வீட்டைப் படப்பிடிப்புக்கு விட்டோம். சமீபத்தில் வெளியான 'ஒரு வீடு — இரு வாசல்' வரை பல வெற்றிப் படங்கள் இங்கே எடுக்கப்பட்டுள்ளன. ஒரு சுவாரஸ்யமான சம்பவம். 'கூட்டுப் புழுக்கள்' என்ற படம் கூட்டுக் குடும்பம் பற்றின கதையைக் கொண்டது. எட்டுக் குடித்தனங்கள் கொண்ட வீடுதான் கதைக்கு அடிப்படை. அதனால் இந்த வீட்டின் மாடியில் ஒரு செட் போட்டு, இன்னும் மேலேயுமாய் எட்டுக் குடித்தனங்கள் இருப்பதாக வைத்துப் படப்பிடிப்பு நடந்தது. மேலே, ஆர்ட் டைரக்டர் புவனா போட்டிருந்த செட், மிக தத்ரூபமாய் இருந்தது. படப்



* லீலாவின் வீடு



• ஹேமமாலினி

திரைக்குப் பின்னால் நடிப்பவர்கள்!

முன்பெல்லாம் படப்பிடிப்பின் போது பேசப்படும் வசனங்கள் படப்பிடிப்போடு சேர்ந்தே நேரடியாக ஒலிப்பதிவு செய்யப்பட்டன. தொழில் நுட்பம் முன்னேற முன்னேற, இப்போது நிலைமை முற்றிலுமாக மாறிவிட்டது. படப்பிடிப்பெல்லாம் முடிந்த பிறகுதான் வசனங்கள் டப்பிங் மூலம் ஒலிப்பதிவு செய்யப்படுகின்றன. படப்பிடிப்பு மாதிரியே டப்பிங்கும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகி விட்டது. சொல்லப் போனால் படத்துக்கு மேலும் மெருகூட்டும் ஒரு விஷயமாகிவிட்டது டப்பிங் கலை. இதனால் கட்டைக்குரல் கொண்ட கதாநாயகிகளுக்குக் கூட வேறொருவரைக் கொண்டு இனிமையான குரல் கொடுத்து விடுகிறார்கள். மேலும் சில சமயம் உணர்ச்சிகரமாக நடிக்கத் தெரிந்த ஒரு நடிகைக்கு உணர்ச்சியோடு பேச வராது. அதனால் தான் பாரதிராஜா கூட, "ஷூட்டிங்கில் முகபாவங்களைச் சரியாகப் படம்பிடித்துக் கொண்டு, பிறகு டப்பிங் மூலம்தான் அப்படத்துக்கே உயிர் கொடுக்கிறேன்" என்று கூறியிருக்கிறார். அதே நேரத்தில் படத்தைப் பாழ்படுத்தவும் டப்பிங் காரணமாகக் கூடும்! சரியாகச் செய்யப்படவில்லை எனில் உதட்டசைவுகள் ஒரு மாதிரியும் பேச்சு வேறாகவும் இருந்து ரசிகர்களுக்கு வெறுப்பு தோன்றும். இதைத் தவிர்க்க நுணுக்கமான 'டைமிங் சென்ஸ்' வேண்டும். இல்லாவிட்டால் தரக்குறைவான டப்பிங் காரணமாகவே படம் டப்பாவாகிவிடக் கூடும்!

நடிப்பது மாதிரி டப்பிங் குரல் கொடுப்பதும் கஷ்டமானதுதானா? பிரபலமான சிலநடிகைகள் கூட இப்போது புதிய நாயகிகளுக்கு டப்பிங் கொடுக்கிறார்களே, அது எந்த அளவுக்குப் படத்தின் மெருகுக்கு உதவுகிறது, அல்லது பாதிக்கிறது? இந்தக் கேள்விகளுக்குப் பிரபலமான பல கதாநாயகிகளுக்கும் டப்பிங் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் திருமதி ஹேமமாலினி பதிலளிக்கிறார்:

"படங்களில் நாயகிகள் காட்டும் முகபாவங்கள் — காட்சிகளின் சூழ்நிலைகளுக்குத் தகுந்த மாதிரி குரலிலும் உணர்ச்சிகளையும் ஏற்ற இறக்கங்களையும் கொண்டுவர வேண்டும். ஆக, டப்பிங்கிலும் நாங்கள் குரல் மூலம் நடித்துத்தான் ஆக வேண்டும். ஒரு நடிகை தனக்கு ஏற்ற ஒரு கேரக்டர் தரப்பட்டு அதில் நடிக்கிறார். ஆனால் டப்பிங் ஆர்டிஸ்டோ பல்வேறு நடிகைகளின் இடத்தில் நின்று அவர்கள் அனைவருக்கும் ஏற்ற கேரெக்டர்களாக மாறிக் குரல் கொடுக்கிறார். இது எவ்வளவு கஷ்டம் என்று சற்று யோசித்தால் புரியும். உதாரணமாக நான் கௌதமி, ரேகா என்று கதாநாயகிகளுக்கு மட்டுமின்றி, சில்க், டிஸ்கோ சாந்தி போன்ற கவர்ச்சி நடிகைகளுக்காகவும், கமலா காமேஷ், ஜானகி போன்ற தாய் கேரக்டர்களுக்கும் பேசுகிறேன். ஒவ்வொரு கேரக்டருக்கும் ஏற்ப உணர்ச்சிகளையும் குரலையும் மாற்றிக் கொள்கிறேன். படத்தில் அந்தந்தக் கேரக்டர்கள் சொந்தக் குரலில் பேசுவது போலவே இருக்கும்.

"ஏற்கெனவே பிரபலமான நடிகையர் டப்பிங் குரல் கொடுக்கும் போது, அவர்களுடைய குரல் ரசிகர்களுக்கு ஏற்கெனவே பழகி இருப்பதால், திரையிலும் அவர்களுடைய குரல் தனியாகத் தெரியும்; கதையின் நாயகியோடு ஒன்றாது. இதனால் படத்தின் மெருகு குறையவும் வாய்ப்பிருக்கிறது. எனவே, என்னைக் கேட்டால், பிரபலமானவர்கள் மற்றவர்களுக்கு டப்பிங் குரல் கொடுப்பது சரியில்லை என்றுதான் சொல்வேன்.

"முடிந்தவரை அந்தந்த நடிக — நடிகையரே அவரவருக்கும் டப்பிங் குரல் கொடுப்பதுதான் படத்தின் மெருகுக்கு மிகவும் சிறந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் அது சாத்தியப்படாமல் போகும் போதுதான் என் போன்றவர்களை அணுக வேண்டும்."

சந்திப்பு: அசோக்

பிடிப்பின் போது, வீட்டை புக் பண்ண வந்த வேறு கம்பெனியைச் சேர்ந்த ஒருவர், 'என்னம்மா! வீட்டில் மாடியெல்லாம் கட்டி விட்டீர்களா?' என்று கேட்டார். அந்த அளவுக்கு செட் தத்ரூபமாய் இருந்ததைக் கண்டு பலரும் அதிசயித்துப் போய் விட்டார்கள்" என்ற லீலா இன்னொரு சம்பவத்தையும் கூறினார்.

இவருடைய வீட்டில் 'உன்னிடத்தில் நான்' ஷூட்டிங் நடந்து கொண்டிருந்த போது, ஒரு கதாபாத்திரத்தின் மனைவியாய் நடிக்க ஒரு பெண்மணி தேவைப்பட்டாராம். இயக்குனர், லீலாவையே நடிக்கும்படி கேட்க, இவரும் நடித்து விட்டார். 'நடிக்கிற வாய்ப்பு வீடு தேடி வந்தது' என்பது இவருக்குத்தான் மிகப் பொருத்தம்!

— மௌஷ்மி

படங்கள்: யோகா





நட்சத்திரங்களை ஜொலிக்க வைக்கும் காஸ்ட்யூம் கலைஞர்கள்







தீபாவளிக்கு நேரத்தோடு சட்டை தைத்துத் தரவில்லை என்றால் தையல்காரர் மீது கோபப்படுகிறோம். ஆனால் பாவம், கடைசி நிமிஷத்தில் அவர் எத்தனை பேருக்கு ஆடைகள் தைத்துத் தரவேண்டிய நெருக்கடியில் சிக்கியிருக்கிறார் என்று நாம் யோசிப்பதில்லை. திரை உலகின் காஸ்ட்யூம் டிசைனர் களுக்கோ தினந்தோறும் தீபாவளி தான்! ஒரு குரூப் டான்ஸ் என்றால்









பிரதான நடன ஆர்ட்டிஸ்ட் தவிர, பன்னிரண்டு பேருக்கு இரண்டு அல்லது மூன்று புதுமையான டிசைன்களில் உடைகள் தைக்க வேண்டும். நாளை ஷூட்டிங் என்றால் இன்றைக்குச் சொல்வார்கள். ஒரே இரவில் 40 உடைகள் — ஒவ்வொன்றும் தனித்தனி அளவுகளில் — தைக்க வேண்



• ஆசீர்வாதம்

டும் என்றால்...? அளவெடுப்பது, தைப்பது ஒருபுறமிருக்க, எத்தனை விதமான டிசைன்களை உருவாக்க வேண்டியிருக்கிறது! சினிமா நட்சத்திரங்களின் பிரபை வளர காஸ்ட்யூம் டிசைனர்களின் பங்கு மகத்தானது.

''சாதாரணமாக ஒரு தையற் கலைஞரின் பணி, சம்பந்தப்பட்ட ஒருவரை மட்டும் திருப்திப்படுத்தினால் போதும்; ஆனால் எங்கள் பணியோ இயக்குனர், தயாரிப்பாளர், சம்பந்தப்பட்ட நடிக — நடிகையர்கள், ரசிகர்கள் என்று அனைவரையும் திருப்திப்படுத்த வேண்டும்!'' என்று விளக்க ஆரம்பிக்கிறார் சுமார் ஐம்பது படங்களுக்கு மேல் காஸ்ட்யூம் டிசைனராய்ப் பணியாற்றியிருக்கும் ஆசீர்வாதம்.

''படத்தின் இயக்குனர் காட்சியமைப்புகளைக் கூறிய பிறகு, நாங்கள் அதற்குத் தகுந்தாற் போல் உடைகளை டிசைன் செய்ய வேண்டும். கனவுக் காட்சிகள் என்றால் கேட்கவே வேண்டாம்; கற்பனையின் முழுத் திறமையையும் பயன்படுத்த வேண்டும். வெளிநாட்டு ஆடை அலங்காரப் புத்தகங்களையெல்லாம் புரட்டிப் புரட்டி டிசைன்களை ஓவியங்களாக வரைவோம். அவற்றை இயக்குனர்களிடம் காட்டி ஓகே வாங்குவோம்.

''அப்படி ஓகே வாங்குவதென்பது சுலபமான காரியமல்ல. நாயகனும் நாயகியும் தங்கள் தோழியர், தோழர்கள் புடைசூழ டூயட் பாடுகிறார்கள் என்றால், அந்தக் கூட்டத்தில் நாயகனும் நாயகியும் மாத்திரம் பளிச்சென்று தெரிகிற மாதிரியான வண்ணங்களைத்தேர்ந்தெடுக்கவேண்டும். டிசைனும் அவர்களுக்கு வித்தியாசமானதாக இருக்க வேண்டும். அதிலும் நாயகிகள் தங்கள் உடைகளின் விஷயத்தில் ரொம்பவும் பிடிவாதமாக இருப்பார்கள் என்பதால் அவர்களின் திருப்திக்கும் நாங்கள் டிசைன் செய்ய வேண்டும்!

''வெளிப்புறப்படப்பிடிப்புஎன்றால், நாங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உதாரணமாக, ஒரு சண்டைக் காட்சியில், நாயகனின் உடை திடீரென்று கிழிந்து போய் விட்டால் என்ன செய்வது? தையல் விட்டுப் போயிற்று என்றால் மெஷினில் உடனே தைத்து விடலாம். கிழிசல்என்றால்...தையல்போட்டால்திரையில் தெரிந்து விடுமே! உடனடியாக அதே மாதிரியான துணியில் அதே மாதிரியான டிசைனில் வேறு உடை தைத்துத் தரவும் நாங்கள் தயாராக இருக்க வேண்டும். இல்லையென்றால்படப்பிடிப்பேபாதிக்கப்படும்.

''இவை ஒருபுறமென்றால் மறுபுறம் தயாரிப்பாளரையும் நாங்கள் திருப்திப்படுத்த வேண்டும். டைரக்டருக்கும் நாயக — நாயகிகளுக்கும் ஒருவிதத் துணி பிடித்துப் போனாலும் அது ரொம்ப ரொம்ப காஸ்ட்லியாயிற்றே... சில நிமிடங்களே அணியப் போகும் அந்த ஆடைக்காக அவ்வளவு செலவு செய்ய வேண்டுமா என்பார் தயாரிப்பாளர்! அதையும் நாங்கள் சமாளித்தாக வேண்டும். உதாரணமாக, நாயகனுக்குத் தைக்கும் அதே டிசைனில் நாயகனின் டூப்புக்கும் தைக்க வேண்டுமானால், டூப் தானே அதே வண்ணத்தில் கொஞ்சம் மட்டமான துணியில் தைத்தால் போதாதா என்பார் தயாரிப்பாளர். அந்த வித்தியாசம் மற்றவர்களின் கண்களுக்குப் பட்டுவிடாதபடி நாங்கள் ஜாக்கிரதையாகத் துணிகளைத் தேர்வு செய்ய வேண்டும்!

''ஆக, படப்பிடிப்பு என்றாலே, மற்றவர்களைப் போல எங்களுக்கும் ஒரே பரபரப்புத்தான், எந்தெந்த வண்ணத் துணிகளை அணிந்து கொண்டு நடிக — நடிகையர்கள் நடித்துக் கொண்டிருக்கிறார்களோ, அந்தந்த வண்ண நூல்களோடும் துணிகளோடும் ஊசியோடும் நாங்களும் தயாராய் இருக்க வேண்டும். இப்படி எத்தனை டென்ஷன் இருந்தாலும் கடைசியில் எல்லாமே ரசிகர்களின் கைத்தட்டலில் காணாமல் போய்விடும். அப்போது ஏற்படும் சந்தோஷத்திற்கு இணையே கிடையாது...!'' என்கிறார் ஆசீர்வாதம்.

சந்திப்பு: **சலன்.**



பொதுவாகவானொலி நிலையங்கள் திரைப்படப்பாடல்களுக்கு இடையே ஏகப்பட்ட விளம்பரங்களை ஒலிபரப்புகின்றன. ஆனால், மதுரை வானொலி நிலையம், திரைப்படப் பாடல்களுக்கிடையே சுவையான பயன்தரும் பொது அறிவுத் துணுக்குகளை ஒலிபரப்புகிறது. விளம்பரம் கூடுதலாக வந்தால் இந்த நற்பணி நின்று விடுமோ?

— எஸ். சுந்தரராஜ்.

அன்பு ஆயுதம்

பாலகுமாரன்

தலைக்கு மேல் ஒரு ஜான் உயரத்தில் மிகுந்த வேகத்தில் ரயில் போய்க் கொண்டிருப்பது போல் பாண்டியனுக்குத் தோன்றியது. நிமிர, கபாலம் சுக்கல் சுக்கலாய்ப் பல்வேறு திசைகளில் சிதறி விழும் என்கிற கலவரம் வயிற்றில் எழுந்தது. 'மரியே, மரியே என்னைக் காப்பாற்று' என்று நெஞ்சுக்குள் கதறல் எழுந்தது. எதைப் பிடித்துத் தொங்குகிறோம் என்பது கூடத் தெரியவில்லை. உடம்பு அதிர்ந்தது. வியர்த்தது. கால்களைத் துழாவ, அதல பாதாளத்தை உடம்பு உணர்ந்தது. முன்னும், பின்னும் உடம்பு ஊசலாட, ஏதோ பலகை தட்டுப்பட்டது. புஜங்களை இறக்கி, 'உப்' பென்று தம் பிடித்து, பலகைக்குத் தாவக் கனவு கலைந்தது.

''தடேர் தடேர்'' என்று சப்தம் மட்டும் வந்து கொண்டிருந்தது. கண்கள் கசக்கி, தலைதூக்க, வெளியே கை பம்ப்பில் தண்ணீர் அடிப்பதை உணர முடிந்தது.

''ச்சை... எவன் அது ராத்திரி நேரம் பம்ப்பு அடிக்கிறது...'' பாண்டியன் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான். கடிகாரத்தில் மணி பார்த்தான். நாலே கால். எழுந்து தள்ளாடி லுங்கி கட்டிக் கொண்டான். திரைச் சீலையை விலக்கி, வாசல் பக்கம் பார்த்தான். வெற்று மார்போடு சிவசாமி முழு பலத்துடன் கைபம்ப்பு அடித்துக் கொண்டிருந்தார். மாமி அடுத்த தவலையை வைத்துவிட்டு, நீர் நிறைந்த குடத்தை எடுத்து நடந்து போனாள்.

மெட்ராஸ்ல இது ஒரு கேடு கெட்ட விஷயம். விடியல் தூக்கத்தைக் கொல்லுகிற விஷயம். இதற்காக யாரையும் நொந்து கொள்ள முடியாது. காலை நாலிலிருந்து ஆறு வரைக்கும்தான் தண்ணீர் வரும். தனக்கும் மூன்று தவலை தண்ணீர் வேண்டும். இன்றும் நாளையும் குளிக்க இரு தவலை, இரவு வந்தால் முகம் கழுவ, தட்டுக் கழுவ, ஒரு தவலை. கையில் அரைத் தவலைத் தண்ணீர்தான் இருக்கிறது. எழுந்து தவலையோடு கதவு திறந்து, வாசல் படியில் உட்கார்ந்தான்.

முதுகு வலித்தது. இடது கால் தசையில் லேசாய் எரிச்சல் இருந்தது. நேற்று மாட்டு வண்டியிலிருந்து கரணம் அடித்துத் தரைக்குக் குதித்த போது, செருப்பு நெகிழ, பொத்தென்று விழுந்து விட்டான்.

யூனிட் மொத்தமும் பதறிவிட்டது.

'என்ன? என்ன?' என்று ஓடி வந்தார்கள்.

'ஒண்ணுமில்லை' என்று எழுந்து விட்டான். 'புதுச் செருப்பு... வழுக்கிடுச் சுண்ணே...'

'உன்னை யாரு டூப் போடச் சொன்னது?' ஸ்டண்ட் மாஸ்டர் கத்தினார்.

'கன்டின்யூட்டின்னு கொடுத்தாங்க மாஸ்டர்.'

'எம்பா, டைவ் அடிச்சு லேண்ட் ஆகிற போது, செருப்பா கண்ணில படப் போவுது. தலைல பட்டிருந்தா என்ன கதி...? நீ உட்காரு கொஞ்ச நேரம் அப்படி. கதிகலங்கிப் போச்சு எனக்கே? ஷாட் ஓகேவா காமிரா மேன்?' மாஸ்டர் கத்தினார்.

'டபுள் ஓகே மாஸ்டர். ஸ்லிப்பானது நேச்சுரலா இருந்தது.'

'உனக்கு இருக்கும் நேச்சுரலா. விழுந்தவன் குலை எப்படி நடுங்கும்னு எனக்கில்லே தெரியும்?'

தினமும்தான் குலை நடுங்குகிறது. குலை நடுங்க வைக்கும் தொழில்தான் இது. அண்ணன் கடப்பாரையால ஓங்கிப் போடு


வாரு... கட்! அப்படியே சுவரு முழுக்க ரத்தம் பீய்ச்சி அடிக்கும்... கட்! அண்ணன் சட்டையெல்லாம் ரத்தம்... கட்! அண்ணன் குளோசப். அப்ப அண்ணன் உதட்டுல ஒரு துளி ப்ளட் நழுவும்... கட்! அடிபட்டவன் அப்படியே தலைதொங்கி, உடம்பெல்லாம் ரத்தமாகச் சுவரோடு விழ... கட்! அண்ணன் வெறியோட திரும்பிக் கத்தறது. ஆறு பிரிச்சுக்கலாம். பிரிப்பார்கள். கோணம் திட்டமிடுவார்கள். 'முதல் ஷாட் ரிஸ்க் ஷாட். அது பின்னால வச்சுக்கலாம். முதல்ல அண்ணன் குளோசப் எல்லாம் முடிங்க... முடிச்சாச்சா. பாண்டியா வா... அண்ணன் கடப்பாரையால ஓங்கி அடிப்பாரு. காமிராவ வச்சு நீ அண்ணன்... கடப்பாரை வரும். சட்டுன்னு சுவத்துக்கு ஸூம் போயிடும். ஸூம் போற போது ரத்தம் சுவத்துல ஊத்திரலாம். காமிரா ரெடியா?'

அண்ணன் ஓங்கியடிக்கப் பயப்படுவார். தவறித் தலையில் இறங்கி விட்டால்...?

'பயப்படாதீங்க... பாண்டியன் இல்லாடி. சட்டுன்னு டைமிங்ல நகர்ந்துடுவான். என்ன பாண்டியா?'

'செய்துடலாம் மாஸ்டர்.'

'பயப்படாதீங்க. வெறியோட இறக்



குங்க. அப்பத்தான் க்ளைமாக்ஸ் எடுபடும். பாண்டியன் ரெடியா...? ப்ளட் பெயிண்ட் எங்கப்பா? என்கிட்ட கொடு...'

சுற்றி ஆட்கள், விளக்குகள் நகர... ஒரே ஓர் ஆள் இடைவெளி இருக்கும்.

'மாஸ்டர், அந்த இடைவெளில யாரும் வந்து நிக்கப் போறாங்க. பார்த்துக் கங்க...'


'வர மாட்டான். எவனும் இந்தப் பக்கம் வராதீங்கப்பா.'

அண்ணன் கடப்பாரையை வெறியோடு இறக்க, சரிந்து கிடந்த பாண்டியன், அந்த இடைவெளியில் நொடிப் பொழுதில் ஜம்ப் செய்ய, ஓர் எட்டு வயசுப் பையன் எட்டிப் பார்க்க, முட்டி மோதிச் சுருண்டு விழுந்தான். ரத்தப் பெயிண்ட் சுவர் தாக்கிச் சுவர் மீதும் தெறித்தது.

பையன் முகவாய் அடிபட்டு, பொத்திக் கொண்டு அழுதான்.

'யாருப்பா அது... பையனை நடுவுல விட்டது?' ஆளுக்கு ஆள் கத்தினார்கள்.

'நல்ல வேளை... எட்டு வயதுப் பையன். ஆளா இருந்திருந்தால் முட்டி மறுபடி கடப் பாரைக்கு நடுவே சிக்கும்படி ஆகியி ருக்கும். அந்த அடிக்கு மூளை சிதறியிருக் கும்.'





டைரக்டர்: அடுத்தபடியா, முழுக்க முழுக்க ஒரு ஊமைப்படம் எடுக்கப் போறேன்?

வசன கர்த்தா: அதுலயாவது எனக்கு வசனம் எழுத சான்ஸ் குடுங்க, சார்!

— சீர்காழி வி. ரேவதி.

'ஷாட் ஓகேவா?'

'டபுள் ஓகே மாஸ்டர்.'

தினம் இது மாதிரி ஏதாவது நடுக்கும். அதிகம் நடுக்கிய சம்பவம் கனவில் வரும். இப்போது வந்த கனவு கூட எப்போதோ குலை நடுக்கிய விஷயம்தான்! ஓடுகிற ரயிலில் தாவித் தாவி ஓடிச் சண்டை போட, அவன், கால்பட்டுக் கம்பி உடைந்து, உடைபட்ட இடைவெளியில் பாலத்துக் கட்டையில் குதித்து, குதித்த வேகத்தில் நிலை தடுமாறிக் கைக்கு எட்டிய கட்டையைப் பிடித்து...

'ஐயோ பாண்டியா!' மாஸ்டர் நெஞ்சில் அறைந்து கொண்டு அழுதாராம். கூட்ஸ் ட்ரெயினில் இருந்த மொத்த யூனிட்டும் பயத்தில் உறைந்து போனார்கள். அரை மைல் தள்ளி நிறுத்தி வண்டியைப் பின் பக்கம் ஓடவிட்டு நகம் கடித்தபடி யூனிட் வர, மெல்ல எழுந்து உடம்பு துடைத்துப் பாண்டியன் ட்ராக் வழியே வந்து கொண்டிருப்பது பார்த்து சந்தோஷக் கூச்சல் வான் பிளந்தது.

தயாரிப்பாளர் தழுவிக் கொண்டார். 'என் வயத்துல பால் வார்த்தே பாண்டியா...' நடிகர் கட்டி முத்தமிட்டார்.

'ரீ டேக்கா சார்? நான் ரெடி!' பாண்டியன் சொல்ல, பல பேர் கண் கலங்கினார்கள். தொட்டுத் தொட்டுப் பாராட்டினார்கள். எப்படிக் கம்பி உடைந்தது என்றார்கள். தவறு பாண்டியன் மீதோ கம்பி மீதோ இல்லை. அவன் வலிவு அப்படி.

'பேக்கப்...' டைரக்டர் சந்தோஷத்தில் கத்த, அன்று நடந்த விருந்து முழுவதும் பாண்டியன் பற்றித்தான் பேச்சு. கூட இரண்டாயிரம் சம்பளம் கிடைத்தது. பாண்டியன் கால் தடுக்கி, ஓடுகிற ரயில் வண்டியிலிருந்து வெளியே விழும் காட்சி திரையில் காட்டப்பட, பாண்டியனா செஞ்சாரு, எப்படி அது என்று பலரும் வியந்தார்கள்.

'எப்படியா...? அவன் பெண்டாட்டி தாலி பாக்கியம், எகிறினான், விழுந்தான், துடைச்சுக்கிட்டு வந்துட்டான். இன்னொருத்தன் செய்ய முடியுமா அதை?' படம் நூறு நாள் கேடயம் வாங்கப் படியேறும் போது அரங்கு அதிரும் கைத்தட்டல்.

குலைநடுக்கத்துக்கு ஒரே ஒத்தடம் இந்தக் கைத்தட்டல். இந்தக் கைத்தட்டல் இல்லையெனில் இந்தத் தொழிலே வேண்டாம் என்று பலர் விலகிப் போயிருப்பார்கள். ஆனால் ஒத்தடத்தில் உள் மனசு காயம் போகுமா? உள்ளே பதிந்த பயம் கனவாய் வருகிறது. குலைநடுங்க வைக்கிறது. நேற்றுச் செய்த மாட்டு வண்டி ஜம்ப்புக்குக் கைத்தட்டல் கிடைக்கும். விழுந்தது நேர்கூரலாய் இருந்ததாம். இதற்கும் கேடயம் கிடைத்தால் ஜும் கிடைக்கும்.

"என்ன சீக்கிரம் எழுந்துட்டீங்க?" சிவசாமி பல் தெரியக் கேட்டார்.

"எழுப்பிட்டீங்க..."

"பைப்பு சத்தமா?"

"ஆமா...!"

"ஸாரி... தண்ணி வர்ற நேரம்..."

"பரவாயில்லை. முடிச்சிட்டீங்களா? எனக்குத் தண்ணி வேணும்."

"இன்னும் ரெண்டு தவலைதான்!" சிவசாமி தவலை மாற்றி, மறுபடி அடிக்கத் துவங்கினார்.

பாண்டியன் நிமிர, முதுகு மறுபடி வலித்தது. இடது கணுக்கால் எரிந்தது.

பாண்டியன் அவர் நிரப்பிக் கொண்டிருக்கும் அடுத்த தவலைக்கு அருகே தன் தவலையை வைத்தான். தூக்கம் கண்களை இழுக்கத் தள்ளாடினான். தழுவும் தூங்கி பிடித்துக் கால் அகட்ட, அவர் நீர் நிரப்பிய தவலை இடறியது. இருட்டில் சரியப் போகிறதே என்று வலக்கை நீட்ட, கைபட்டு மொத்தத் தவலை நீரும் தரையில் சரிந்தது.

"ஐயய்யோ..." சிவசாமி ஓடித் தவலை தூக்கினார்.

"என்னப்பா இப்படி கவுத்துட்டீரு."

"ஸாரி ஸார்."

"என்னத்த ஸாரி. தவலைத் தண்ணியும் சரிஞ்சு போச்சே. என்ன கொழுப்பு? என் நெஞ்சு வலிக்க அடிச்சு வச்சிருக்கேன். இப்படி ஆடிச் சரிச்சு..."

குங்குமப் பூ

தினசரி உணவில் குங்குமப் பூ சில இதழ்கள் சேர்த்து உண்டு வர கண் பார்வைக் குறை பாடுகள் வராமல் தடுக்கலாம். குங்குமப்பூ பல நோய்களைக் குணப்படுத்தக் கூடியது.



ஆதாரம்: மூலிகை மணி



எங்களிடம்

1. குங்குமப்பூ கோதுமை ஹல்வா
2. குங்குமப்பூ ஜாங்கிரி
3. குங்குமப்பூ லட்டு
4. குங்குமப்பூ பாதாம் ஹல்வா
5. குங்குமப்பூ பேடா

கிடைக்கும்

கல்யாண வைபவங்களுக்கு: சீர்முறுக்கு, சீர்முள்ளு தேன்குழல், தேன்குழல், சீர் அதிரசம், அப்பம், திரட்டுப்பால், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்து தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24-2-வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு
சென்னை - 600 020
போன்: 412557.

''ஸாரி... தெரியாம கொட்டிட்டேன்...''

''என்ன ஸாரியோ என்ன இழவோ...''

''என்ன? என்ன?'' மாமி ஓடி வந்தாள்.

''இடிச்சுப் புரட்டி விட்டார்.''

''எதுக்கு இடிக்கணும்?''

''ம்ம் ஸ்டன்ட்டுடி... இங்க வந்து காலை அகட்டினா... ஒரு நிதானம் வேண்டாம். ஒரு தவலை தண்ணி வீணாப் போயிடுத்து...''

''குடிச்சிருப்பாரோ என்னவோ!''

''என்னவோ பண்ணித் தொலைக்கட்டும். நம்ம பிராணன் இல்லே போறது.''

''ஸாரி சார். தண்ணிதானே வேணும்? நான் ஒரு தவலை அடிச்சுத் தர்றேன். அனாவசியமாப் பேசாதீங்க.''

''என்ன..., எது அனாவசியம்?''

''பம்ப்பை விடுங்க சார். உங்களுக்கு நான் அடிச்சுத் தர்றேன்,'' அவன் அவரை இழுக்க, ''நீ விடுய்யா கையை...'' அவர் திமிற, உதவி புரிய வேண்டி ஒரு வேகம் காட்ட, அவன் இடக்கையால், லேசாய், மிக லேசாய் அவர் புஜம் தள்ள, சிவசாமி பொத்தென்று பிருஷ்டம் படக் கால் தூக்கி விழுந்தார்.

''கம்மனாட்டி. இதோ புடிச்சாத் தள்றே, தவலைத் தண்ணியையும் கொட்டிட்டு...?''

தவறு பாண்டியன் மீதில்லை. அவன் வலிவு அப்படி!

பாண்டியன் அவரைத் தூக்கிவிட, உதறினார்.

''ஐயோ... ஐயோ...'' மாமி கூவ, அந்த வீட்டின் எல்லாக் குடித்தன விளக்குகளும் எரிந்தன. நடைவழி ஜும்பலாயிற்று.

சிவசாமி உதறி எழுந்து, ''எடுத்துண்டு போ... எல்லாத்தையும் எடுத்துண்டு போ...'' அடித்த அரைக்குடத்தை உதைத்துக் கவிழ்த்தார்.

''ஏன் சார் கோபப்படறீங்க?''

''நானா கோபப்படறேன்? உனக்கு எங்கேயோ கோபம். என் தவலையை எட்டி உதைச்சே. கேட்டா இதோ தள்றே...''

''நான் தள்ளினேனா... நீங்களா விழுந்தீங்க.''

''நானா விழுந்தேனா? நான் என்ன குடிகாரனா...? உன்னை மாதிரி தள்ளாடறதுக்கு?''

பாண்டியன் குடித்தது உண்டு. ஆனால் இப்போது இல்லை. இவன் குடித்த காலத்தில், 'காலி பாட்டிலை அலம்பித் தர்றீங்களா... ஆபீஸுக்கு ஜீரக வாட்டர் எடுத்துண்டு போகவசதி' என்று வாங்கிப் போனபோது இது குடி கெடுக்கிற பாட்டில் என்பது தெரியவில்லை. அப்படி நாலு பாட்டில்கள் வாங்கியிருக்கிறார். நீங்களே நாலு

பாட்டில் ஜீரகத் தண்ணி சாப்பிடறீங்களா இல்லை உங்க வீட்டில் ஆளுக்கு ஒரு பாட்டிலா என்று பாண்டியன் கேட்டதில்லை. இப்போதென்னமோ குடித்து விட்டு நிலை தெரியாமல் சண்டை போடுகிற மாதிரி ஒரு ஸீனைக் க்ரியேட் பண்ணுகிறார்.

''பாண்டியன், என்ன தகராறு?'' எதிர் வீட்டு ஆள் வந்து விசாரிக்க, இன்னும் கூச்சலும் குழப்பமும் அதிகரித்தது.

''அப்பவே சொன்னேன். சினிமாக்காரனுக்கு இந்த வீட்ல இடம் தராதீங்கன்னு. ஹவுஸ் ஓனர் கேட்கலை. இப்ப தேவையில்லாத ப்ராப்ளம்.''

''எங்க, சினிமாக்காரங்க மனுஷங்க இல்லையா? என்ன பேசறீங்க? இப்ப என்ன ப்ராப்ளம் பண்ணினேன்?''

''குடிச்சுட்டு வந்து என் தவலையைக் கவுக்கலை?''

''போல் பைத்தியமா உனக்கு? மறுபடி மறுபடி அதையே பேசறியே. நான் தெரியாம இடிச்சுட்டேன், வுழுந்துடுச்சு. ஸாரி சொல்லிட்டேன். வேணும்னா திருப்பித் தண்ணி அடிச்சு நிறைச்சுத் தரேன்னும் சொல்லியாச்சு. சும்மா சும்மா பேசினதையே பேசறியே.''

''நீங்க வாங்க... எதுக்கு ரௌடிகளோட வீண்பேச்சு?'' மாமி சிவசாமியை இழுக்க, பாண்டியன் கோபத்தில் பொருமினான்.

''மாமி, நிதானமாப் பேசுங்க. யார் ரௌடி? நானா... இங்கே யாரும் என்னை இப்படிச் சொன்னதில்லை.''

''சொல்லத் தைரியமில்லை. அடிச்சிடுவேங்கிற பயம்.''

''அட ச்சை...'' கை பம்ப்பை ஆத்திரத்தோடு பாண்டியன் உதற, கை பம்ப்பின் மேல் பகுதி படேரென்று தூக்கிக் கொண்டது. வாஷர் தாண்டி மொத்தத் தண்ணீரும் சிலீரென்று கீழே இறங்கும் சப்தம் கேட்டது. தவறு பாண்டியன் மீது இல்லை. அவன் வலிவு அப்படி!

''உடைச்சுட்டான். உடைச்சுட்டான். வந்த தண்ணியும் போச்சு...''

''அவன் இவன்னா பிச்சிடுவேன்..''

''இப்ப பைப் போச்சே பாண்டியா?''

''நான் ரிப்பேர் பண்ணித்தரேன் சார்.''

''இன்னிக்குத் தண்ணிக்கு எங்கே போறது?''

''குடத்தை எடுத்துண்டு தெருத் தெருவாப் போக வேண்டியதுதான். அதுக்குத்தான் சொன்னேன் சினிமாக்காரனை இங்கு குடித்தனம் வைக்க வேண்டாம்னு!''

''இன்னொரு தடவை சினிமாக்காரனை மட்டமாப் பேசினே...'' பாண்டியன் முன்னேற, பலர் அழுத்திப் பிடித்துக் கொண்டார்கள். சப்தம் அடங்க அரை மணியாயிற்று.

பாண்டியன் வீட்டுக்குப் போய், மல்லாந்து படுக்கையில் சரிந்தான். முதுகு மறுபடி வலித்தது. அந்த வீட்டில் பல தொழிலைச் சேர்ந்தவர்கள், பல ஜாதியினர் இருந்தார்கள். ஆனால் பாண்டியன் மட்டும்தான் சினிமா ஆள், ஸ்டண்ட் நடிகன். பாண்டியன் மனைவி எஸ்தர் இந்த வீட்டில் நாலு மாதம் குடியிருந்தாள். பிள்ளை உண்டாயிருப்பது தெரிந்து ஊருக்குப் போகிறேன் என்று அடம்பிடித்தாள். அவளுக்கு புருஷனைப் பிடித்த அளவு போர்ஷனைப் பிடிக்கவில்லை. கைப் பம்ப்பும், கக்கூஸும் சுத்தமாய்ப் பிடிக்கவில்லை. அவள் வீட்டில் கொல்லைப்புறம் பெரிய வாய்க்கால், வாசல் பக்கம் வயல். திண்ணையில் உட்கார்ந்து ஒரு கொக்கு பறப்பதை ஐந்து நிமிடம் கண்கொட்டாமல் பார்ப்பாளாம். அத்தனை பெரிய நிலப்பரப்பு. சென்னையில் வெறும் சுவர்தான் என்று முனகினாள்.

'இதை விட நல்ல வீடு கிடைக்காதுங்களா?'

'கிடைக்கும்மா. கொஞ்சம் தொலைவாப் போகணும். கோடம்பாக்கத்துல இப்படித்தான் இருக்கும். ரொம்பத் தொலைவா இருந்தா நம்ம தொழிலுக்கு வந்து கூப்புடறது கஷ்டமாச்சே. நாலு பேர் வர போற இடமா இருக்கணுமே...'

'சரி, கொஞ்சம் மாடி இடமாவது பாருங்க.' போய் விட்டாள்.

'ஆண் குழந்தை. தாயும், சேயும் நலம்' என்று தந்தி வந்த போது, சிவசாமி தான் காலண்டர் பார்த்து, 'நல்ல நட்சத்திரம்பா சிம்ம ராசி. சிங்கக் குட்டி பொறந்திருக்கான் உனக்கு...' என்று வாழ்த்தினார். இன்று என்னவோ போறாத வேளை சண்டையாகி விட்டது.

அதை விட யாருமே வரவில்லை சமாதானத்துக்கு என்பதுதான் கஷ்டமாக இருந்தது. மறுபடி விளக்குப் போட்டு, கை பம்ப்பு பார்த்தான். ஸ்பேனர் எடுத்து வந்து போல்ட் நீக்கி வாஷரை உள்ளே அழுத்தி, அடித்துப் பார்த்தான். நீர் ஊற்றி வேகமாய் அடிக்கத் தண்ணீர் மேலே வந்தது. ஆனால் முன்பிருந்த வேகமில்லை. மறை துருப்பிடித்திருந்தது. உறுதியாக நிற்காமல் பம்ப்பு தூக்கித் தூக்கி அடித்தது.

அரைத் தவலைத் தண்ணீரில் குளித்து விட்டுத் தலை வார, ஒரு புதுக் கம்பெனி கார் அனுப்பி கூட்டிக் கொண்டு போயிற்று. அரை நாளில் நடிகருக்குத் தலைச் சுற்றல் என்று பேக் அப் ஆக மூன்று மணிக்கு வீடு திரும்பிய போது, வாசலில் கான்ஸ்டபிள்

இருப்பது தெரிந்தது.

''பாண்டியன்றது நீங்களா?''

''ஆமாங்க.''

''என்ன செய்யறீங்க?''

''ஒண்ணும் செய்யலையே...''

''தொழில் என்ன?''

''சினிமா ஸ்டண்ட் நடிகர்.''

''பார்த்தாலே தெரியுது. ஸ்டேஷனுக்கு வாங்க.''

''எதுக்குங்க?''

''கம்ப்ளெயிண்ட் குடுத்திருக்காங்க.''

''என்ன... யாரு...''

''அடிக்க வரீங்களாமே. ஏன் சார் இப்படி?''

''நானா? அடிக்க வந்தேனா? யாரை?''

''யாரோ சிவசாமி... ஸ்டேஷனுக்கு வாங்க...''

வாசலுக்கு வர போலீஸ் ஜீப்பு ஒன்று வந்து நின்றது. இன்ஸ்பெக்டர் கீழே இறங்கி. ''இதுதான் பார்ட்டியா?''

''ஆமா சார்.''

''கத்தி வச்சிருக்கியா?''

''இல்லை சார். எதுவும் இல்லை...'' பாக்கெட் தொட்டுக் காட்டினான்.

''உன் போர்ஷனா இது?''

''ஆமா சார்.''

''இது நீ உடைச்ச பம்ப்பா?''

''ஆமா சார். நானே ரிப்பேர் பண்ணித் தரேன்னு ஒத்துக்கிட்டேனே...''

''தவலையத் தள்ளி வுட்டு, பம்ப்பை உடைச்சிட்டாப் பெரிய ஆளாயிடுவியா. கதவு திற!''

திறந்தான்.

''உன்கிட்டே நிறைய வெத்தல்வெப்பன் இருக்கா?'' வாசலில் நின்றபடி கேட்டார்.

''வெத்தல் வெப்பனா... அப்படி எதுவும் இல்லியே சார். சினிமா சமாச்சாரம்தான். கத்தி, கப்படா...''

''கொண்டா இப்படி...'' வராந்தாவில் அமர்ந்தார்.

பாண்டியனிடம் உறையுடன் கூடிய வாட்கள் ஆறு இருந்தன. உறையில்லாத வாள் பூஜையில் இருந்தது. உன்சாக்கோ என்கிற கட்டைச் சங்கிலி நாலு இருந்தன. முனை கூரியான வேல் ஒன்று, கொஞ்சம் துருப்பிடித்த கேடயம், ஒரு சுருள் கத்தி, மான் கொம்பு ஒரு ஜதை, அது தவிர தோல் சவுக்கும், ஸ்பிரிங் வில்லும் வைத்திருந்தான்.

''என்னய்யா இது அநியாயமா இருக்கு?''


''எது சார்?''

''என்ன இது?''

''சினிமா சமாச்சாரம் சார்.''

''ஸ்பிரிங்போ... வொர்க் பண்றதா இது?''

''பண்ணும் சார். இது படத்தில கூட வந்திருக்கு.''



நடிகை ஸ்ரீதேவியின் கையெழுத்துத் தான் இது. ரசிகர்களுக்கு ஆட்டோ கிராஃப் இப்படித்தான் போட்டுத் தருகிறார்.

— தகவல்: மேஜர் தாசன்.

''இந்தக் கத்தி?''

''இது சமுராய். ஜப்பான் டைப்.''

''உறைய விட்டு எடு.''

உருவினான். பளபளத்தது.

''கன் இருக்கா?''

''டம்மி கன் இருக்கு சார்.'' பெட்டி திறந்து, வாய்ப் பக்கம் அடைக்கப்பட்ட பிஸ்டலைக் காட்டினான்.

''தப்பாச்சே இது?''

''எதுங்க?''

''இந்தச் சாமான் எல்லாம்...''

''ஏங்க?''

''ஏன்யா எனக்கே பயமா இருக்கு. நாலு குடித்தனம் இருக்கற இடத்துல இதெல்லாம் நீ வச்சுக்கிட்டு ஆ ஊன்னு சண்டை போட்டா என்னாவும்?''

''நான் இங்க சண்டை போட மாட்டேன் சார்.''

''நடந்த சண்டைக்குக் காரணம் எது வேணா, யார் வேணா இருக்கலாம். ஆனா இது அத்தினியும் தப்பு. கான்ஸ்டபிள் டம்மி கன் தவிர மத்ததை ஸ்டேஷனுக்கு வாரிக் கிட்டு வா.''

''சார்... சார்..'' பாண்டியன் கெஞ்சினான்.

''என்னங்க?''

''இதெல்லாம் பூஜைபொருள் சார். இது நூறு வருஷத்துக் கத்தி. எங்க ஐயாவுக்கு ஐயாவோடது. தினம் தினம் நான் தொட்டுக் கும்பிடற கத்தி.''

''இத்தினி கத்தியுமா?''

''சமுராய் நான் ப்ரைஸ் வாங்கினது. எங்க வாத்தியார் கொடுத்தது. நான் என் சிஷ்யப் புள்ளைக்குத் தர வேண்டியது...''

''முடியாது. இது வச்சுக்கக் கூடாது.''

''இதுக்கும் இன்னி சண்டைக்கும் சம்பந்தமே இல்லை.''

''அது சரி. இதனாலே நீ சண்டை போடலே. சும்மா தள்ளினியாம். விழுந்துட்டாராம். விசாரிச்சேன். நீ தள்ளினா பதிலுக்கு உன்னை யாரு தள்ளுவா? இத்தினி பட்டாக் கத்தி வச்சிருக்க. பேசக் கூட பயப்படுவானே. வாரி எடுப்பா...''

''சார்... இது ஒண்ணு மட்டும் விட்டுருங்க சார். இது பூஜை கத்தி சார். தினம் கும்புட்டுப் போற தெய்வம் சார். என் கை கால் அடிபடாம காப்பாத்தற கடவுள் சார் இது. எங்க வீட்டு லேடீஸ் கூடத் தொட மாட்டாங்க சார்.''

''யோவ் கிறிஸ்டியன்தானே நீ? கத்தி எல்லாம் வச்சு எதுக்கு பூஜை?''

''நான் கிறிஸ்டியன்தான் சார். எங்கய்யா ஹிந்து. அப்புறம் மாறிட்டோம். ஸ்டண்ட் கத்துக்கிட்டு சினிமாவுல இருக்கேன் சார்.''

''என்னய்யா இது குழப்பமா இருக்கு. அவரு உன்னை பெரிய ரௌடின்ற மாதிரி கம்ப்ளெய்ண்ட் பண்றாரு. நீ சின்னப் புள்ளை மாதிரி கெஞ்சறே...''

சற்று நேரம் எல்லோரும் அமைதியாய் இருந்தார்கள்.

தலைகுனிந்து நின்ற பாண்டியன் நிமிர்ந்தான்.

''சினிமாக்காரன் சார் நான். எல்லாச் சினிமாக்காரனும் மத்தவங்க கண்ணுக்குக் குழப்பமாத்தான் தெரிவான். ஒவ்வொரு நாளும் அதிர்ஷ்டத்தை, தெய்வத்தை நம்பியிருக்கிறவன் சார். அவனுக்குச் சோறு, தூக்கம், எதுக்கும் நேரம் காலம் கிடையாது... கடவுள், பூஜை, ஜாதி, மதம் எதுலயும் கட்டுப்பாடு கிடையாது. அவன் காட்டாறு. சக்தி இருக்கற வரைக்கும் ஓட்டம். ஓடற வரைக்கும் கொண்டாடுவாங்க. அப்புறம் தேட மாட்டாங்க. அவன் வேற.. ஜனங்க வேற. நான் வீடு காலி பண்ணிடறேன் சார். ஒரு வாரத்துல சாலிக்கிராமம் போயிடறேன். சினிமாக்காரனுக்கு ஜனங்களைப் புரிஞ்சுக்க முடியும். ஜனங்களுக்கு சினிமாக்காரனைப் புரிஞ்சுக்க முடியாது. நீங்க எடுத்துக்கிட்டுப் போங்க சார். நான் வீடு மாத்திட்டு ஸ்டேஷன் வந்து வாங்கிக்கறேன்...''

பாண்டியன் பேசப் பேச அவன் கண்களில் நீர் கோத்துக் கலங்கி, கன்னம் வழிந்து காலர் நனைத்தது.

''காலி பண்றதா இருந்தா விட்ருங்க சார். அவரே எல்லாத்தியும் வச்சிக்கட்டும்...'' யாரோ சொன்னார்கள்.

''இவரு ஒரு வாரம் குடியிருந்தா இந்தக் கத்தி பத்திப் பயமில்லையா? ஒரு வருஷம் இருந்தா வெட்டிடுவான்னு பயம் வருமா? என்னய்யா எழவு கம்ப்ளெய்ண்ட்டு? எப்படியோ உங்களுக்குள்ளேயே ராசி ஆயிட்டாச் சரி.''

இன்ஸ்பெக்டர் வெளியேறினார்.

வாசலில் கிடந்த கத்திகளோடு படியில் பாண்டியன் உட்கார்ந்திருந்தான். இரண்டு குழந்தைகள் அருகே உட்கார்ந்து அவனையும், ஆயுதங்களையும் வேடிக்கை பார்த்தன.



அடம்பிடித்து ஐஸ்கிரீம் கேட்ட அஞ்சு

குழந்தை நட்சத்திரமாக சினிமாவில் நுழைந்து, பெரியவர்களான பிறகும் அதே துறையில் புகழ் பெற்றிருப்பவர்களில் ஸ்ரீதேவியும், கமலஹாசனும் குறிப்பிடத்தக்கவர்கள். அதே பாதையில் இப்போது அடியெடுத்து வைத்திருப்பவர்கள் மீனாவும் அஞ்சுவும். இருவரும் இங்கே சந்தித்துக் கொள்கிறார்கள்....

மீனா: ஹாய் அஞ்சு! பார்த்து எவ்வளவு நாளாச்சு! எப்படி இருக்கே...?

அஞ்சு: நல்லா இருக்கேன். நீ எப்படி இருக்கே?

மீனா: ஃபைன். உன்னைப் பார்த்ததும் நீயும் நானும் நடிகைங்கங்கிறதே மறந்து போச்சு. நாம ரெண்டு பேரும் வித்யோதயா ஸ்கூல்ல படிச்ச பழைய நாட்கள்தான் ஞாபகத்துக்கு வருது...

அஞ்சு: எனக்கும் அப்படித்தான். என்னைக் கேட்டால் எப்பவுமே நாம குழந்தைங்களா இருக்கிறதுதான் பெட்டர்னு தோணுது. அப்படி இருந்திட்டாப் பிரச்னைகளே இல்லை பாரு... உனக்கு எப்படி மீனா?

மீனா: குழந்தையா இருக்கிறது ஒருவிதமான சந்தோஷம்

தான். இல்லைன்னு சொல்லலை. ஆனா நாம் குழந்தையா இருந்தப்போ நடிச்சோம் பாரு... அதுதான் எனக்கு ரொம்ப ரொம்பச் சந்தோஷமான விஷயம்னு தோணுது.

அஞ்சு: ஆமா. நடிக்கிறது சந்தோஷத்தைக் கொடுக்கலைன்னா அடம்பிடிச்சு அழுதிருப்போமே!

மீனா: நடிப்பது கொடுத்த சந்தோஷம் ஒருபக்கமிருக்க அப்பவெல்லாம் நம்மை நடிக்கிற மூடுக்குக் கொண்டு வர்றதுக்காக நமக்கு எத்தனை சாக்லேட், எத்தனை ஐஸ் கிரீம்னு வகை வகையா ஒவ்வொரு நாளும் கொண்டு வந்து கொடுத்து தாஜா பண்ணு வாங்க...

அஞ்சு: ஓ... நீ அதைச் சொல்றியா? உனக்கு எப்படியோ... எனக்கு ஷாட்டுக்கு ஷாட் ஐஸ்கிரீமெல்லாம் குடுப்பாங்க... (சிரிப்பு)

மீனா: என் சிரிக்கிறே?

அஞ்சு: இப்போ நாம அப்படியெல்லாம் அடம்பிடிச்சு ஐஸ்கிரீம் கேட்க முடியுமான்னு நெனைச்சேன்... அதுதான்!

மீனா: ஆக, நிகழ்காலத்துக்குத் திரும்பிட்டே... எத்தனையோ படங்கள்ல நடிச்சிருந்தாலும் எனக்கு ரொம்பவும் பேர் வாங்கிக் குடுத்த படம் 'அன்புள்ள ரஜினிகாந்த்' தான். உனக்கு எது?

அஞ்சு: 'உதிரிப்பூக்கள்.' ஆமா, நாம ரெண்டு பேரும் சேர்ந்து நடிச்ச தெலுங்குப் படம் ஒண்ணு ஞாபகத்துக்கு வருதா?

மீனா: கோடைத் தராசைத்தானே சொல்றே... அதில்லாம இன்னொரு படத்திலேயும் நாம சேர்ந்து நடிச்சிருக்கோம்.

அஞ்சு: 'மிஸ்டர் விஜய்'

மீனா: குழந்தையா இருந்தப்போ கிடைச்ச சந்தோஷம் இப்பவும் உனக்குக் கிடைக்கிறதா?

அஞ்சு: ஓ! அந்த சந்தோஷம் எனக்கு இப்பவும் இருக்கு. எனக்குக் கிடைக்கிற கேரக்டர் எல்லாமே நல்ல ஹெவியான கேரக்டர் ரோல்ங்கிறதாலே சந்தோஷம் கூடுதலா இருக்குன்னே சொல்லுவேன்...

மீனா: நான் நிறைய ரோல்ல நடிச்சிட்டிருந்தாலும் இன்னும் கூட ஒரு ஹெவி ரோல் வேணும்னு நெனைக்கிறேன். டைரக்டர் பாலசந்தர் சார் ஒருமுறை கால்ஷீட் கேட்டப்போ, எனக்கு நிறைய கமிட்மெண்ட்ஸ் இருந்ததாலே அவருக்கு என்னாலே கால்ஷீட் கொடுக்க முடியாமப் போச்சு. அதை நெனைச்சா இன்னமும் எனக்கு வருத்தமா இருக்கு... ஒரு அருமையான வாய்ப்பை நழுவ விட்டுட்டோமேன்னு...

அஞ்சு: சில சமயம் இப்படி ஆயிடறது உண்டுதான். கவலைப்படாதே. மறுபடியும் ஒரு நேரம் வரத்தான் செய்யும்.

மீனா: ஒண்ணு கவனிச்சியா? எல்லாக் குழந்தை நட்சத்திரங்களாலேயும் பெரியவங்களான பிறகு பெரிய நட்சத்திரங்களா ஃபீல்டுல வளர முடியறதில்லே. ஒதுங்கிடறாங்க. ஃபீல்டுக்கு வாறும்னு நினைச்சாலும் முடியறதில்லே.

அஞ்சு: இதுக்குக் காரணம் நல்ல கேரக்டர் ரோல்கள் கெடைக்காததுதான்னு நெனைக்கிறேன். ஒரே டைப்பா அமையாம வித்தியாசமான கேரக்டர்களைத் திரைக்கதைகளில் உருவாக்கினா சவாலா ஏற்று நடிக்க நிறைய நடிகைகளும் தேவைப்படுவாங்க...

மீனா: அது உண்மைதான். ஆனா, கெடைக்கிற ரோல்கள்ல நாம எப்படி நடிக்கிறோம்ங்கிறதை வெச்சுத்தானே நல்ல ஹெவி ரோல்களுக்கும் நம்மைக் கூப்பிடுவாங்க... அதனால எதைச் செய்தாலும் நம்மோட முழுத் திறமையையும் பயன்படுத்திச் சிறப்பாச் செய்யணும். அலட்சியமா இருந்திடவே கூடாது.

அஞ்சு: நீ சொல்றது ரொம்ப கரெக்ட். நாம ரொம்ப நாளைக்கப்புறம் சந்திச்சுக்கிறோம். பேசிட்டே இருந்தா எப்படி? வா... ஏதாவது ஸ்வீட் சாப்பிடலாம்.

மீனா: சாப்பிடலாம்; ஆனா அம்மாகிட்டே மட்டும் சொல்லிடாதே! டயட் கெட்டுப் போச்சுன்னு படுத்தி எடுத்துடுவாங்க!

(இருவரும் சிரித்துக்கொண்டே டைனிங் ரூம் பக்கம் போகிறார்கள்)

தொகுப்பு: **நிலா ராஜா.**

வண்ணப்படம்: **யோகா.**

"சாந்தினியம்மையைக் கொண்டு போயி..."

கொச்சு வேலாயுதம் நெற்றியில் அடித்துக் கொண்டான்.

அச்சுதன் அவனை உலுக்கி நிமிர்த்தினான்.

"கிரெக்டாகச் சொல். யார் வந்தார்கள்? எப்போது வந்தார்கள்? எங்கே அவர்கள்?"

"ரெண்டு தடியன்மார் வந்திருன்னு. காலிங் பெல் அடிச்ச சப்தம் கேட்டப்போள் ஞான் வாசல் தொறன்னு... அதிலொருவன் பெட்டன்னு எண்ட முகத்திலடிச்சுத் தள்ளி... தாழையிட்டு. எனிக்கு போதம் தெளிஞ்சப்போள் சாந்தினியம்மையைக் காணானில்லா... இத்தர மாத்திரமே எனிக்கு அறியுன்னு சாரே..."

அச்சுதன் நெருப்பை மிதித்தவன் போல் பதறினான்.

இருக்க மாட்டாள் என்று அதிநிச்சயமாய்த் தெரிந்திருந்தும் உள்ளறைக்குள் ஓடிச் சாந்தினியைத் தேடினான். ஏமாந்தான்.

கர்னல் அருள்தாஸின் குரல் ஹாலிலிருந்து எழும்பியது.

"அச்சுதன் அவர்கள் இரண்டு பேரும் என்ன ஆனார்கள் பார்..."

அச்சுதன் பரபரப்பாக அடுத்த அறைக் கதவைத் திறந்தான்.

லக்ஷ்மிரூபா அறை மூலையில் மயக்கமாகக் கிடந்தாள். அதற்கடுத்த அறையில் நுழைந்த போது, அங்கே நாற்காலியில் குருசிவகுமார் சரிந்து கிடந்தார். அவரும் மயக்கத்தின் ஆழத்தில் இருந்தார் என்பது பார்த்ததும் புலனானது.

"வந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்குச் சாந்தினி மட்டும்தான் தேவைப்பட்டிருக்கிறாள், அச்சுதன்."

அச்சுதன் உலர்ந்த விழிகளால் அவரை வெறித்தான்.

"சாந்தினியை யார் கடத்தியிருப்பார்கள் கர்னல்?"

"நாம் வாங்கி வந்திருக்கும் லிஸ்ட்டில்



இருப்பவர்களின் பெயர்களின் பின்னே ஏதோ ரகசியச் செய்தி இருக்கலாம், அச்சுதன். அதை நாம் புரிந்து கொண்டால், சாந்தினியின் கடத்தல் பற்றிக் கூட அதிக விவரங்கள் கிடைக்கலாம்.''

''சாந்தினியை எங்கே எடுத்துப் போயிருப்பார்கள், கர்னல்?''

''அச்சுதன் உன் பதற்றம் எனக்குப் புரிகிறது. ஆனால் பதற்றத்தில் புத்தி வேலை செய்யாது. கொச்சு வேலாயுதத்திடம் இன்னும் தெளிவாக விசாரிப்போம். வா.''

அச்சுதன் நம்பிக்கையில்லாமல் அவர் பின்னே நகர்ந்தான்.

சாந்தினிக்கு விழிப்பு வந்த போது, உயரத்திலிருந்த ஜன்னல் கம்பிகளின் நிழலை எதிர்ச் சுவரில் சூரியன் அச்சடித்திருந்தான். மயக்க நிலையின் முகட்டிலிருந்து சரேலென விழிப்பு நிலைக்குள் விழுந்த போது, சாந்தினி பதறி எழுந்தாள்.

அவள் படுத்திருந்த மெத்தையின் உறை அங்கங்கே வெளுத்திருந்தது. மொரமொரப்பான சிமெண்ட் தரை சில்லென்றிருந்தது. வெகு உயரத்தில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை நடுவிலிருந்து இருபுறமும் சரிந்து இறங்கியிருந்தது.

சிறைச் சாலைக் கதவு போல் இருந்த பெரிய இரும்புக் கதவு, சுவர்கள் வலுவாய்த் தென்பட்டன.

சுவரில் ஒரு நிழல் அசைந்ததும் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

மணிமாறன் குளித்து உடைமாற்றி உற்சாகமாக நின்றிருந்தான். அவன் புகைப்படத்தை அச்சுதன் காட்டியிருந்ததால் அவளுக்கு அடையாளம் புரிந்தது. காழ்ப்பும், கசப்பும் மனத்தில் மிதந்து மேலேறின. இவன்தானே அமீர் ஜவஹரின் உயிரைக் குடித்தவன்?

''சாந்தினி... உன் அப்பாவையும் அம்மாவையும் கொன்று தீர்த்தவர்கள் தான் உன் அண்ணனையும் பலி வாங்கி விட்டார்கள் என்பது உனக்குத் தெரியுமா?''

''தெரியும்...'' சாந்தினி போர்வையை உதறி விட்டுத் தரையில் எழுந்து நின்றாள்.

''தெரிந்துமா அந்த இந்தியத் துரோகிகளுடன் சேர்ந்து கொண்டு சந்தோஷப்படுகிறாய்?''

''என் மனிதர்களை உண்மையில் கொன்றவர்கள் யாரென்று எனக்குத் தெரியும், மணிமாறன்.''

''என் பெயர் உனக்குத் தெரிந்திருக்கிறது!'' மணிமாறன் ஆச்சரியப்பட்டான். கோடவுனில் அடுக்கியிருந்த கள்ளிப் பெட்டிகளில் ஒன்றை இழுத்துப் போட்டு உட்கார்ந்தான். ''கர்னல் அருள்தாஸ் குள்ளநரியை விட மோசமானவர் சாந்தினி. உன்



கட்சி மாறிய ஒற்றர்களைத் தூண்டிய காரணங்கள் என்னென்ன என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். எதிர்காலத்தில் அந்தக் காரணங்கள் குறுக்கிட இயலாத வண்ணம் திட்டமிடுவது ஒற்றர் இயக்கத்தின் மிக அத்தியாவசியமான வேலைகளில் ஒன்றாகும்.

— கே. பி. மாத்யூஸ்.

மூலம் காரியமெல்லாம் முடித்துக்கொண்டதும் உன்னையே கழுவிலேற்றி விடக் கூடியவர்.''

''பேசாதே...'' என்றாள் சாந்தினி. ''கர்னலைப் பற்றிப் பேச உனக்கு என்ன அருகதை இருக்கிறது? சொந்த நாட்டுக்கு எதிராகத் துரோகம் செய்பவன் தானே நீ?''

''நீ? உன் சொந்த நாடு எது? உன் அண்ணன்? அவனுடைய சொந்த நாடு எது? நீங்கள் இருவரும் பாகிஸ்தானின் பணத்தில் வளர்ந்தவர்கள். அவர்கள் அனுப்பி வைத்தார்கள். இங்கு வந்து மனம் மாறியிருக்கிறீர்கள். என்ன காரணம்?''

''உண்மைகள் தெரிந்து விட்டதுதான் காரணம்.''

''என்ன உண்மைகளைத் தெரிந்து கொண்டாய்?''

''அதை உன்னிடம் சொல்ல வேண்டிய அவசியமில்லை.''

மணிமாறன் திடீரென எழுந்தான். ஒரே எட்டில் சாந்தினியை அடைந்தான். அவள் இடது கையைப் பற்றித் தண்டவாளத்தை நகர்த்தும் விசையை இழுப்பது போல் இழுத்து முறுக்கி அவள் முதுகில் வைத்தான். சாந்தினி வில் போல் வளைந்தாள். வலியின் வேதனை அவள் அழகான முகத்தில் கோடுகளை இழுத்தது.

''அமீர் ஜவஹர் திடீரென்று கட்சி மாற என்ன காரணம்?''

''சொல்ல முடியா ஆ ஆ...'' சாந்தினி வலியில் அலறினாள்.

''எங்கள் குழுவிலேயே ரொம்பச் சாதுவானவன் நான்தான் சாந்தினி. அமீரின்

அஞ்சனா மைக்கேல்ராஜ்

மனம் மாறியதற்கான காரணம் தெரிய வேண்டும். இன்னும் என்னென்ன ரகசியங்களை நீங்கள் இந்தியாவிற்குத் தானமளித்தீர்கள் என்று தெரிய வேண்டும் என்று பாகிஸ்தான் ராணுவத்தினர் காத்திருக்கிறார்கள். நீ என்னிடம் சித்திரவதையின்றிச் சொல்கிறாயா? இல்லை அவர்களிடம் சிக்க விரும்புகிறாயா?''

''உன் பயமுறுத்தல் என்னை ஒன்றும் பண்ணாது.''

''அவசியமென்றால் உன்னைத் தீர்த்துக்கட்டச் சொல்லி எனக்கு உத்தரவு, சாந்தினி...''

''என் அண்ணனை இரக்கமில்லாமல் கொன்றவன்தானே நீ? அதே கைகளால் என்னையும் கொன்று போடு. நான் கவலைப்படவில்லை.''

மணிமாறன் முறுக்கிய அவள் கையை விடுவித்தான். ''அவ்வளவு சுலபத்தில் நான் தோல்வியை ஒப்புக்கொள்வதில்லை, சாந்தினி...'' திரும்பினான். ''ஹக்கிம்!'' என்று குரல் கொடுத்தான்.

இரும்புக் கதவைச் சற்றே திறந்து ஹக்கிம் நுழைந்தான்.

''டாக்டர் எப்போது வருகிறார், ஹக்கிம்?''

''இன்னும் பத்து நிமிடங்களில்...'' என்றான் ஹக்கிம், வேதனையுடன் தன் கையைத் தடவிக் கொண்டு நிற்கும் சாந்தினியை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே.

''லிஸ்ட் எப்போது கிடைக்கும்?''

''இன்னும் ஒரு மணி நேரத்தில்.''

''டாக்டர் வரும் வரை நீ வாசலிலேயே காத்திரு.''

''சரி'' என்றான் ஹக்கிம், வெளியேறி, கதவைச் சாத்தி.

''லீவில் போயிருப்பவர்களின் பட்டியலைப் பார்த்ததில் உனக்கு என்ன புரிகிறது, அச்சுதன்?''

''உண்மையைச் சொல்லட்டுமா, கர்னல்?''

''சொல்.''

''எனக்கு எதுவுமே தெளிவாகப் புரியவில்லை.''

''காரணம் இருக்கிறது'' என்றார் கர்னல் அவன் குழப்பத்தை ரசித்துக் கொண்டே. ''நீ சர்க்கார் உத்தியோகம் பார்ப்பவன். சாதாரண நாட்களில் ஆபீஸில் மேஜைக்கு வரும் ஃபைல்களை மேய்ந்து கொண்டிருப்பவன், ராணுவப் படையில் இருப்பவர்களைப் பற்றி உனக்கு அதிகம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் லிஸ்ட் மணிமாறனுக்கு எப்படி உபயோகப்படக்கூடும் என்றாவது யோசித்துப் பார்த்தாயா?''

''எனக்கு ஒரே ஒரு அர்த்தம்தான் கிடைக்கிறது, கர்னல்.''

''சொல்.''

''மணிமாறன், லக்ஷ்மிரூபாவின் மூலம் அந்தத் துப்பாக்கியைப் பாகிஸ்தானிற்குள் அனுப்ப முடியாமல் நாம் தடுத்து விட்டோம். அவன் பாகிஸ்தானிலிருந்து வெகுவாக விலகி இப்போது தென்னிந்தியாவுக்கு வந்து விட்டான். ஆனால் துப்பாக்கியோ பாகிஸ்தானிற்கு அனுப்பப்பட வேண்டும். எல்லைப் பகுதியில் இருப்பவர்களால் மட்டுமே இந்தக் காரியத்தைச் செய்ய முடியும். எல்லைக் காவல் வேலையிலிருக்கும் ஆட்கள் யாராவது தென்னிந்தியாவிற்கு வந்திருக்கிறார்களா என்று தெரிந்து கொள்ள வேண்டியிருந்திருக்கலாம்.''

''மிகச் சரியாகச் சொல்லி விட்டாய்.'' கர்னல் அவன் தோளில் 'பலே' என்பது போல் தட்டிக் கொடுத்தார். ''லிஸ்ட்டை ஆராய்ந்ததில் இரண்டே இரண்டு பெயர்கள் தான் நாம் கவனிக்க வேண்டியவை; கேப்டன் ராஜ்குமார் — கன்யாகுமரிக்கு வந்திருக்கிறான். ஸோல்ஜர் பரத் நாயக் — ஹைதராபாத்துக்கு வந்திருக்கிறான்.''

''இந்த இருவரில் ஒருவரைத்தான் மணிமாறன் சந்திக்கத் திட்டமிடுவான் கர்னல்...''

''இரண்டு பேரில் ராஜ்குமாரை மறந்து விடலாம். அவனைப் பற்றி எனக்குத் தெரியும். நேர்மையானவன். என் சந்தேகமெல்லாம் பரத் நாயக்கின் மீதுதான்.''

''ஹைதராபாத்திற்குப் போக வேண்டியிருக்குமா கர்னல்?''

''புரிகிறது. சாந்தினி எங்கே இருக்கிறாள் என்று கண்டுபிடிக்கும் வரையில் உனக்கு மனசு எதிலும் செல்லாது.''

''அவளைப் பாதுகாப்பதாகப் பொறுப்பேற்றுக் கொண்டு விட்டு, தொலைத்து விட்டோமே என்று என் மனம் அடித்துக் கொள்கிறது, கர்னல்.''

''கவலைப்படாதே. மணிமாறனுக்கு மெட்ராஸில் யார் உதவுகிறார்கள் என்பதைக் கண்டுபிடித்தால்...''

''எப்படிக் கண்டுபிடிப்பது கர்னல்?''

''குருசிவகுமார் நமக்கு உதவுவான் என்று நினைக்கிறேன். அவனுடைய மகள் லக்ஷ்மிரூபாவை இன்று நாம் ரிலீஸ் செய்கிறோமே...'' கர்னல் சற்றே இடைவெளி கொடுத்து விட்டு ''அச்சுதா!'' என்று கூப்பிட்டு நிறுத்தினார்.

''என்ன கர்னல்?''

''சாந்தினி கடத்தப்பட்டதில் மணிமாறன் கூட சம்பந்தப்பட்டிருக்கலாம் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. நம் கவனத்தைத் திசை திருப்பி விட்டு மணிமாறன் ஹைதராபாத்துக்கு நழுவி விடத் திட்டமிட்டிருக்கலாம்.''

''ஏர்ப்போர்ட்டிலும், ரயில்வே ஸ்டேஷனிலும், பஸ் ஸ்டாண்டிலும் நம் ஆட்கள் கவனமாய் இருப்பார்கள், கர்னல்.''

''பேப்பரைப் பார்க்கவில்லையா நீ? இண்டியன் ஏர்லைன்ஸ் ஊழியர்கள் ஸ்ட்ரைக்கில் இருக்கிறார்கள். விமானங்கள் எல்லாம் ரத்தாகி விட்டன. அவனுக்கு இருக்கும் ஒரே வழி ரயில்தான். சென்ட்ரல் ஸ்டேஷனில் கண்காணிப்பதை மும்முரமாக்கினால் போதும், அச்சுதன்.''

''நானே போகிறேன் கர்னல்...'' அச்சுதன் சுறுசுறுப்பாக எழுந்தான்.

சென்ட்ரல் ரயில் நிலையம்.

அந்த வெள்ளை நிற ஆம்புலன்ஸ் கார் பார்க்கிங் பகுதியில் வந்து நின்றது. அதன் பின்புறக் கதவுகள் திறந்தன. வெள்ளைச் சீருடை அணிந்த இரண்டு ஆண் நர்ஸ்கள் இறங்கினார்கள். உள்ளிருந்து ஒரு ஸ்ட்ரெச்சரை நகர்த்தி இழுத்து இறக்கினார்கள். அதைச் சுமந்து நடக்கத் துவங்கினார்கள்.

ஆம்புலன்ஸின் முன்புறமிருந்து முகமெங்கும் தாடியும் மீசையும் நிரப்பி, தலையில் சர்தார்ஜிகளின் தலைப்பாகை அணிந்து மணிமாறன் இறங்கினான்.

நிஜாமுதீன் எக்ஸ்பிரஸ் ரயிலில் முதல் வகுப்பு டிக்கெட்டுகள் இரண்டை எப்படியோ ஒரு செல்வாக்கு மிக்க டிராவல் ஏஜன்ஸி மூலம் ஏற்பாடு செய்து தந்திருந்தான் ஹக்கிம்.

ஹக்கிம் ஏற்பாடு செய்த டாக்டர், சாந்தினிக்கு உடல்நிலை சரியில்லை என்றும், அத்தியாவசியமான காரணம் கருதி ஹைதராபாத் பயணம் மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் சர்ட்டிபிகேட் தந்திருந்தார். சாந்தினி விழித்து விடாமலிருக்கத் தேவையான இன்ஜெக்ஷனையும் அவரே போட்டிருந்தார்.

''உன் உதவிக்கு மிக்க நன்றி ஹக்கிம்'' என்றான் மணிமாறன் ஆம்புலன்ஸிற்குள் பார்த்து.

''நிச்சயமாக ஹைதராபாத்திற்குத்தான் போக வேண்டும் என்று உனக்குத் தெரியுமா, மணிமாறன்?''

''நீ கொடுத்த பட்டியலில் இருந்து கிடைத்த பெயர்தான் இது, ஹக்கிம்.''

''ஆல் தி பெஸ்ட்'' என்றான் ஹக்கிம்.

மணிமாறன் திரும்பினான்.

படிகளில் ஏறினான்.

எடை பார்க்கும் மெஷின் இருந்த தூணுக்குப் பின்னாலிருந்து வெளிப்பட்டவனைப் பார்த்ததும் அதிர்ந்தான்!

அச்சுதன்!

(தொடரும்)

அடுத்த இதழ் இன்னிசைச் சிறப்பிதழ்

- இசையுலகில் இளைய தலைமுறை:
  ''பிரச்னைகள் இருந்தாலும்
  பிரகாசிக்க முடிகிறது.''
- கவிதையாக ஒரு கலைப்படம்
  — இயக்குனர் அரவிந்தனின் பார்வையில் பரதநாட்டியம்.
- ரேடியோ இசை வகுப்பு:
  பயனுள்ள நேரமா? பரிதாப நிகழ்ச்சியா?
- பக்கபலக் கலைஞர்கள்.
- அலைவரிசைகள் —
  — ம. வே. சிவகுமார் சிறுகதை
- விருது பெறும் விற்பன்னர்கள்.
- ஆடிய ஆட்டம் என்ன...?
  — நகைச்சுவைச் சித்திரம்.
- இந்த வருஷம் என்ன ஸ்பெஷல்?




அஸ்ஸாம் அரசு டிஸ்மிஸ்; தி.மு.க. அரசு?



• நல்ல...

• ...மரபுகள்





• நெஞ்சுறுதி



• டிஸ்மிஸ்

• திறமைக்குச் சோதனை





• சொதப்பல்

• போராடாமல் விட்டாரா?





• இவர் அறிக்கை

• ராதாகிருஷ்ணன், சென்னை — 28.

? கல்கி சாதித் துவேஷ அடிப்படையில் கண்ணை மூடிக் கொண்டு தி. மு. க. வை எதிர்ப்பதாகக் கலைஞரின் குடும்பப் பத்திரிகைகள் குற்றம் சாட்டுகின்றனவே?

! இது ஒன்றும் புதிதில்லை. கலைஞரைப் பாராட்டி எழுதும்போது அதை அப்படியே மறு பிரசுரம் செய்து மகிழ்வார்கள். தவறுகளைச் சுட்டிக் காட்டினால் "சாதித்துவேஷம்" என்பார்கள். தெரிந்த கதைதான். விட்டுத் தள்ளுங்கள்.

• ஆர். வாசுகி, வரதம்பட்டி.

? பி. ஜே. பி. யின் ஆதரவு வாபஸ் பெறப்பட்ட பிறகும் தமக்கு ஆதரவு இருப்பதாகவும் நாடாளுமன்றத்தில் நிரூபிப்பதாகவும் கூறி, பதவியில் ஒட்டிக் கொண்டவரைக் 'கொள்கைக்காகப் பதவியைத் தியாகம் செய்தவர்' என்கிறீரே? சிரிப்புத்தான் வருகிறது!

! இரண்டும் வேறு வேறு விஷயங்கள். மண்டல் அறிக்கை கொள்கையில் விட்டுக் கொடுத்திருந்தால் பி. ஜே. பி. யுடன் வி.பி. சிங் சமாதானமாகப் போயிருக்க முடியும். பி. ஜே. பி. ஆதரவு வாபஸ் என்ற பிரச்னையே இருந்திருக்காது. எனவே கொள்கைக்காகப் பதவியைத் தியாகம் செய்தார் என்பது உண்மையே. இனி இரண்டாவது விஷயம். ஓர் ஆட்சிக்கு ஆதரவு உள்ளதா, இல்லையா என்று தீர்மானிக்க வேண்டியது நாடாளுமன்றம் அல்லது சட்டசபைதானேயொழிய அதற்கு வெளியே அல்ல. ஆளுனர் மாளிகை அல்லது ஜனாதிபதி மாளிகையின் வராந்தாக்களில் தலைகளை எண்ணும் வேலை நடக்கக் கூடாது. இது தவறான ஜனநாயக முறை. எனவேதான் நம்பிக்கை வாக்குக்கோருவதாக வி.பி.சிங் கூறினார். ஜனாதிபதியும் ஒப்புதல் அளித்தார். இவ்விஷயத்தில் ஜனாதிபதியும் முன்னாள் பிரதமரும் நடந்து கொண்ட விதம் பாராட்டுதலுக்கு உரியது. ஒரு நல்ல ஜனநாயக மரபினை உருவாக்கியுள்ளனர்.

• அ. சண்முகசுந்தரம், சிட்லபாக்கம்.

? தி. மு. க. அரசு தவறே செய்திருந்தாலும் ஜனநாயக முறையில் சுட்டிக் காட்டியும் நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்தும் போராடலாமேயொழிய, இதற்காக மாநில அரசை மத்திய அரசு பதவி நீக்கம் செய்வதா? வாழப்பாடியார் கூறியிருக்கிறாரே?

! வாழப்பாடியாரின் பேட்டி கல்கியில் இடம்பெற்றாலும் அது வாழப்பாடியாரின் கருத்துத்தானே தவிர கல்கியின் கருத்து

அல்ல. சட்ட மன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை பலம் பெற்றுள்ள தி.மு.க. அரசு அதற்கு உரிமையுள்ள முழு ஆயுட் காலத்துக்கும் நீடிக்க வேண்டும் என்பதே நம் கருத்து. ஆனால் அது டிஸ்மிஸ் செய்யப்படக்கூடிய அபாயம் சதா இருந்து கொண்டே இருக்கிறது என்பதும் மெய்தான். கலைஞரின் திறமைக்கு முன்னெப்போதையும் விட சோதனை மிகுதி.

*** எஸ். பி. ரவிகணேஷ், கும்பகோணம்.**

? திருச்சியில் விடுதலைப் புலிகளின் வீட்டை வளைத்து அதிரடி நடவடிக்கை எடுத்தது பற்றி?

! 'விடுதலைப் புலிகளின் நடமாட்டமே தமிழகத்தில் இல்லை' என்ற பிரசாரம் உண்மைக்குப் புறம்பானது என்பதற்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டு. தமிழக அரசு உண்மைகளை மறைக்க முயலக் கூடாது. நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும்.

*** பிரபா லிங்கேஷ், மேலகிருஷ்ணன் புதூர்.**

? அஸ்ஸாம் அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டிருப்பது குறித்து?

! அங்கு யு.எல்.எஃப்.ஏ.யின் வன்முறை அதிகரித்ததில் ஜனாதிபதி ஆட்சிக்கு அவசரமும் அவசியமும் ஏற்பட்டிருக்கலாம். மஹாந்தா ஆட்சியின் காலம் முடிந்து தேர்தல் நடத்த வேண்டிய வேளையும் நெருங்கி விட்டது. ஆங்காங்கே நடக்கும் வன்முறைகளைச் சாக்கிட்டுத் தேர்தலை ஒத்திப் போட்டுக் கொண்டு போகாமல் இருந்தால் நல்லது. இல்லையேல் அஸ்ஸாமும் ஒரு பஞ்சாபாகி விடும்.

*** ஆர். ஜெயசந்திரன், தேனேரிப்பட்டி.***

? ஐ. நா. பாதுகாப்பு சபை காலக்கெடு விதித்து, அதன்பின் யுத்தம் என்று அறிவித்துள்ளதே; ஈராக் செவி சாய்க்குமா?

! அத்துடன் நின்றிருந்தால் ஒருவேளை ஈராக் வழிக்கு வந்திருக்கலாம். கூடவே புஷ் பேச்சு வார்த்தைக்கும் அழைப்பு விடுத்துச் சொதப்ப, இப்போது ஈராக் மேலும் அவகாசம் கேட்டு மாய்மாலம் பண்ணுகிறது!

*** எம். தணிகைவேலன், ஆற்காடு.**

? பிரிட்டனில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்துடன் நம் நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தை ஒப்பிடுங்கள், பார்ப்போம்?

! 'மெஜாரிட்டி இல்லை என்றதும் தாட்சர் ராஜினாமா செய்தது போல் வி.பி.சிங்கும் இங்கே ராஜினாமா செய்து கட்சி உடையாமல் காப்பாற்றியிருக்கலாமே' என்று சிலர் தவறாக எண்ணுகிறார்கள். ஆட்சிக்கு மெஜாரிட்டி உள்ளதா என்பதை நிர்ணயிக்க வேண்டியது நாடாளுமன்றமே. கட்சித் தலைவருக்கு மெஜாரிட்டி உள்ளதா என்று நிர்ணயிக்க வேண்டியது நாடாளுமன்றக் கட்சிக் கூட்டமே. இரண்டு விஷயங்களிலும் வி. பி. சிங் சரியாக நடந்து கொண்டார். ஆனால் அவரைச் சந்திக்கத் துணிவில்லாத சுயநலக் கும்பல்தான் தனியே கூட்டம் நடத்திக் கட்சியைப் பிளந்து ஆட்சியையும் கவிழ்த்து விட்டது. தாட்சர் போராடாமல் விட்டுக் கொடுத்து விடவில்லை என்பதும் தேர்தல் நடந்து போதிய மெஜாரிட்டி இல்லை என்பது தெரிய வந்த பிறகுதான் விட்டுக்கொடுத்தார் என்பதும் கவனத்துக்குரியது. ஜனநாயகம் என்பது உரிமையை விட்டு விட்டு ஓடுவதல்ல. உரிமைக்குப் போராடி, தோல்வி கண்டால் அதனைக் கண்ணியத்துடன் ஏற்பதுதான். வென்றவருக்கு ஒத்துழைப்புத் தருவதுதான்.

*** எம். முக்தார் அகமத், பேர்ணாம்பட்டு.**

? 'நடராஜனுக்கும் அ. தி. மு. க. கட்சிக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை; அவருக்கு என் சார்பில் ஏதும் செய்யவோ, பேசவோ அதிகாரமில்லை' என்று ஜெயலலிதா திடீர் அறிக்கை விட்டிருக்கிறாரே?

! ஜெ போகிற போக்கைப் பார்த்தால் நாளை மறந்து போய் "ஜெயலலிதாவுக்கும் எனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை" என்று கூட ஓர் அறிக்கை விட்டாலும் விட்டு விடுவார்!

*** ஏ. உமா சங்கர், குடியாத்தம்.**

? விஜயலட்சுமி பண்டிட் அவர்களிடம் தங்களைக் கவர்ந்த அம்சம்?

! நேரு குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால் அரசியலில் புகுந்து உன்னதமான நிலைகளுக்கு உயர்வது அவருக்குச் சுலபமாக இருந்திருக்கலாம். ஆனால் அந்தப் பதவிகளில் அவர் பிரகாசித்தது அவரது ஆற்றல் காரணமாகத்தான். நேருவின் சகோதரியாக இருந்தும் இந்திராவை விமர்சிக்கத் தயங்காத நெஞ்சுறுதி அவருக்கு இருந்தது.

*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**

ஆர். ஜெயசந்திரன்,
ஆர். இ. வி. தோட்டம்,
தேனேரிப்பட்டி,
அகூர் (அஞ்சல்) 620 015.

வேஷம்

இந்த எட்டு வருஷத்தில் இன்றுதான் அழுதிருக்கிறாள். அப்போது ஜெயஸ்ரீக்கு ரங்கராஜபுரத்தில் வீடு. ஒவ்வொரு கம்பெனியாய் ஏறி இறங்கி, சான்ஸ் தேடிக் கொண்டிருந்த நேரம். சின்னச் சின்ன கம்பெனிகளில் வாய்ப்புக் கிடைத்தாலும் சொல்லும்படியாக ஒன்றும் வாய்க்க வில்லை. பெரிய கம்பெனிகளுக்குப் போய் எப்படிச் சான்ஸ் கேட்பது என்று புரிய வில்லை. அதன் ஆடம்பரமே அவனை மிரட்டிற்று.

அப்போதுதான் சந்தானம் அறிமுகமானான். அவன் இருந்த போர்ஷனுக்குப் பக்கத்தில் ஹவுஸிங் போர்டு வீட்டில் இருந்தான். பாபநாசத்துக்குப் பக்கத்திலிருந்து வந்து ஒரு மெக்கானிகல் ஷாப்பில் வேலையாய் இருந்தான். அவனைத்தான் ஆம்பளைத் துணையாய் அழைத்துக் கொண்டு ஒவ்வொரு கம்பெனியாய் ஏறினான்.

''தம்பி யாரு ஜெயஸ்ரீ?''

''என்னோட கஸின் ப்ரதர் சார்! எனக்கு கால்ஷீட் பாத்துட்டு இருக்கார்.''

''நல்லது. தம்பி மார்ச் பர்ஸ்ட் வீக்லே டு டேஸ் அட்ஜெஸ்ட் பண்ணிக் கொடு போதும். பிற்பாடு செகண்ட் ஷெட்யூல்லே பாத்துக்கலாம்...''

தலையசைத்தான்.

''என்னதுங்க ஒண்ணும் புரியலே?''

''புரியும் சந்தானம். நான் சொல்லித் தரேன். மார்ச் மாதம் அவங்க படஷூட்டிங். ரெண்டு நாள் அவங்க படத்துலே நான் நடிக்கணும். அப்போ வேற படம் கிராஸ் ஆகாதபடிக்குப் பாத்துக்கணும். இப்ப பிரச்னை இல்லை. ரெண்டு மூணு படம். தொடர்ந்து வந்துடுச்சுனா க்ளவரா ஒர்க் பண்ணணும். வரும்படி எங்க ஜாஸ்தியோ அங்க பர்ஸ்ட் கால்ஷீட் கொடுக்கணும். அதே சமயம் அடுத்த படத்தையும் விட்டுடப்படாது. எல்லாம் சொல்லித் தரேன்.''

''நான் ஒர்க் ஷாப் போகணுமே!''

''ப்ரீயா இருக்கப்பக் கூட வா.''

''எதுனா தருவீங்களா?''

''தரேன்.''

''ஒரு தடவை ரஜினி கூடப் பேசணும்.''

''பேசலாம்.''

''உங்களுக்குத் தெரியுமா?''

''கூட குரூப் டான்ஸ் ஆடியிருக்கேன்.''

மோகம்தான். இந்த மோகம்தான் ஆரம்பத்தில் ஆட்டுக் குட்டியாய் அவன் பின்னாடியே அலைய வைத்தது! ஒவ்வொரு கம்பெனியாய்க் கால் வைக்க, அதன் ஆழம் தெளிவாயிற்று! ஆழம் புரிந்து ஆட்களின் முகம் பழக ஆர்வம் பம்பரமாய் ஆட வைத்தது! அவமானமும் அலட்சியமும் அலைக்கழிப்பும் சுலபமாய்ப் பழகிப் போயிற்று. மெக்கானிக் ஷாப் வேலையை விட்டு விட்டு. அவனுடன் மிஷினாய்ச் சுற்றினான். இரண்டு கம்பெனி ஜெயஸ்ரீயைக் கதாநாயகியாகப் போட்டது. கையில் கொஞ்சம் பணம் கூட. ரங்கராஜபுரம் வீட்டைக் காலி பண்ணி விட்டு சாலிக்கிராமத்தில் வாடகை வீடு. இரண்டு பெட்ரூம், ஹால், ரிசப்ஷன் அறை என்று. சௌகர்யமாக இருக்க முடிந்தது. கூடவே சந்தானமும் இருந்தான். நடையாய் நடந்து. எப்படியோ நான்கு கம்பெனி வாய்ப்புகளைப் பிடித்து விட்டான். முதல் பட ரிலீஸில் ஜெயஸ்ரீக்கு நல்ல பேர். பளிரிடுகிற முகமும் உடல் வனப்பும் அவளைப் பற்றியே பேச வைத்தது. மூன்று படம் நன்றாகப் போக, நான்காவது படம் தேங்கிப் போயிற்று! ரிலீஸ் ஆகவே இல்லை. ஒரு வருஷம் படமே இல்லாது ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க வேண்டியதாயிற்று!

''**ஜெ**யா டாக்டரைப் பார்க்கணும் னேயே...''

''வேண்டாம்.''

''எதுனா மாத்திரை வாங்கியாந்து தரட்டுமா?''

''வேண்டாம்.''

''வேண்டாம் வேண்டாம்னா?''

''பெத்துக்கப் போறேன் சந்தானம். பாவம் எதுக்கு வயித்துலே கொல்லுவானேன்? பேசாம எனக்குத் தாலி கட்டிடேன். வெளியிலே தெரிய வேண்டாம். நமக்கு மட்டும் ரகசியம். சாமி முன்னாடி பண்ணிப் போம்.''

''எல்லாம் சரிதான். அது மட்டும் வேணாம். இமேஜ் போயிடும். எத்தனை திறமையான நடிகைன்னாலும் கலியாணம் ஆனவன்னா நம்மூர்ல ஒத்துக்க மாட்டாங்க. நோவாம மாத்திரை போட்டுக்க. எல்லாம் சரியாகி விடும்.

''முடியாது. ஆறு மாசம் சந்தானம்.''

''சனியனே! ஏன் முன்னமே சொல்லலே? வெளியிலே தெரிஞ்சா அசிங்கம். அப்புறம்

பாரதிபாலன்



அவ்வளவுதான். இப்பவே சோத்துக்கு லாட்டரி. வீட்டு வாடகை பாக்கி இருக்கு. ஏகப்பட்ட கடன் வேற! எதுனா பாம் வந்தாத்தான் தலை தப்பும்!''

''நம்பிக்கை இருக்கு சந்தானம்.''

''அதுலதான் ஓடுது.''

''ஆந்திராவுக்குப் பக்கம் வலுசலூர். சுற்றிலும் காடு மாதிரி இருண்டு கிடக்கும். ஜில்லென்று காற்றும் மர அசைவுமாய் அமைதியான ஊர். யார் முகமும் தெரியாத ஊர். யாரும் மடக்கி எதுவும் கேட்க மாட்டார்கள். எதுனா எழுதி ஆணி வேரை ஆட்ட மாட்டார்கள். ஜெயபூரியை அங்குதான் பிரசவத்திற்குச் சேர்த்தான்.

''லேடீஸ் யாரும் வரலே?''

''ம்ஹூம்.''

''நீங்க யாரு?''

''அவ ஹஸ்பெண்ட்.''

''முடிஞ்ச மட்டும் பண்றேன். இங்கே வசதி ரொம்பக் கம்மிதான்! நான் டாக்டர் இல்லை. நர்ஸ்தான். இதுவரை பத்து இருபது கேஸ் பார்த்திருக்கேன். எல்லாம் நல்லபடியாகத்தான் முடிஞ்சிருக்கு. பணம் முழுசையும் முன்னாடியே கட்டிடணும்.''

''சரிங்க...''

சின்ன அறைதான். ஐந்தடிக்கு ஆறடியான அறை! நல்ல வசதி என்று சொல்ல முடியாது! ஜெயபூரிக்கு கவுன் மாட்டிப் படுக்க வைத்தார்கள். ஏதோ கசாயம் கொடுத்தார்கள். 'வலிக்கிறது... வலிக்கிறது' என்று துடியாய்த் துடித்தாள். சந்தானம் தலைக்குப் பக்கத்தில் ஸ்டூல் போட்டு உட்கார்ந்து கொண்டு, மெல்ல அவளின் தலையைக் கோதி விட்டான்.

''யாருக்குப் பயந்துட்டு வந்து இப்படி இருக்கோம்?''

''ப்சு.''

''சொல்லு சந்தானம். செத்தாலும் நாதியில்லை!''

அவன் அவள் வாயை மூடினான்.

''இதுலே என்ன தப்புப்பா! நடிகைங்க குழந்தையே பெத்துக்கப்படாதா? குழந்தை



சிதம்பரம் ஜெயராமன், ஜி. ராமநாதன், விஸ்வநாதன் — ராமமூர்த்தி இந்நால்வரும் இசையமைத்த படம் காவேரி. சித்தர் பாடல்களுக்குச் சிதம்பரம் ஜெயராமனும், கர்நாடக இசைப் பாடல்களுக்கு ஜி. ராமநாதனும், காதல் பாடல்களுக்கு விஸ்வநாதன் — ராமமூர்த்தியும் இசையமைத்திருந்தார்கள். ஒரு தமிழ்ப் படத்திற்கு நான்கு இசையமைப்பாளர்கள் இசையமைத்த படம் இதுவே!

—— டி. எஸ். சீதாராமன்.

****

பெத்தவங்க யாரும் வேலைக்குப் போகப்படாதுன்னு கவர்ன்மெண்ட் சட்டமா இருக்கு? பின்ன ஏன் நம்மளை மட்டும் போட்டு வளைக்குதுங்க... யம்மா... வலிக்குதே! எங்க செத்தாலு'' செத்திடுவேனோன்னு வருது..''

''வுடு ஜெயா. வேஷம் போட்டாச்சு.''

அதிகாலை மூன்று மணியிருக்கும். வில்லென்று ஒரு புதுக் குரல்! அத்தனை வலியும் இறங்க மகா இதமாயிற்று! பெண் தான். அப்படியே அச்சாய் ஜெயஸ்ரீ மாதிரி! கருகருவென்று முடி. மூக்கும் வாயும், விரல் நுனியும், பாதமும் என்று ரத்தச் சிவப்பாய் இருந்தது. ஒரு மாதம் அங்கேயே இருந்தாயிற்று!

அப்போதுதான் ஜெயஸ்ரீ நடித்து ரிலீஸ் ஆகாத படம் ஒன்று ரிலீஸ் ஆயிற்று! 'யப்பா நடிப்பு என்றால் அப்படி ஒரு நடிப்பு! படம் எல்லா சென்டர்களிலும் நன்றாகப் போயிற்று! பெரிய பேனர்கள் எல்லாம் ஜெயஸ்ரீயிடம் கால்ஷீட் கேட்டன. ஜெயஸ்ரீ பற்றி அரக்கப் பரக்கப் பத்திரிகைகள் செய்திகள் போட ஆளாய்ப் பறந்தன!

ஸோபாவில் குலுங்கி அழுகிற சந்தானத்தை மெல்லத் தன் பக்கம் திருப்பினாள். முகம் சிவந்து தலை கலைந்து போய் வெளிறிப் போய்த் தெரிந்தான்.

''சரி! பண்ணிடலாம் சந்தானம். உன் விருப்பம் போலவே பண்ணிடலாம். அந்தக் குழந்தை இருந்தா இமேஜ் போயிடும். படவாய்ப்புக்கள் நழுவிடும் அதானே? குழந்தையை எங்கனா கண்காணாத இடத்துலே வளர்க்கலாம்.''

''முடியாது ஜெயா! எப்படின்னா வெளியிலே தெரிஞ்சிடும். இப்ப பிஸியான ஹீரோயின் நீதான். எல்லோர் பார்வையும் உன் மேலே பட்டுட்டு இருக்கும். நீ இன்னும் பாப்புலர் ஆகலாம். இப்போதைக்கு இது வேண்டாம். ஒருத்தன் ஒரு மாதிரியா எழுதிட்டா எல்லாம் போயிடும்..''

''வேண்டாம்னா?''

''எதுனா அனாதை ஆசிரமத்துலே விட்டுடலாம். ஆனா அதுலேயும் சிக்கல் தான். ஆயிரம் கேள்வி வரும். யார் கொண்டு போய் விடுறதுன்னு சிக்கல் வரும். சிம்பிளா ஒரே ஒரு வழி ராத்திரியிலே ஏதாவது ஓர் அனாதை இல்லத்தின் வாசல்லே இறக்கி விட்டுடலாம். இது சினிமா பாணி ஐடியாவாகக் கூடப்படும். எனக்கு வேற தெரியாது. பிற்பாடு நாம போய் அங்கே பாத்துக்கவா முடியாது? சொல்லு ஜெயா செய்திடலாமா?''


''..........''

''அதுதான் யாருக்கும் தப்பு இல்லாது போயிடும். கல் மனக்காரன்னு நினைக்காதே! எனக்கும் அடிச்சு மோதத்தான் செய்யுது. குழந்தை வேணும்னா பிற்பாடு பகவான் கொடுப்பான். உனக்கு இந்தச் சான்ஸ் வராது ஜெயா! இப்ப ஒத்திட்டிருக்கிறது எல்லாமே பெரிய கம்பெனிங்க...''

''உங்க இஷ்டம்.''

''கோவமில்லையே!''

வாசகர்களே மறந்து விடாதீர்கள்!



திருநாவலூர்த் தொகுதி வாசகர்களே, உங்கள் தொகுதி எம். எல். ஏவான ஏ. வி. பாலசுப்பிரமணியன் என்னென்ன செய்திருக்கிறார் என்பதை ஆய்வு செய்ய வரப்போகிறோம். அவர் பற்றிய குறை நிறைகளை உடனடியாக எழுதியனுப்புங்கள்.

முடிவு தேதி: 22. 12. 90

— ஆசிரியர்.

சினிமா பாஷை

1. "பி அன் சி ஓர்க் அவுட் ஆனாத்தான் பேனர் நிக்கும்."	கிராமத்திலும் சின்ன நகரத்திலும் படம் ஓடினால் தான் அந்தப் படக் கம்பெனி நிலைத்து நிற்கும்.
2. "எம். ஆர். கையைக் கடிச்சிடுச்சே!"	மதுரை, ராமநாதபுரம் ஏரியாவில் படம் சரியாக ஓடவில்லை.
3. "லுக் சரியில்லை!"	(நட்சத்திரத் தேர்வின் போது) நடிகை சரியில்லை என்று கூறுவது.
4. "அந்தப் படம் தப்புப்பண்ணாது."	படம் ஓடும்.
5. "அம்மா வந்தாச்சு."	ஸ்ரீதேவி, ராதிகா, அமலா, போன்ற பிரபல நடிகைகள் வரும் போது மட்டும் கூறுவது.
6. "அது சரியான உப்புமா கம்பெனிப்பா!"	பணம் இல்லாமல் படம் ஆரம்பித்துள்ள நிறுவனம்.
7. "படம் 'தூள்' பண்ணிடும்."	எல்லா சென்டர்களிலும் நன்றாக ஓடும்.
8. "ஃபிகர் டாப் டக்கர்."	எல்லா ஹீரோக்களுக்கும் பொருந்தி வருகிற நடிகை.
9. "அது 'சென்டர்' பிஃகர் ஆச்சே!"	குருப் டான்ஸ் ஆடுபவர்களில் அழகானவள்.
10. "டிங்கி வருதுய்யா!"	டான்ஸ் மாஸ்டர் (பெண்) வருகிறார்.
11. "சொதப்பிட்டான்."	சரியாகச் செய்யவில்லை.

— எஸ். பாலு

"இருந்து என்னாவப் போவுது?"

"பண்ணிடலாம் ஜெயா. எந்தக் கெடுதலும் இல்லாம நல்லபடியாப் பண்ணிடலாம். பகவானைக் கும்பிட்டு... அடையார்ல ஒரு ஹோம்! அங்கே போய் விட்டுட்டு வந்திடுறேன்."

"ஜெயஸ்ரீ ரெடியா?"

"ரெடி சார்."

"வாம்மா. ஒருமுறை ரிகர்சல் பாத்திடலாம். சாக்பீஸ் மார்க்கிட்டே நின்னு டைலாக் சொல்லு. தப்பு இல்லாது பண்ணிப் பாத்திடு. அடுத்து டேக்தான்."

"லைட்ஸ்."

"தோ! முன்னாடி நவுந்துக்கிறேன் சார்."

"நடராஜ் குழந்தையைக் கொண்டு வா..."

"வர்றேன் சார்."

"எங்கப்பா புடிச்சே?"

"ஒரே பேஜாராப் பூடுச்சு சார். வழக்கமான பார்ட்டிங்க குழந்தை சாவுர மாதிரின்னா ஆக்ட் கொடுக்காதுன்னுடுச்சு! தேடிட்டோம். ஒண்ணும் ஒத்து வரலை! டெல்லி பாபு ஒரு ட்ரிக்பண்ணினான் சார். நேரா ஜி.எச். போனோம். போஸ்ட்மார்ட்டம் ஆள் ஒருத்தனைப் பிடிச்சோம். பார்ட்டிக்கு நூறு வெட்டினவுடனே ஒண்ணு தூக்கிக்கொடுத்துட்டான். செத்த குழந்தைதான். அனாதையாம். யாரும் வந்து வாங்கிட்டுப் போவலை. சவினிங் திரும்பக் கொடுத்திடலாம். அவன் என்னமும் பண்ணிக்கட்டும். வெளியிலே தெரிஞ்சா ரிஸ்க்தான்."

"சரி போ. ஜெயஸ்ரீ ரெடியா?"

முழுசுமாய்க் கேட்ட ஜெயஸ்ரீயின் உடல் பதறிற்று. பரபரப்பாய் அந்தக் குழந்தையின் முகத்தை உற்றுப் பார்த்தாள். ஒரு ஜாடையில் தன்னோடது மாதிரியும் மறு ஜாடையில் வேறு யாரோடது போலவும் தெரிந்தது. மெல்லக் கால்கள் தளர்ந்து கண்களில் இருட்டு விழ அவளுக்கு முழு வசனமும் சுத்தமாய் மறந்து போயிற்று!



வட்டமேஜை

தவறுகளுக்கு அரசுதான் பொறுப்பு!

* ஒரு பொறுப்பான எதிர்க் கட்சியாகச் செயல்பட்டு, தமிழக வளர்ச்சிக்குப் பாடுபடாமல், கலைஞருக்கும், தி. மு. கழகத்திற்கும் தம்மை ஓர் அரசியல் எதிரியாகக் கருதிக்கொண்டு செயல்பட்டு வருகிற வாழப்பாடி ராமமூர்த்தியிடம், கலைஞர் அரசு நீடிக்கப்பட வேண்டும் என்கிற வாழ்த்தையா எதிர்பார்க்க முடியும்?

பெங்களூர். ப. மூர்த்தி.

* ''விளம்பரத்துக்காக நான் எதனையும் செய்வதில்லை'' என்ற வாழப்பாடியின் பதில், என்னை வெகு நேரம் மனம் விட்டுச் சிரிக்க வைத்து விட்டது!

அரசண்ட நல்லூர். ஆர். விஜி.

* தாங்கள் தலையங்கத்தில் எழுதியது போல், நம் இந்திய நாட்டின் சிக்கலான பிரச்னைகளை அறிஞர்களால்தான் தீர்க்க முடியும்.

முசிறி. எம். ஷாஜிதாபேகம்.

* நாட்டு நலன் கருதி தேசிய ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற தங்கள் தலையங்க யோசனை அருமையான யோசனைதான். ஆனால் அதிலும் அரசியல் புகாது என்பதற்கு என்ன உத்திரவாதம்? அறிஞர்கள் எல்லோருக்கும் உரிய மரியாதை கிடைக்காமையால் நாளே அவர்கள் மேலைநாடுகளுக்குச் சென்று விடுகிறார்கள்.

சென்னை — 92. கி. ராஜகோபால்.

* தேச பக்திக்கு அட்டைப் படக் கட்டுரை, தெய்வ பக்திக்கு வண்ணப் படத்துடன் வெளியான திருவண்ணாமலை பற்றிய கட்டுரை.

அரவக்குறிச்சிப்பட்டி. எம். அசோக்ராஜா.

* நமது கடற்படையின் செயல் திறனை விளக்கிய கவர் ஸ்டோரி செய்திகள் பெருமிதம் கொள்ள வைத்தன.

கோவைபட்டம். கே. ஆர். தேவேந்திரன்.

* ''ஸீஹேரியர்'', ''சேத்தக்'', ''ஸீகிங்'' இந்த மூன்று வகைப் போர் விமானங்களையும் மிக எளிதாகப் புரியவைத்தது ''இந்திய கடற்படையின் ஹீரோ'' என்ற கட்டுரை.

கோயமுத்தூர். வி. பிபா.

* கால இடைவெளிகள் மனித மனங்களை மாற்றும் என்பதை 'மறுபடியும் பூக்கும்' என்ற கவிதைமான சிறுகதை மூலம் நிரூபித்து விட்டார் சுப்ரபாரதிமணியன்.

முத்துப்பேட்டை. தஞ்சைத் தானியன்.

* ''டில்லி பந்த்'' — பந்த்தினால் பொது மக்கள் அடையும் அவலங்களை, நகைச்சுவை உணர்வு மிளிர, அதே சமயத்தில் கருத்தொன்று மனதில் தைக்கும்படியும் எடுத்துக்கூறிய கட்டுரை. ஆசிரியர் ரமாமணி சுந்தருக்குப் பாராட்டுக்கள்.

செம்போனை. வி. சோமுன்.

* தெளிவான நடை, நமது உறவினர் குடும்பத்தில் நிகழ்வது போன்ற யதார்த்தமான உரையாடல்களுடன் சற்றும் தொய்வில்லாமல், சொல்ல வந்த கருத்தை 'புயலுக்குப் பின்னே அமைதி'யில் அற்புதமாகச் சித்திரித்திருந்த உஷா நீப்பாவுக்குப் பாராட்டுக்கள்.

தஞ்சாவூர். சேது. ஆறுமுகம்.

* தேன் நிலவும் அதன் பின்பும் பயனுள்ள ஒரு தொடர். தொடரட்டும்.

நெல்லிக்குப்பம். தமிழ்ப்பரிதி.

* திருவாடானைத் தொகுதி எம். எல். ஏ.வுடன், தாங்கள் சேர்ந்து நடத்திய ''ரவுண்ட் — அப்'' அருமையாக இருந்தது. பொறுமையாகக் கடைசி வரை கூடவே வந்த அந்த தி. கா. எம்.எல்.ஏ. வைப் பாராட்ட வார்த்தையில்லை.

திருச்சி — 3. ரெ. ம. மாறன்.

* திருவாடானைத் தொகுதி பஞ்சாயத்து தலைவர்கள், எதற்கெடுத்தாலும் அதிகாரிகளின் மீது குற்றம் சுமத்துவதை அறிவுபூர்வமாகச் சிந்தித்தால் ஏற்க முடியவில்லை. அதிகாரிகள் அத்தனை பேரும் உத்தமர்கள் என்று நான் வக்காலத்து வாங்கவில்லை. இந்த அதிகாரிகளைக் கண்காணிக்க வேண்டிய அரசு இவற்றை எல்லாம் கண்டுகொள்ளாமல் இருந்தால் என்ன அர்த்தம்? அரசாளும் கட்சியின் ஆசீர்வாதம் இல்லாமல் அதிகாரிகளால் நினைத்தைப் பட்டா போட முடியுமா? சூட்சமக் கயிறு அரசிடம்தான் உள்ளது. தவறுகளுக்கு அரசுதான் பொறுப்பு.

தஞ்சாவூர் — 7. வளர்மதி ஆசைத்தம்பி.

●● சமையல் காஸ் சிலிண்டருக்கு மீட்டர் போட முடியுமா? (25.11.90 கல்கி) முடியும். நான் அத்தகைய மீட்டர் செய்து தரத் தயாராக உள்ளேன். ஆனால் நிறைய மீட்டர்கள் செய்யக் கணிசமான சப்ளை ஆர்டர் தேவை! அப்போது தான் மலிவாகத் தயாரிக்க இயலும்.

254 — A, பிளாக் — 6,
நெய்வேலி — 607 803. பி. அப்புசாமி, எம். இ.

●● நாங்கள் சமையல் காஸ் சிலிண்டருக்கு மீட்டர்கள் தயாரித்து ஏற்கெனவே விற்பனை செய்து வருகிறோம். நாட்டின் மேற்குப் பகுதியில் நல்ல வரவேற்பு. தென்னாட்டில் விநியோகிக்க ஏஜென்ஸி எடுக்க விரும்புவோர் எங்களை அணுகலாம்!

304, வர்த்தமான் பார்க்,
புதிய பம்பாய் — 400 705. இ. எஸ். சிவகுமார், கர்னன் என்டர்பிரைஸஸ்.

●● காஸ் சிலிண்டருக்கு மீட்டர் போடுவது இருக்கட்டும். ரூ. 500/— டெபாசிட் பெற்றுக்கொள்கிறார்களே, முதலில் அதற்கு நியாயமான வட்டி தரச் சொல்லுங்கள்!

திண்டுக்கல் — 3. எம். கோபால்.

9

சிகரங்களை நோக்கி...

தெருவுக்கு ஓடிவந்த திருஞானம் அந்த திரவஜோதியில் கலந்தான்.

கண்களை மூடிக் கொண்டு கையேந்தி யாசித்தான்.

வானம் அவனுக்கு வெள்ளிக் காசுகளை வீசிக் கொண்டேயிருந்தது.

கண்ணிமை கவிழ்ந்தான்; தன்னிலை மறந்தான்.
தாரைகள் தன்மீது விழுகையில் ஒரு தாவர சந்தோஷம் அடைந்தான்.

•

எப்போதுமே ஆறறிவோடு இருப்பது
அவசியமில்லை
மனிதா!
அவ்வப்போது ஓரறிவு, ஈரறிவு
குறைந்துபோ.

புல்லின் புளகம் தெரி!
புழுவின் வலி தெளி!
பறவையின் சுகம் சுகி!
மரங்களின் ஆன்மா அறி!

•

"இந்த மழை நிமிடங்களில் நான் மரம்; ஆடை
கொண்ட மரம்; இங்குமங்கும்
இடம்பெயரும்
மரம்.

இந்த மழையில் மரங்களைப் போலவே நானும் தலைகுளிக்கிறேன்.

மழை கொடுக்கும் பரவசத்தை எனக்குள் பரப்பிக் கொள்கிறேன்.

மனிதன் குளிப்பதற்கு மார்க்கமிருக்கிறது; மனங்கள் குளிப்பதற்கு மார்க்கமிருக்கிறதா?

அதற்கு மழை ஒன்றுதான் மார்க்கம்.

இந்த மழையில் என் உடம்பு குளிக்கிறது; அது எனக்குள் நான் எழுதி வைத்திருக்கும் ஆணவம் என்ற எழுத்துக்களையும் அழிக்கிறது.

மறந்துவிட வேண்டும்; மனிதன் என்ற பதவியைக்
கொஞ்ச நேரமாவது துறந்துவிட வேண்டும்.

தங்களை மனிதர்கள் என்பதிலிருந்து மறக்க முடியாத சில மனிதர்களின் மனநோய்தான் உலகயுத்தம்.

மழையே! ஓர் உதவி செய்.
என்னோடு ஒட்டியிருக்கும் என் பெயரை அழித்துவிடு."

•

ஞானக்கிறுக்கனாய் நனைந்தான்.

தேகம் சில்லிட்டது; ஆனால் அவனுக்கு அது தேவைப்பட்டது.

வீதி விளக்கின் வெளிச்சத்தில்
வெள்ளிச் சிறுமணிகள் விழுவது
தெரிந்தது.

மழை வைக்கும் பந்தியில் தன்னோடு பசியாற
எவரேனும் வருவாரோ
என்று திரும்பித் திரும்பித் திசையளந்தான்.

அங்கங்கே எல்லோரும் தூரமாய் ஒதுங்கி துக்கம்கொண்டாடிக்கொண்டிருந்தார்கள்.

தீரவில்லையா? மழையோடு உங்கள்
தீண்டாமை இன்னும் தீரவில்லையா?

மழை கண்டால் தாவரங்கள்
பதுங்குவதில்லை;
எல்லா மிருகங்களும் ஒதுங்குவதில்லை;
எல்லாப் பறவைகளும் நடுங்குவதில்லை.

ஆனால், எல்லா மனிதர்களும் மழையென்று வந்தால் மறையத்தான் பார்க்கிறார்கள்.

எத்தனை பெரிய அனுபவ நஷ்டம்?

பாவம்! தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னித்துவிடு
மழையே!

அழாதே மழையே! நானிருக்கிறேன்.

பாண்டவர்கள் ஒதுங்கிவிட்டாலும்
பாஞ்சாலியைக்
காக்கவந்த கண்ணன் மாதிரி — மனிதர்கள் நிராகரித்தாலும் மழையே! உன்னை வரவேற்க

வைரமுத்து

நானிருக்கிறேன்.

வா மழையே! வா.

என் கண்ணுக்குள் விழு;

கன்னங்களில் வழி;

உள்ளுக்குள் இறங்கு;
உயிரில் நிரம்பு.

எனக்கு ஒரே ஒரு வருத்தம்...
உன்னை என் சட்டைப் பையில்
சேமிக்க முடியவில்லையே.

மனிதன், உறங்கும்போது மனிதனாயிருக்கிறான்; தன்னை மறக்கும்போது
மனிதனாயிருக்கிறான்.

இதோ! இந்த மழை வேளையில் என்னை
மறக்கிறேன்; மனிதனாகிறேன்.

என் காமம் — கோபம் — ஆணவம் —
வஞ்சகம்
அனைத்தையும் என்னை மறக்கும் வரையில்
மறக்கிறேன்.

ஒதுங்கி நிற்பவர்களே! ஓடி வாருங்கள்.

மழை நிற்கும் வரையிலாவது நாம் மனிதர்களாயிருப்போம்.

வரமாட்டீர்கள்.

இதுவரை இந்த மண்ணில் தோன்றிய
நாலாயிரம் கோடி மனிதர்களும் மழையில்
நனையாமலே மாண்டு போனார்கள்.

அவர்களில் யாருக்காவது சொர்க்கம்
கிடைத்திருக்குமா?

இதோ! இந்த மழை பாடும் ராகத்தை நீங்கள்
எந்த வாத்தியத்தில் வாசிப்பீர்கள்?

மழையெல்லாம் சேர்ந்து ஒரே கதியில்
பாடுகிறதே! மனிதர்களெல்லாம் சேர்ந்து
ஒரே கதியில் பாடியதுண்டா?

●

"மழை ஒரு சங்கீதம் பாடுகிறது!
எல்லோரும்தான் கேட்கிறார்கள்.
சிலர்தான் புரிந்து கொள்கிறார்கள்."

பாவம்! சிரித்துக் கொண்டே
அழுதிருக்கிறான்
ஜிப்ரான்.

ஜிப்ரானின் கண்களால் திருஞானம்
அழுதான்.

நனைந்து கொண்டே நடந்தான்.

அவன் உடம்பில் பட்டு வைரத்துளிகள்
வழிந்து கொண்டேயிருந்தன.

உச்சி மலையிலிருந்து ஊருக்குள் வந்த ஒரு
விசித்திரப் பிராணியென்று வீதி அவனை
வேடிக்கை பார்த்தது.

அவர்களைப் பார்த்து மின்னலைப்
போல்ஒரு
புன்னகை பூத்தான்.

ஆனால், அவர்களோ அவனைப் பார்த்துச்
சிரிக்க முடியாமல் சிரமப்பட்டார்கள்.

●

டீக்கடையில் குளிர் காயவே ஒரு கூட்டம்.

தேநீரில் ஊறிய ரொட்டி அவன்
தொண்டையில
இறங்கிய சூடு எல்லாப் புலன்களுக்கும்
இதமாய் இருந்தது.

●

இதுவரை முணுமுணுத்துக் கொண்டிருந்த
மழை
இப்போது பேசத் தொடங்கியது.

அவ்வப்போது தெறித்த மின்னல், தன்னைக்
கட்டி வைத்திருந்த கயிறுகளை மேகம்
அறுத்தெறிகிறது என்று அறிவித்தது.

தமிழ்த்தாய் வாழ்த்து முடிந்து மேகத்தின்
கவியரங்கம் ஆரம்பமானது.

இடி இடித்தது.

தான் வாசிக்கும் கவிதைகளுக்குத் தானே
கைதட்டிக் கொண்டது மேகம்.

திருஞானம் நடக்க நடக்க மழையின்
அடர்த்தி அதிகரித்தது.

மழை பூமிக்குத் திரை கட்டியது.

அவன் முழுக்க நனைந்து நடந்தான்;
முணுமுணுத்துக்
கொண்டே நடந்தான்.

மேகம் எழுதும் ஒவ்வோர் எழுத்தும் ஒரு
கவிதை என்று சொல்லிக் கொண்டான்.

சமுத்திரத்தைச் சூரியன் மொழி
பெயர்க்கிறது;
அதுதான் மழை என்று மகிழ்ந்து
கொண்டான்.

ஒரு திரவப் போர்வையில் அந்தக் கிராமமே
மூழ்கிப் போன நிலையில் அவன்
முற்றும் நனைந்து
மூங்கில் வீடடைந்தான்.

திகைத்தான்.

ஆயிரங்கண் மாரியம்மாள் அழுதால் எப்படியிருக்கும்...? அப்படியிருந்தது மூங்கில் வீடு.

கூடத்தில் தலை துவட்டி மௌனமாய்
உட்கார்ந்தான்
அந்த மழை ரசிகன்.

அவனே நினைக்கவில்லை.

மூன்றாம் உலக யுத்தமாய் மூண்டது மழை.

அறுந்துவிட்டது மின்சாரம்; அணைந்து
விட்டது விளக்கு.

அதன் பிறகு அந்த ஏழை கிராமத்தில் என்ன

நேர்ந்தது என்பதை அந்த அப்பாவிக் கவிஞன் அறியான்.

பொய்கள் சரசரவென்று சரிவதுபோல் தகர வீடுகள் தகர்ந்தன.

பூமியிலிருந்து மரங்களின் வேர்கள் விடைபெற்றுக் கொண்டன.

ஆடுமாடுகள் அலைபாய்ந்தன.

உயிரின் உச்சத்திலிருந்த தம்பதிகளையும் இடியோசை இடம் மாற்றிப் போட்டது.

சாலைகளைத் தண்ணீரும் இருளும் தின்று விட்டன.

பள்ளத்தாக்குகளின் வெள்ளப் பெருக்கு ஓசை மட்டும் மழையின் உக்கிரத்தை உணர்த்திக் கொண்டேயிருந்தது.

பூகம்பத்தில் வீடுகளைக் காலி செய்யும் மனிதர்களைப் போல் கூடுகளைக் காலி செய்தன பறவைகள்.

அந்த மழையில் எந்தப் பாதிப்பும் இல்லாம லிருந்தது இரவு மட்டும்தான்.

•

திருஞானம் உட்கார்ந்த நிலையிலேயே உறைந்து போயிருந்தான்.

மழை ஓர் அனுபவம்.

இருட்டு ஓர் அனுபவம்.

இருட்டு மனசின் கண்ணாடி.

இருட்டில் விழித்திருங்கள்; வெளிச்சத்தைக் கற்பனை செய்யுங்கள்.

தீபத்தில் ஒளியை மட்டுமே காண்பீர்கள். இருட்டில் நீங்கள் உங்களையே தரிசிப்பீர்கள்.

இருட்டு என்பது வெறுமையல்ல; மனசின் ஒருமை.



வெளிச்சமென்பது ஞானம்; இருட்டு
என்பது
தீபத்தின் தியானம்.

இருட்டுதான் சுயவிமர்சனத்தின் சுகமான சூழல்.

இதோ! இப்போது என் மௌனத் தராசில்
நான் என்னையே நிறுக்கிறேன்.

நான் யார்?

கனவுக்காரனா? கவிதைக்காரனா?

என் தவிப்பு எது?

வாழ்வோடு கலப்பதா? இல்லை,
வாழ்வோடு பிரிவதா?

வெளியே சத்தம்; பெருஞ்சத்தம்.

ஓ! இடியும் மின்னலும் என்னைப்
பற்றித்தான்
விவாதிக்கின்றனவோ?

அவன் சிரித்துக் கொண்டான்.

சிரிப்பதற்காகத் திறந்த உதடு மூடுவதற்குள் மூங்கில் வீடு மொத்தமாய்ச் சரிந்து அவனை மூடிக் கொண்டது.

— இன்னும் செல்வேன்

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.

REGISTERED NO. M. 4392

Registered as Newspaper in Srilanka